

மனம் எங்கே போகிறது?

192.5
கனக
SLPR

பொ. கனகசபாபதி

கலை இலக்கியக்கள வெளியீடு

மனம் எங்கே போகிறது?

உளவியல் கட்டுரைத் தொகுதி

பொ.கனகசபாபதி
ஓய்வுநிலை அதிபர்
மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

வெளியீடு
கலை இலக்கியக்களம்
தெல்லிப்பழை

Name of the book
Manam Enke Pokirathu?
(A Collection of psychological essays)

by
P. Kanagasabapathy
225, John Tabortrial
Scarborough
Ontario
M1 B2 R5
Canada

Date of Publication
January 2008

Publishers
Lyceum of Literary and Aesthetic Studies
Tellippalai

Printers
EC Ways (Pvt) Ltd.
4-1/1, Vanderwert Place,
Dehiwela.

Pages: 85+xii

Price: Rs. 200/-

மகாஜனக் கல்லூரியின்
பொற்கால அதிபர் திருமிகு தெ.து.ஜெயரத்தினம்
அவர்களது பாதங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்...

வெளியீட்டுரை

"You can do no more than you believe you can" என்று சொல்வார்கள். திரு.பொ.கனகசபாபதி அவர்கள் மகாஜனக்கல்லூரி விலங்கியல் ஆசிரியராய் இருந்தபோது, அதிகளவு மாணவர்களை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பத் தன்னால் முடியும் என்று நம்பியவர். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் மகாஜனக் கல்லூரியிலும் அதிபராய் இருந்தபோது அந்த நிறுவனங்களை உன்னத நிலைக்கு உயர்த்த முடியும் என்று நம்பியவர். கனடாவின் புலம்பெயர் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தையும் கல்வித் தரத்தையும் உயர்த்தத் தன்னால் முடியும் என்று இந்த வயதிலும் நம்புகிறார்.

"Charm comes from right thinking and radiant living" என்றும் சொல்லப்படுவதுண்டு. அவருடைய சிரிப்பிலேயே அது தெளிவாகத் தெரியும். அடிப்படையில் விஞ்ஞான ஆசிரியர் என்பதால் அவரது சிந்தனைகள் தர்க்க ரீதியானவை. சரியானவை. அத்துடன் அவரது வாழ்வு மற்றவர்களுக்கு, role model! (இந்த Role model என்ற சொல் பற்றித் தனது கட்டுரைகளில் அவர் நிறையவே சொல்கிறார்).

"Maintain a constant competition within your self" என்று கூறப்படுவதும் உண்டு. அவர் தொடர்ந்து வாசித்து வளர்ந்து கொண்டிருப்பதை எழுத்தின் செம்மை உறுதிப்படுத்துகிறது.

Take whatever comes like a man என்று கூறப்படும் கூற்றுக்கு உதாரணமாகவும் அவரைப் பார்க்கலாம். அவரது தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட பேரிழப்புகள் எதுவும் சமுதாய நன்மை குறித்த அவரது இலக்கில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

அந்தக் காலம் முதல் இந்தக்காலம் வரை அவருள் இருந்து இயல்பாக வெளிவரும் நகைச்சுவை உணர்வு, இத்தொகுதியில் விஞ்ஞான, உளவியல் உண்மைகளோடு கலந்து வரும்போது அற்புதமாக இருக்கிறது.

விஞ்ஞான விடயங்களை வெறும் வரட்சியாகவும் எழுதலாம். வாழ்வு அநுபவங்கள், கலை இலக்கியங்களோடு பொருத்தமாகக் கலந்து செழிப்பாகவும் எழுதலாம். இரண்டாவது வகை எழுத்து அவருடையது.

அவரது 'மாறன் மணிக்கதைகள் பாகம் II' என்ற சிறுவர் கதைத் தொகுதியை முன்னர் கலை இலக்கியக்களம் வெளியிட்டது. இப்போது உளவியல் சம்பந்தப்பட்ட அவரது கட்டுரைகளின் தொகுதி ஒன்றினை வெளியிடக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்துத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் பெருமைகொள்கிறது.

பொது வாசிப்பு நூல்களுக்குள்ளே, வாழ்வுக்குப் பெரிதும் பயன்தரத்தக்க இத்தகைய நூல்களுக்கு உலகெங்கும் பரந்துவாழும் தமிழ்மக்களிடையே பெருத்த வரவேற்பு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கோகிலா மகேந்திரன்
செயலாளர்
தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம்

70, பசல்ஸ் ஒழுங்கை
கொழும்பு 06.
17-01-2008

என்னுரை

1957ஆம் ஆண்டு மேமாதம் 22ம் தேதி நான் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியப்பணி ஏற்று முதல்முதலாக வகுப்பறை ஒன்றினுள் செல்கிறேன். எனக்கும் அவ்வகுப்பினில் உள்ள சில மாணவர்களுக்கு மிடையே வயதில் வித்தியாசமில்லை. மிகவும் சினேகபாவத்துடன் பழகுகிறார்கள். நானும் கற்கிறேன். அவர்களுக்கும் கற்பிக்கிறேன். நான் அங்கே கற்றது ஏராளம். அந்த வகுப்பினில் இருந்தவர்களில் ஆறுபேர்கள் வைத்தியர்களாகி எனக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்தார்கள். அவர்களில் 5 பேர்கள் இங்கிலாந்தில் சேவையாற்றச் சென்றனர். அதில் ஒருவர் மறைந்துவிட்டார். ஒருவர் அமெரிக்காவில் உள்ளார். இவர்கள் அத்தனை பேர்களும் உயரச்செய்த பணிபோல் இன்னொரு பணிவாய்க்குமா என்ற இறுமாப்பு ஏற்படுகிறது. எனது கல்விப்பணி ஆரம்பித்து 50 வருடங்கள் முடிந்துவிட்டன. நான் மகாஜனாவில் மாணவர்களிடமிருந்து பெற்ற பட்டறிவு என்னை ஒரு கல்வியாளனாக உலகுக்குக் காட்டியது. ஊரில் இருந்தபொழுது அவற்றினை நினைத்தே பார்க்கமுடியாத அளவினுக்கு ஆசிரியப்பணி என்னை ஆழ்த்திவிட்டது.

வெளிநாடு வந்ததும் போதிய அவகாசம் கிடைத்தது. நான் பெற்ற அனுபவங்களை, நான் அறிந்துகொண்டவற்றினை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொண்டால் என்ன என எண்ணியபொழுது அதற்கு ஊக்கம் கொடுத்தவர்கள் "தமிழர் தகவல்" சஞ்சிகையின் ஆசிரியர் நண்பர் திருச்செல்வமும், வெற்றிமணி, சிவத்தமிழ் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் ந.க.சு.சிவகுமாரனும், ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் பரமேஸ்வரனுமாவார்கள். இவர்களது சஞ்சிகைகளிலே காலத்துக்குக் காலம் நான் எழுதிய கட்டுரைகளில் 13 கட்டுரைகளுக்கு எனது பெரும் அபிமானத்துக்குரிய மாணவியும், பெரும் புகழ்வாய்ந்த எழுத்தாளரும், கல்வியாளருமாகிய கோகிலா மகேந்திரன் நூல்வடிவு கொடுத்துள்ளார்கள். அவர்கள் கட்டுரைகளை எழுதத் தூண்டினார்கள் என்றால் அவற்றினுக்கு நூல் வடிவம் கொடுக்கவேண்டும் என என்னை வற்புறுத்திச் செய்ய வைத்தவர் கோகிலா அவர்கள். கட்டுரைகளை எழுதியது மாத்திரமே நான் செய்த வேலை. மற்றது அத்தனையையுமே கோகிலா அவர்கள் தனது தலையில் தூக்கிப்போட்டுக்கொண்டு

இத்தனை நேர்த்தியாகச் செய்துள்ளதை நான் எத்தனைமுறை பாராட்டினாலும், பாராட்டமுடியாது.

எனது நூலினிற்கு ஒரு முன்னுரை எழுதித் தரவேண்டும் என நான் வினவியபொழுது என் பழைய மாணவனான சுவிஸ் நாட்டின் விவசாயப் பல்கலைக்கழகத்தின் புத்தம் புதுத்துறையான சூழலியல் தொடர்பாடல் திணைக்களத்தின் முதல் பேராசிரியர் ந.ஸ்ரீஸ்கந்தராசா தனது வேலைப்பழுவிலேயும் மனுமுவந்து தரமான முன்னுரை ஒன்றினை எழுதித் தந்துள்ளார். அதேபோன்று பின் அட்டையை அலங்கரிக்கும் குறிப்பினை எழுதித் தந்தவர் பேர்லின் நகரில் வசிக்கும் எனது இன்னொரு அபிமானமாணவரும் பிரபல நாவலாசிரியருமான கருணாகரமூர்த்தி அவர்கள். இவர்களின் அன்பிற்கு நான் என்றும் அடிமை. இந்த நூலினை அழகுற அச்சேற்றித்தந்த ஈசி வேய்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி.

பொ.கனகசபாபதி

அணிந்துரை

அன்றொரு காலம் அம்பனை யுனிவசிற்றி எனக் குறிப்பிடப்பட்ட அழகிய மகாஜனாக் கல்லூரியில் அடியேன் உயர்தர வகுப்பு மாணவனாக உட்புகுந்தபோது ஆசிரியர்களிடையே அதுவரை நான் கண்டிராத அற்புத இயல்புகளோடு எம்மிடையே வந்தவர் எமது விலங்கியல் ஆசிரியர் திரு கனகசபாபதி அவர்கள். என்மனதில் பதிந்துள்ள அக்கால நினைவுகளிடையே அவரது கம்பீரத் தோற்றம் கனிவான பார்வை ஒருபுறமும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாங்கு சுவையான கதையாக அத்தனை விடயங்களையும் தொடுத்து வழங்கும் இயல்பு என்பன மறுபுறமும் இன்னும் பசுமையாகவே உள்ளன. எனவேதான் முன்னுரை வேண்டி ஆசிரியர் அவர்கள் இந்நூலை எனக்கனுப்பி வைத்தபோது அவரது எழுத்தில் அவருக்கே யுரிய நடையையும் காலத்துக்கேற்ற கருத்துக்களைத் தேவையறிந்து வழங்கியுள்ள முறையையும் கண்டு பெருமிதப் படுகிறேன்.

நானும்கூட ஆசிரியப் பணியில்தான் இறங்குவேனென்றோ நாமெல்லாம் பெயர்வின் விளைவால் பல்வேறு கண்டங்களில் வாழ்வோம், எமது சமூகக் கரிசனைகள் ஒத்தவையாயிருக்கும், அதன்மூலம் இத்தனை ஆண்டுகளின்பின் என் ஆசானின் நூலுக்கு நான் முகவுரை எழுதும் வாய்ப்பு வருமென்றோ அன்றைய போது நினைத்திருக்கவில்லை. கால நீரோட்டத்தில் சோதனைகளும் சவால் களும் எம்மை எதிர்கொள்வது போலவே அரிய புதிய வாய்ப்புக்களும் அற்புதமான மீள் தொடர்புகளும் வந்தடைகின்றன. அந்த நினைப்புத் தரும் புளுகத்தோடு எனது மனதில் பட்ட ஓரிரு சிந்தனைகளை முன்னுரையாய்த் தருகிறேன்.

சில ஆண்டுகளின் முன் அவுஸ்திரலியா விட்டு ஐரோப்பாவில் குடியேறியபோது இங்குள்ள பல்வேறு நாடுகளில் வாழ்க்கை அமைத்துள்ள நம்மவர்களிடையே பழகும் வாய்ப்பும், அவர்களது குடும்பங்களிடையே இளைய தலைமுறையினர் எதிர் கொள்ளும் சிக்கல்களைப் பற்றிப் பேசும் வாய்ப்பும் கிடைத்தன. இரு தலை முறையினருக்குமாக நான் மேற்கொண்ட பல்வேறு செயற்பாடுகளின் போது பத்தாண்டுகட்கு முன்னர் ஆசிரியர் அவர்கள் வெளியிட்ட கட்டுரைத் தொகுதி பயனுள்ளதாக அமைந்தது. இன்றும் அதுபோலவே

புதிய சூழலில் வளரும் இளையோரைப் புரிந்து கொள்ளவும், அவர்களை வழிநடத்தவும் பெற்றோருக்குத் தேவையான உளவியல் சார்ந்த கோட்பாடுகளை ஆசிரியர் ஒன்றுதிரட்டித் தனது அனுபவ வழியாக வந்த அழகான துணுக்குகளோடு சேர்த்துத் தந்திருக்கிறார்.

மாற்றமும் (change) தொடர்ச்சியும் (continuity) முற்றாகவே ஒன்றிலிருந்தொன்று முரண்பட்டவையாகத் தெரிந்தாலும்கூட ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் இரண்டுமே தேவையானவை. இவ்விரண்டுக் கும் இடையிலான முறுகலின் வெளிப்பாடே இறுதியில் கலாச்சாரமாகத் தோற்றமளிக்கிறது. ஒரே நீரோடையில் இரு தடவைகள் கால் வைக்க முடியாதென்று சொன்னார் ஹெரகிளிற்றுஸ் என்ற கிரேக்க அறிஞர். மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது என்பதற்குமப்பால் மாற்றங்களு டன் பயனுள்ள வகையில் எம்மைப் பதித்துக் கொள்வோமானால் நாம் எதிர்கொள்ளும் மாற்றங்களின் மத்தியிலும் எமது இருப்புக்கு அவசியமான தொடர்ச்சியைக் கண்டறிந்து காப்பாற்ற முடியும். அதுவே ஒரு முன்னேறும் சமூகத்திற்கான திறவு கோலாக அமைகிறது.

நல்ல கருத்துக்களைக் கதையாக்கிச் சொல்வதன் வலிமை (the power of story) பற்றி இன்று நிறையவே பேசப்படுகிறது. பள்ளியில் படித்ததற்கு மேலாக பாட்டியின் கதைகள் மூலம் நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொண்ட ஆழ்ந்த விழுமியங்கள் ஏராளம். இன்றைய பெரும் நிறுவனங்களில் பணியாளர்களின் தொழில் சார்ந்த பயிற்சியுட்பட பல்வேறுவகை மனிதவள மேம்பாட்டு முயற்சிகளில் கதை புனைதலும் உவமானங்கள் மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்தலும் நடை பெறுகின்றன. தனிநபரின் அடையாளத்தினை உருப்படுத்தவும் தொடர்பாடலை இலகுவாக்கவும் கதைகூறல் பயன்படுகிறது. இந்த யுக்தியை நம் ஆசிரியர் எவ்வாறு இந்நூலில் கையாண்டிருக்கிறா ரென்பதை உற்றுத் தெரிந்தோமானால் நாமும் நமது அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் பயனடையலாமென்பது இங்கு நோக்குதற் குரியது.

தனது கட்டுரைகளில் வள்ளுவன் முதல் பியாஜே வரை மாட்டின் லூதர் கிங் முதல் மாஸ்லொவ் வரை வாழ்க்கைக்கு வளமான கருத்துக்களைத் தந்த அறிஞர்களை எம்மோடு அளவளாவ விட்ட எமது ஆசிரியர் இறுதியில் பாரதியையும் மாஸ்லோவையும் அழகாக ஒப்பிட்டு எம்மைச் சிந்திக்கவும் தூண்டியுள்ளார். ஒருவன் தனது உடல் சார்ந்த உளம் சார்ந்த அடிப்படைத் தேவைகள் நிரப்பப்பட்ட நிலையில் தன்னைப் பற்றி ஆரோக்கியமான சுயமதிப்பும் கொண்டுள்ள போது மாஸ்லோவின் கருத்துப்படி அதற்கப்பால் அவனுக்குத்

தேவையானது self actualisation எனப்படும் முழுமையான வாழ்க்கையின் இலட்சியத்தைச் சென்றடைவதாகும். கவிதையைத் தன் தொழிலெனக்கூறி அதன் மூலம் வையத்தை வாழவைக்க வேண்டுமெனக் கனவு கண்ட பாரதி எவ்வாறு எளிய தேவைகட்கப்பால் நிறைவான கடந்த (transcendence) நிலையை அடைந்தானோ அது போலவே "போரிடும் கடமையை பொறுப்புடன் நிறைவேற்று" எனக் கீதையிலே நாம் காணும் கண்ணன் நினைவூட்டும் போது பார்த்தனும் அதே சுயதிறன் நிறைவு பெறுகிறான். கருத்துத் தெளிவுடன் கடமையைத் தலையிலேற்று தன் தகைமைகள் அனைத்தையும் தூய செயற்பாட்டில் துணிவுடன் ஈடுபடுத்தும் விடுதலைப் போராளியும் மாஸ்லோவின் நிரைப்படுத்தலின்படி தனது வாழ்க்கையின் அதி உயர் தேவையை நிவர்த்தி செய்தவனாகிறான்.

இந்நிலையில் சாதாரணர்களான நாமெல்லாம் எங்கே பொருந்துகிறோம், நாமும் வாழ்க்கையின் அதியுயர் இலட்சியங்களை நிறைவு செய்யக்கூடிய நிலையை எய்தலாமா என்ற கேள்விகள் எழுகின்றன. அரை நூற்றாண்டுகாலம் கல்வியாளனாகப் பணியாற்றி இன்னும் தன்னால் சமூகத்துக்கு என்ன கொடுத்துதவ முடியுமென்ற தேடலுடன் செயற்படும் அதிபர் கனகசபாபதி அவர்கள் என்கண்ணில் சுயதிறனை நிறைவு செய்து வாழும் கருமயோகியாகவே தென்படுகிறார். இதனையே 'the abundant life' என்றும் 'living life to the full' என்றும் வேறு சிலர் சொன்னார்கள். நாம் யாரென்பதையும் எமது இலட்சியம் என்னவென்பதையும் எமக்கு நாமே தெளிவுபடுத்தினோமானால் நிறைவான வாழ்க்கை எல்லோராலும் அடையக் கூடியதென்றார் மறைந்த அவுஸ்திரேலிய கண் மருத்துவர் Fred Hollows. கொடுப்பது தான் தனது வாழ்க்கையின் நிறைவையும் அதனோடிணைந்த விறுவிறுப்பையும் தந்ததாக அவர் எழுதினார்.

புதிய சூழல்களில் வாழ்க்கை அமைக்கும்போது கடுமையாக உழைப்பதும் கண்டவற்றை உண்பதும் இயல்பாகி விடுகிறது. மாஸ்லோவின் கீழ்மட்டத் தேவைகளை நிரப்புவதில் மட்டும் கவனம் செலுத்தினால் உண்மையான வாழ்க்கைத் தரம் (quality of life) என்னவென்பது தெரியாமலே எமது வாழக்கை முடிந்து போய்விடலாம். அதையும்விட இனிவரப்போகும் காலங்களில் நாம் எதிர்கொள்ள விருக்கும் இயற்கையோடிணைந்த வெப்பநிலை மாற்றங்கள், புதிய நோய்கள், அரசியல் முறுகல்கள், பொருளியல் ஏற்றத் தாழ்வுகள், சமூகக் குளறுபடிகள் எல்லாமே நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் ஈடுபாட்டுடன் பங்குபற்றித் தீர்வு காணவேண்டியவை.

இவையெல்லாம் என்னைப் பாதிக்காதவரை நான் தூங்கிக் கொள்ளலா மென்ற காலம் எப்போதோ போய்விட்டது. பொறுப்புள்ள எமது இளம்தலைமுறை எம்மை விளித்துக் கேட்க முன்னர் நாமே விழிப்புடன் நடப்பதெல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பது புத்திசாலித் தனமானது.

இங்கேதான் ஆசிரியர் திரு கனகசபாபதி போன்றோரின் சமூகக் கரிசனையும் வழிகாட்டல் முயற்சியும் மேலும் தேவைப்படுகின்றன. இசைவாக்கம் (adaptability) மிக்க எமது சமூகம் இன்றைய சோதனை களுக்கு முகம்கொடுப்பதோடு நின்றுவிடாமல் எதிர்காலத்திலும் முன்மாதிரியானதொரு சமூகமாக மலர வேண்டும். இதற்கான அவரது பங்களிப்பும் தடையின்றி வந்தடைய தளராத மனமும் உறுதியான உடலும் இன்னும் பல்லாண்டு காலம் நிலைத்திருக்க வேண்டிக் கொண்டு பாரதியின் கனவு மெய்ப்பட வேண்டுமென்ற கூற்றோடு நிறைவு செய்கிறேன்.

நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா
பேராசிரியர்
சூழல் தொடர்பாடல் துறை
விவசாயப் பல்கலைக் கழகம்
சுவீடன்

அவர்களைப் புரிந்துகொள்வோமா? — 01
பெற்றோருக்கான எட்டுக்கட்டளைகள் — 15
பிள்ளை வளர்ப்புமுறை காலத்தோடு மாற்றம் காணப்படவேண்டும் — 21
மாற்றம் விளைவிக்கும் திறனுடைய எட்டு நிபந்தனைகள் — 28
செவிமடுத்தல் தொடர்புறுதல் — 37
அந்தநாள் ஞாபகம் வந்ததே நண்பனே — 50
நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா? — 55
நனவு அல்லது பிரக்ஞை — 59
பயம் - அச்சம் தவிர் — 62
கற்றல் — 67
தூக்கம் கண்களைத் தழுவட்டுமே — 71
கனவு... அது ஒருவர் பார்த்து அனுபவிக்கும் நாடகம் — 75
பாரதியும் மாஸ்லோவும் — 80

01

அவர்களைப் புரிந்து கொள்வோமா?



என்ன! அரைத்த மாவையே அரைக்கிறாய் என்று என்னைப் புறக்கணிக்காமல் ஒருக்கால் என்னோடு உள்ளே வருகிறீர்களா?

நாம் எண்பதுகளிலே பெரும் தொகையாய் மேற்கத்திய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோம். எனவே, நாம் இங்கு கால் பதித்து கால்நூற்றாண்டு கழிந்துவிட்டது. முதல் கனேடியதமிழ் தலைமுறையும் தோன்றிவிட்டது எனலாம். எமது சமூகம் ஒரு முற்போக்கான சமூகம். Adaptability is a sign of a progressive community என்பார்கள். அதாவது இசைவாக்கம் முற்போக்கான ஒரு சமூகத்தின் அடையாளச் சின்னம். அதனால்தானே "நாம் பாம்பு தின்னும் ஊருக்குப்போனால் நடுமுறி நமக்கு" எனக் காலம் காலமாகச் சொல்லி வருகிறோம். இங்கே குடியேறிய பின்னர் எமது சமூகத்தின் விழுமியங்களிலும் தனி மனித மனப் பாங்குகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. எமது பிள்ளைகள் ஒன்றில் இங்கே பிறந்தவர்கள் அல்லது இங்கே வளர்ந்தவர்கள். அவர்களின் மனப்பாங்கு மாற்றங்களோ, மனப்பாங்கு

விருத்தியோ கடுகதி வேகத்தில் நடை பெறுபவை. வாழும் சூழல் அத்தகையது. சில சமயங்களில் பெற்றோரால் அம்மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் போகலாம். அவ்வேளைகளில்தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இளவயதில் பூப்படைதல்:

அமெரிக்காவில் உள்ள வட கரோலினா பல்கலைக்கழகத்தில் பொதுச் சுகாதாரத்துறைப் பேராசிரியராய் விளங்குபவர் மார்சியா ஹேர்மன் கிடென்ஸ் (Marcia Herman - Giddens) என்பவர். இன்று பெண் பிள்ளைகள் மிகவும் இளம் வயதிலேயே பூப்படைந்து விடுகிறார்கள் என அதிக ஆய்வுகள் செய்த பின்னர் அவர் கூறுகிறார். அவர் சொல்வதென்ன, நாளாந்தம் எம் கண்முன்னாலேயே நடைபெறும் காட்சி இது. நாற்பது வருடங்களுக்கு முன்னர் பெண்கள் 11 அல்லது 12 வயதிலேயே பூப்படைந்தனர். இப்போது அவர்கள் பூப்படையும் சராசரி வயது 8 ஆகும் என்கிறார் அவர். இதன் விளைவாகப் பூப்படைகின்ற சமயத்தில் சுரக்கப்படும் ஈஸ்ரோஜன் (Estrogen) எனும் ஓமோன் மிக்க இளம் பராயத்திலேயே, சுரக்கப்பட பெண்மைக்குரிய துணை இயல்புகள் சின்னஞ்சிறு வயதிலேயே தோன்ற ஆரம்பித்துவிடுகின்றன. ஈஸ்ரோஜன் தொடர்ச்சியாக நீண்ட காலம் சுரக்கவுள்ளதால் மார்புப்புற்று நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளமை ஒரு பக்கமிருக்க, மிக்க இளம் வயதிலே பாலியல் முதிர்ச்சியை எதிர்கொள்ளும் மன உணர்வு அப்பிள்ளைகளுக்கு இல்லாமையே ஏகப்பட்ட பிரச்சினையாகிறது என்பதே பெற்றேரை எதிர்கொள்ளும் பேர் உண்மையாகும். பெரிய அளவிலான உளவியல் மற்றும் உணர்வு பூர்வமான பல பிரச்சினைகள் மனதளவிலே இன்னும் குழந்தைகளாக ஆனால் உடலமைப்பிலே, உருவத்திலே இளம் பெண்களாக உள்ள இச்சிறார்களுக்கு ஏற்பட்டு உள்ளன. வயதான பையன்களும் அவர்களை விட்டு வைப்பதில்லை. இக்குழந்தைகளின் மனத்திலே எத்தகைய போராட்டங்களும் மன உளைச்சல்களும் உள்ளன என்பதை எவரும் சுலபமாய் அறியமுடியாது என்பது நிசம். இதிலிருந்து ஒன்று மிகத் தெளிவாகப் புலனாகிறது. பாலியல் கல்வி சிறு பராயத்திலேயே போதிக்கப்படுதல் அவசியம். பாடசாலையின் பாடத்திட்டங்கள் பாலியல் கல்வியை உட்படுத்தினாலும் கூட, அங்கே இன்னும் மாற்றங்கள் கொண்டு வரப்படுதல் அவசியமாகிறது. இதனிலும் பார்க்க முக்கியமானது பெற்றோர்களின் அணுகுமுறைதான். பெற்றோர்கள், சிறப்பாகத் தாய்மார்கள் இதில் சிரத்தையுடன் தொழிற்படுதல் அவசியமாகிறது. தாய்மார்கள் பிள்ளைகளைக் குளிக்க

வைக்கும்போது, உடைமாற்றும்போது, ஏன் தொலைக்காட்சி பார்க்கையில், சமையல் செய்கையில் பாலியல் கல்வியை நாசுக்காகப் போதித்தல் அவசியம். எதுவும் வீட்டில் கிடைக்காத சந்தர்ப்பங்களிலே தான் பிள்ளைகள் அதனை வெளியே பெற முயல்கிறார்கள் என்பதைப் பெற்றோர்கள் உணரவேண்டும். பாலியல், காதல் மற்றும் விழுமியங்கள் பற்றிப் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்தே பெற விரும்புகிறார்கள். ஊடகங்களிலே நிறையச் செய்திகள் வருகின்ற போதும் அவற்றின் நம்பகத்தன்மையில் பிள்ளைகளுக்கு நம்பிக்கை அதிகம் இல்லை.

நாம் எமது கூச்ச சுபாவத்தால் எதனைச் சொல்வதற்குத் தயங்குகிறோமோ அது பாரிய பரிமாணம் பெற்று நாம் கூச்சப்படுமளவுக்கு வந்துவிடலாம் என்பதை மறவாதீர்கள். சிறார்கள் சிறு வயதிலேயே முதிர்ச்சி அடைவதற்குக் காரணங்கள் பல கூறப்பட்டாலும் என்னைப் பொறுத்தமட்டிலே இறைச்சி மற்றும் காய்கறிகளில் உள்ள ஓமோன்களைத்தான் காரணமாகச் சொல்வேன். வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் முகமாக ஆடு, கோழிகளுக்கு G.H என அழைக்கப்படும் வளர்ச்சி ஓமோன் (Growth Hormone) ஊட்டப்படுகிறது. இந்த ஓமோன் வளர்ச்சியை வேகப்படுத்துவதுடன் கழிவாய் வெளியேறாமல் அவ்விலங்குகளுடைய உடற்றசைகளில் தங்கிவிடுகிறது. குழந்தைகள் அந்த இறைச்சியை உட்கொள்ளும்போது அந்த ஓமோன் பிள்ளைகளின் உடற்றசைகளில் போய்த்தங்கி அதீதவளர்ச்சியைத் தூண்டுகின்றது.

தொழில்தேர்வு:

Edward Hallowell எனும் குழந்தை உளவியலாளர் “எமது பிள்ளைகள் பற்றிய நமது விசாரம் வித்தியாசமான உபாதை. மற்றைய எந்த மனத்துன்பத்திலும் பார்க்க இது வேறு வகையான துன்பத்தை ஏற்படுத்துகின்றது. அங்கே அன்பு மிதமிஞ்சிக்காணப்படும், பயம் எந்நேரமும் நிரம்பி வழியும், நம்பிக்கை எட்டிப்பார்க்கும். கையாலாகாத தன்மை ஏங்க வைக்கும்” என்கிறார். இவை எல்லாம் கலப்படமாகி விட அதற்கு முடிவுதான் ஏது?

நான் இம்முறை இங்கிலாந்து சென்றபோது அங்கே தங்கிய நாட்கள் வெறுமனே ஏழுதான். ஆனால் அந்த ஏழுநாட்களில் நான் கேள்விப்பட்டது என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. உயர்பதவிகளில் இருப்போர் நான்குபேரின் குடும்பத்துப் பிள்ளைகள் நால்வர் பல்கலைக்கழகம் புகுந்தபின் மேற்கொண்டு படிக்கமாட்டேன் என அடம்பிடித்து வீட்டில் தங்கி நிற்கிறார்கள். இவர்கள் ஒருவருமே சாதாரண மாணவர்கள் அல்ல. மிகவும் சிறந்த பெறுபேறுகள் பெற்றுப் பல்கலைக்கழகம் புகுந்தவர்கள். இத்தகைய பரிதாப நிலை ஏற்படுவதற்

குப் பல்வேறு காரணங்கள் உள்ள போதிலும் கல்வித் தேர்வு தொழில் சார்புடையதாக வேண்டிப் பெற்றோர்கள் தேர்வு செய்வதுதான் பிரதானமாக இருக்கலாம் என்பது எனது எண்ணம். பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கள் பிள்ளைகளுடைய சுயமதிப்பினைப் பெரிதும் பாதிக்கின்றது. எதிர்பார்ப்புக்களின் எல்லைகள் அடையக் கூடியதாக அமைவதோடு அவை பிள்ளைகளுடைய மனப்பாங்கினோடு ஒத்துப் போகுமாயின் பிள்ளையினுடைய சுயமதிப்பு உயர அவரின் அடை திறன்கள் பரிணமிக்கின்றன.

இலக்கை அடைய முடியாதபோதும் அது பிள்ளையின் மனப்பாங் குக்கு முரணாக உள்ளபோதும் அவரின் சுயமதிப்பு வீழ்ச்சியடைய அதன் காரணமாக ஏற்படும் விரக்தி பல்வேறு எதிர்மறையான விளைவுகளுக்குக் காரணமாகின்றது. ஒப்பீட்டு அளவிலே கனடாவிலும் பார்க்க இங்கிலாந்திலேதோன் இப்பிரச்சினை நம்மவரிடையே அதிகம் உள்ளது. அங்கே வீட்டுக்கு ஒரு பிள்ளையாவது வைத்தியராக வேண்டும் என்ற அனேகமான பெற்றோரின் அங்கலாய்ப்பு பிரச்சினை யாகின்றது. நாம் கல்விகற்ற காலத்துடன் ஒப்பிடும்பேது இன்றைய வேலைவாய்ப்பும் தொழில்தகைமையும் ஒப்பிட முடியாத அளவுக்கு மாறிவிட்டன. ஆகவே தொழில்தேர்வும், அதற்கான கல்வித்தேர்வும் எம் பிள்ளைகளைச் சார்ந்தே இருக்கவேண்டும். நம் கடமை அவர்களுக்கு உறுதுணையாய் நிற்பதே. பெற்றோர்கள் alternate opportunities are lost opportunities என எண்ணுவதுதான் பிழையான சித்தாந்தம். ஆம் மாற்றுத் தேர்வுகள் என்றால் இழந்த தேர்வுகள் என எண்ணக்கூடாது. பல தேர்வுகள் உள்ளன.

கதை அளப்பதற்குக் கற்பனா கதாபாத்திரம் தேவை. தொழில் தேர்வினைப் பொறுத்தமட்டிலே ஒவ்வொரு பிள்ளையும் தனது பெற்றோர் ஒன்றும் தெரியாத அப்பாவிகள் என்றே எண்ணுவார்கள். எனவே தந்தையார் ஒரு தேர்வைச் சொன்னதும் தலையில் அடிக்காத குறையாய் அதைத் தான் நிராகரிப்பதாக மட்டம்தட்டி விடுவார். எனவே அவரைக் கைக்குள் போடுவதற்கு ஒரு வழி, கற்பனைக் கதாபாத்திரம் ஒன்றுதான். “உனக்கு ஞாபகம் இருக்கா அன்றொருநாள் அறிமுகப் படுத்தினேனே எனது நண்பர் ஒருவரை அதுதான் அந்த Royal Bankகிலே Human Resourceல் பெரிய நிலையிலே உள்ளார் என்று. அவர் கூறினார் ‘இது உனக்கு மிகவும் உகந்தது’ என்று, நீ என்ன நினைக்கிறாய்?” நிச்சயம் கைக்குள் விழுந்துவிடுவார் பிள்ளை.

இணையத்தளம்:

இங்கிலாந்தில் பிரசுரிக்கப்படும் Sunday Express பத்திரிகையில் நவம்பர் 9ம் திகதி Alison Gorden என்பவர் எழுதியதை இங்கே தருகிறேன். அரசு தரும் தகவலின்படி நான்கு பெண்பிள்ளைகளில் ஒருவர் தனது 16வது வயதை அடையுமுன்னர் பாலியலில் ஈடுபட்டுள் ளார். பலர் இணையத்தளம் மூலம் தொடர்பு கொள்பவருடனேயே தொடர்பு வைக்கிறார்கள். அவர்களில் பெரும் பாலானோர் இதில் எவ்வித தப்பும் இல்லை என எண்ணுவதுதான் வருத்தத்துக்குரிய செய்தி. தமது சிறார்களுடன் பாலியல் தொடர்புகள் பற்றிப் பேசுவதற்கு எவ்விதம் ஆரம்பிப்பது என்பதுவே அநேக பெற்றோரின் பிரச்சினை. ஆனால் சிறார்களுக்கு அவர்கள் பெற்றோர் பாலியல் பற்றி நல்ல விளக்கம் கொடுப்பார்களாயின் அவர்கள் இளம் வயதில் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைப் பெரும் அளவில் தவிர்த்துக்கொள்வார் கள் என நம்பலாம். பெற்றோர்களுக்கு இணையத்தளத்தினால் ஏற்படக்கூடிய பல சிக்கல்களில் இது ஒன்று. இணையத்தளம் என்பது அத்தியாவசியமான ஒரு இக்கட்டு என முன்னரும் ஒருமுறை நான் எழுதியியுள்ளேன். இதோ வேறு ஒன்று.

“Children are bullied every day.” *28-11-2003* அன்றைய தின ‘ரொறன்ரோ ஸ்ரார்’ பத்திரிகை ஆசிரியத் தலையங்கத்தின் தலைப்பு. அதில் கூறப்பட்டது கீழே உள்ளது.

அச்சுறுத்தல் என்பது மிரட்டல் மூலம் ஆதிக்கத்தைப் பெறுதல் ஆகும். இது பல்வேறு பரிமாணங்களைப் பெறுகிறது. அது உடலுக்கு ஊறுவிளைவிப்பதாக இருக்கும் அல்லது வெறும் வாய்ப்பேச்சு மிரட்டலாக இருக்கலாம். இங்கே நேரடியாக ஒருவர் முகத்தைப் பார்த்துச் செய்யப்படலாம். அல்லது அவர் இல்லாத சமயம் நிகழ்த்தப் படலாம்.

இணையத்தளமூலம் வரும் அச்சுறுத்தலே (Cyber - Bullying) அண்மைக் காலத்து அநாகரிக செயற்பாடு. இளைய தலைமுறையினர் பெரிதும் விரும்புகின்ற text messaging, e-mail, postings on website மற்றும் chat-rooms போன்றவற்றைக் கையாண்டு தன்கோழைத் தனத்தை இவ்வச்சுறுத்தல் காண்பிக்கிறது. The Canadian Journal of Psychology எனும் சஞ்சிகையில் பிரசுரித்துள்ளதன் படிக்கும் மாணவர் களிலே 10%த்தினர் வன்முறையாளர்களாகவும் 50%த்தினர் பாதிக்கப் பட்டோராயும் உள்ளனராம். இதில் முக்கியமான ஒரு விசயம் பாதிக்கப் பட்டோரில் பயந்தாங்கொள்ளிகள் பலர். அவர்கள் மனதில் அதை வைத்துக் குமுறுவார்களேயன்றி அதுபற்றிப் பெற்றோருக்கோ உறவி

னருக்கோ தெரியவைக்க மாட்டார்கள். இது கொல்லாமல் கொல்லும் வியாதி.

இணையத்தளம் மிக்க அவசியம். உங்கள் பிள்ளைக்கு அது தேவையே. அவருக்கெனத் தனிப்பட்ட ஒன்றினை ஏற்பாடு செய்து கொடுத்தால் நீங்கள் பிழைவிடுகிறீர்கள் என்பது அர்த்தம். அண்மையில் பத்திரிகை ஒன்று பாடசாலை மாணவரிடையே கருத்துக் கணிப்பு ஒன்றினை எடுத்து அதனை 'Kids Take On Media' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது. அதன்படிக்கு 26% பாடசாலை மாணவர்களுக்குச் சொந்தமாகக் கணினியும் இணையத்தளமும் உள்ளனவாம். இவர்களிலே பெரும்பாலானோர் தமக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் வீட்டாரிடமிருந்து வருவதில்லை எனவும் கூறியுள்ளனர். எம்மவர்களில் சொந்தமாகக் கணினி வைத்திருப்போரின் வீதம் 26க்கும் அதிகமாகவே இருக்கும்.

கணினி ஒருவருக்கு மாத்திரம் சொந்தமல்ல. வீட்டில் உள்ளோர் எல்லோருக்கும் பொதுவானதாக ஒரு கணினி இருக்கட்டும். கணினியை அவரின் அறைக்குள் வைக்காமல் பொதுவான ஒரு இடத்திலே வைத்தீர்களானால் ஒரு கட்டுப்பாடு இருக்கும். என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். என்னை அவர்கள் கவனிக்கிறார்கள் என்ற பயம் அவருக்கும் இருக்கும்.

வீடியோ விளையாட்டுக்கள்:

ஒன்ராறியோ அரசாங்கம் முதன் முதலாக வீடியோ விளையாட்டு ஒன்றினை 18வயதுக்கு உட்பட்டோர் பார்ப்பதற்குத் தடைவிதித்துள்ளது. ஒன்ராறியோ திரைப்பட மீள்பார்வைச் சவை (Ontario Film Review Board) பொதுவாக வீடியோ விளையாட்டுக்களின் பிரதிகளைப் பார்வையிடுவதில்லை. ஆனால் "Manhunt" எனும் இந்த விளையாட்டை ஏற்கனவே நியூசிலாந்து பார்வையிட்டுத் தடை விதித்தமையால் ஒன்றாரியோவின் சபையும் பார்வையிட்டுள்ளது. தடை செய்வதற்குக் காரணம், "frequent coarse language and slurs, sexual references... visually explicit portrayals of violence including hand - to - hand and weapons violence." நாம் எமது குழந்தைகளை வன்முறை மிகுந்த, சமூகக் கோட்பாடுகளுக்கு மதிப்புத் தராத ஒரு பிற்புலத்திலேயே வளர்க்கிறோம் என்பதை உணர வேண்டும். எத்தனை சட்டங்கள் இயற்றினாலும் மனிதமனத்தில் மாற்றம் ஏற்படாவிட்டால் குழந்தைகள் அதற்கு அடிபணியத்தானேசெய்வர்.

இழிவு இலக்கியம் (Pornography):

சிறார்களுக்குப் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் நூல்களைச் சில எழுத்தாளர்கள் வியாபார நோக்குடன் எழுதுவதுண்டு. ஆனால் பெருந்தன்மையாக அவை கலை நோக்குடன் எழுதப்பட்டவை என ஏமாற்று வார்த்தைகள் சொல்வார்கள். கனடிய அரசு இதனைத் தவிர்க்குமுகமாகச் சட்ட மூலம் C-12 ஐ அமுல்ப்படுத்துதற்குத் தயாராகிறது. அந்த சட்டமூலத்தின் படிக்கு 18 வயதுக்கு உட்பட்டோர் பாலியல் செய்கைகளில் ஈடுபடுவதாக ஒரு ஓவியமோ, புஸ்தகமோ அல்லது திரைப்படமோ ஆக்குதல் குற்றமாகும். Lillies எனும் திரைப்படம் தயாரித்த கனடிய திரைப்படத் தயாரிப்பாளர் John Greyson, The Last of the Golden Girls எனும் நாவலை எழுதிய Susan Swan என்ற நாவலாசிரியை, போன்றோரும் இன்னும் பலரும் இந்தச் சட்டத்தைத் தீவிரமாக எதிர்க்கின்றனர். கலை என்ற பெயரிலே வக்கிர உணர்வுகளைத் தூண்டுகின்ற இலக்கியங்களை அமைத்து அவைகளைப் பார்க்கவோ வாசிக்கவோ நாம் வழிசெய்து கொடுத்தபின் அவர்கள் அதன் வழிநடக்கும்போது அவர்களைக் குற்றம் சாட்டுவது எந்த வகையில் நியாயம்?

பெற்றோர் பிரிவு:

இது கதையல்ல நிஜம். கியூபெக் மாகாண நீதி அமைச்சர் Marc Bellemare. அவரது 21 வயது மகள் Mercier Bellemere இரவு விடுதி ஒன்றில் நிர்வாணமாய் நடனமாடுபவராய் பொலிசார் பிடித்துள்ளனர். அவர் தனது தந்தையும் தாயும் விவாகரத்துச் செய்து தந்தை மறுமணம் செய்ததும் 13 வயதுப் பெண்ணாக வீட்டைவிட்டு வெளியேறியதாகவும் 18 வயதிலே நிர்வாண நடனம் ஆடத் தொடங்கியதாகவும் சொல்லியுள்ளார். அங்கே பரிதாபம் என்னவென்றால் தான் தனது கல்லூரிக் கல்விக்கு வேண்டிய கட்டணம் கட்டுவதற்காகவே நிர்வாண நடனம் ஆடுகிறாராம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பார்கள். அதே சமயம் மதியாதார் வாசல் மிதியாமை கோடிபெறும் எனவும் கூறுவர். கணவன் மனைவிக்கிடையே மனமுறிவு அதனால் மணமுறிவு சாதாரணமாகிவிட்டது. அண்மைக்கால ஆய்வறிக்கைகளின் படி கனடாவை, ஐக்கிய அமெரிக்காவுடன் சேர்த்துப் பார்க்கும்பொழுது சென்ற 35 ஆண்டுகளில் (1962-1998) விவாகரத்து வீதம் 17 மடங்கு அதிகரித்துள்ளதாம். கனடாவின் புள்ளிவிபரவியல் பகுதியினர் இங்கே கல்யாணம் செய்து வாழ்பவர்களில் 40%த்தினர் விவாகரத்துச் செய்வார்கள் என்கிறது.

இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள்? அவர்கள் இருவரது அரவணைப்பிலும் வாழவேண்டிய சிறார்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். பொதுவாக மேலைத்தேயச் சட்ட அதிகார எல்லைகள் யாவும் இப்பொழுது விவாகரத்து அளிக்கின்ற பொழுது "பாதுகாப்புப் பொறுப்பேற்றல் மற்றும் பிள்ளையைக்காணும் உரிமைக் கோட் பாட்டினை" (concept of custody and access) முற்றாகவே கைவிட்டு விட்டுப் "பங்காளிப் பெற்றோரியம்" (Shared parenting) என்பதனைக் கையாளுகின்றன. Judith Walleerstein எனும் ஆய்வாளர் விவாகரத்துச் செய்த பெற்றோர்கள் இருவருடைய அனுசரணை மிக்க ஆதரவு பிள்ளைகளுக்குத் தேவை என்பதால் அவர்களிடம் விவாகரத்துக்குப் பின்னரும் தொடர்பினை வைத்திருங்கள் எனக் கெஞ்சி வேண்டுகோள் விடுக்கிறார். தந்தைமார் பொதுவாகவே பொறுப்பற்றவர்கள். அவர்கள் தொடர்ந்து பிள்ளைகளை அக்கறையுடன் கவனிக்கமாட்டார்கள் எனப் பெண்ணியவாதிகள் கூறுவார்கள். இதில் உண்மை இல்லாமல் இல்லை. இதன் காரணமாகவே 1988ம் ஆண்டிலே கனடியப் பாராளுமன்றத்தின் மேலவை கீழ்ச்சபை இரண்டுமாகச் சேர்ந்து தயாரித்த அறிக்கையான "For the sake of the children" ஏனோ இதுநாள்வரை கிடப்பிலே போடப்பட்டுள்ளது. அதன் சிபாரிசுப்படிக்கு இரு பெற்றோர்களும் விவாகரத்துக்குப் பின்னரும் பிள்ளை வளர்ப்பில் சரிசமனான பங்கேற் றல் வேண்டும். யோர்க் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 92 மாணவர் களிடம் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்படி 26%த்தினர் பேரன் பேர்த்திகளுடன் அதிக தொடர்பு வைத்திருப்பவர்களாகத் தெரிகிறது. பல குடும்பங்களிலே பேரன் பேர்த்திகள் பெற்றோர்களுக்கான குறையீடுகளாகவும் பேரப்பிள்ளைகளுக்கு உணர்வுபூர்வ ஆதரவினை வழங்குபவர்களாகவும் உள்ளனர். கனடா புள்ளிவிபரவியல் திணைக் களத்தின் கணிப்புப்படி ஒவ்வொரு 100 பேர்களுக்கும் ஒருவர் என்ற வீதத்தில் பேரப்பிள்ளைகளுடன் வாழ்கின்றார்களாம். எனவே விரிவாக்கக் குடும்பங்கள் இன்றைய கால கட்டத்திலே மிகவும் விரும்பக்கூடிய ஒன்றாகும்.

மனப்பாங்கு:

01. சத்தம் காதைத் துளைக்கிறது:

வீட்டின் உள்ளே பாட்டு, வானொலி, தொலைக்காட்சி எல்லாமே உச்ச ஸ்தாயில். எல்லாமே அமைதியாக, மிக மென்மையாக ஒலி நாடாவை ஓடவிட்டபடி எதையாவது வாசித்து இன்புற்ற காலத்துக்கு எப்போதோ விடைகொடுத்தாய்விட்டது. வீட்டில் மாத்திரமா? வெளியி லும். அது Le Chateau போன்ற உடை அணிக் கடையாக இருக்கலாம். அல்லது Carlton Cinema வாக அல்லது Elaine Cinema வாக இருக்கலாம். பாடல்கள் பயங்கர சத்தமாகவே இருக்கும். எங்களை அது உறுத்துகிறது. ஆனால் அவர்களுக்கு இன்னும் மேலும் மேலும் வேணும். அவர்கள் சித்தாந்தம் வேறு. உரத்த ஓசை அவர்களைப் பொறுத்தமட்டிலே இரு அற்புதச் செயற்பாடுகளுக்குக் காரணமாகின்றன.

1. **தூண்டல் ஊக்கப்பேறு:** செயல்களை விரைவாகவும் செவ்வை யாகவும் செய்வதற்கு வேண்டிய ஊக்கத்தைப் பலத்த ஓசை வழங்குகின்றது என்பது அவர்கள் சித்தாந்தம்.
2. **மன அழுத்தத்தைக் குறைக்கிறது:** பிள்ளைகளுக்குச் சிறப்பாகப் பதின்வயதினருக்கு வயதிற்கேற்ற பல பிரச்சினைகள் மன அழுத்தத்தை ஏற்படுத்தக் காரணமாக இருக்கலாம். உரத்த ஒலியில் பாடல்கள் கேட்கும்போது அவர்களது மன அழுத்தம் குறைகிறதாகக் கருதுகிறார்கள். அதில் உண்மையிருக்கலாம். கேட்டல் புலம் மிகையாக உபயோகிக்கப்படும் வேளையில் ஏனைய புலன்கள் செயலிழக்கலாம்.

ரொமி சூ போன்ற Audiologists பலத்த ஒலியின் பாதிப்புப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சாதாரணமாக எமது செவிப் பறையில் உள்ள 15000 உணர்வுக் கலங்கள் ஒலியினை மூளைக்கு இட்டுச் செல்கின்றன. உரத்த ஒலி இம்மயிரிழை களைக் கொன்றுவிடுகின்றது. சாதாரணமாக 85 decibel ஐ எமது காதுகள் ஏற்கின்றன. உரத்த கேட்டல் ஒலியின்போது 125 decibel க்கும் அதிகமான ஒலி அலைகள் எழுகின்றன. அதனால் கேட்டல் பாதிக்கப்படுவது உண்மையே. எனினும் பாதிப்புத் தெளிவாகப் புலப்படுதல் வயதான பின்னர் என்பதால் அதன் தாற்பரியம் இளைஞர்களுக்குப் புரிவதில்லை. பெற்றோர் கள் இதனைச் சினேகமான முறையிலே சிரித்தபடி சற்று நகைச்சுவையுடன்கூறி அவர்களுக்குப் புரிய வைக்கலாம். இது இன்றைய இளைஞர் உலக நியதி என அவர்கள் செயலை நியாயப்படுத்தி அமைதியும் காக்கலாம்.

02. செல்லிடப்பேசி தேவையா?

தொலைபேசி கண்டுபிடித்தது கிரஹாம் பெல் எனக் கனடாக்காரன் தலைகால் புரியாமல் போகவரச் சொல்லிக்கொண்டிருந்தது ஜெர்மன் காரனுக்கு எட்ட அவன் இல்லை, உங்களுக்கு முன்னரே நாம் கண்டு பிடித்துவிட்டோம் எனக் கூறத்தொடங்கிவிட்டான். எது எப்படி என்றாலும் அது கண்டுபிடிக்கப்பட்ட காலம்தொட்டு பதின்வயதினரின் காதல் அதன்மேல்தான். காதலிப்பதற்கும் அது தேவை அல்லவா? அந்தக்

காதல் வரவர அதிகரித்து இன்று செல்லிடப் பேசி (Cell Phone) வந்ததும் நீயில்லாமல் நான் இல்லை என்ற அளவிற்கு முற்றிவிட்டது. பெற்றோர்கள் அதனை வேண்டாம் என்று வாங்கிக் கொடுக்க மறுத்து நிராகரித்தது உண்டு. அது அநாவசியச் செலவு, போகவரப் பேசிக் கொண்டு திரிதல் உபத்திரவம், பழக்கத்திற்கு அடிமையாதல் என வெவ்வேறு காரணங்களைப் பெற்றோர் காட்டினாலும் கூடத் தொலை பேசி நிறுவனங்கள் மயக்கவார்த்தைகளால் பதின்வயதினரைத் தம் கைக்குள் போட்டுவிட்டனர். பெற்றோர்களைப் பொறுத்தமட்டிலேயும் இதனை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பிள்ளைகள் எங்கே உள்ளார்கள் என்பதை அறிந்துகொள்ளவும் அவர்கள் ஏதாயினும் இக்கட்டில் உள்ளனரா என்பதைத் தெரிந்துகொள்ளவும் செல்லிடப்பேசி உதவுகின்றது என்பது உண்மையே. எனவே பிள்ளைகளுக்கு செல்லி டப்பேசி ஒன்றினை வாங்கிக் கொடுக்க முன்னர் அவர்கள் அதனைப் பாடம் படிக்கிற நேரத்தில் உபயோகிக்க மாட்டார்கள், மற்றும் வீட்டிற்கு வந்ததும் அதனைப் பொதுவான இடம் ஒன்றில் வைத்திருக்கவேண்டும். வீட்டில் உள்ள சமயங்களில் தொலைபேசியில் பேசுவதானால் வீட்டுத் தொலைபேசியில்தான் பேசவேண்டும். செல்லிடப்பேசியும் தந்தை அல்லது தாயின் பெயரிலேயே பதியப்பட்டிருக்க வேண்டும் என்ற உத்தரவாதங்களைப் பெறுதல் அவசியம்.

03. போதிய உறக்கமின்மை பதின்வயதினருக்கு இயற்கையானதே:

காலை 6:30 க்கோ 7:00 க்கோ பாடசாலைக்கு நேரமாகுது எனப் புரட்டிப் புரட்டி எழுப்புவோம். மூடியிருக்கும் கண்ணைத் திறக்கவே கஷ்டப்படும் இதே பிள்ளைதானா முதல்நாள் இரவு 11:00 மணிக்கு எனக்கு நித்திரை வரவில்லை எனக்கூறிப் பாட்டுக் கேட்டபடி படிப்பது போலப் பாசாங்கு செய்தவர். "ஆண்கள் ஐந்து மணித்தியாலங்களும், பெண்கள் ஆறு மணித்தியாலங்களும் முட்டாள்கள் எட்டு மணித்தி யாலங்களும் உறங்கலாம்" என நெப்போலியன் கூறினாராம். இது வயதானவர்களுக்கே பொருந்தும். பதின் வயதினர் குறைந்தது ஒன்பது மணித்தியாலங்களாவது நித்திரைகொள்ள வேண்டும் என ஆய்வாளர் கள் சொல்கிறார்கள். Dr.மேறி கார்ஸ்டொன் பிறவுண் பல்கலைக் கழகத்தின் உறக்கநிலை ஆய்வாளர், இவர் "Adolescent Sleep Patterns" எனும் நூல் ஒன்றினைப் பிரசுரித்துள்ளார். அதில் பதின் வயதினர் உறக்கம் பற்றி நிறையச் செய்திகள் கூறியுள்ளார். வளர்ச்சி ஓமோன் களும் பாலியல் ஓமோன்களும் பொதுவாக உறக்கத்தின் போதுதான் சுரக்கப்படுகின்றமையால் போதிய உறக்கமின்மை உடலியல் பாதிப்புக் களையும் ஏற்படுத்தும். நிர்ப்பீடனத் தொகுதியும் பாதிக்கப் படுகின்றமையால் நோய் எதிர்ப்புச்சக்தியும் பாதிக்கப்படும். நினை வாற்றல்கூட உறக்கவேளையில்தான் உருவாகின்றமையால் பிள்ளை களின் கற்றலையும் பாதிக்கும். போதிய உறக்கம் இல்லாத பதின் வயதினரைப் பற்றி மிக அழகாகக் கார்ஸ்டொன் "அவர்கள் பாடசாலை யில் இருக்கலாம். ஆனால் அவர்களது மூளை வீட்டிலே தலையணை யின் மேலே உள்ளது" என்கிறார். சனி, ஞாயிறு இன்னும் மோசம்.

பதின் வயதினர் இரவு 9:00 அல்லது 10:00மணிக்கு உறக்கம் வரவில்லை எனக்கூறுவது பொய்யான கூற்று அல்ல என டொக்டர் மேறி கார்ஸ்டென் கூறுவார். அவர்களுடைய உடல் நேரம்காட்டி, சொல்லமுடியாத ஏதோ காரணத்தின் பொருட்டுச் சற்று வித்தியாசமான முறையில் இயங்குகிறது. அதன் பொருட்டாக அவர்கள் இரவு வேளை களில் பிந்தி உறங்குவதும் காலையில் பிந்தி எழுவதும் இயற்கையா னதே. எனவே இதனைப் பெற்றோர் அங்கீகரித்தே ஆகவேண்டும்.

ஒத்தவயதுடையோர் ஈர்ப்பு:

எங்கெல்லாம் அங்கீகாரம் கிடைக்கிறதோ, எங்கெல்லாம் எமக்கு உறுதுணையாக நிற்கத் தயாரானோர் உள்ளனரோ அங்கே எம்மையும் சேர்த்துக் கொள்வது மனித இயல்பு. இது குற்றமல்ல. ஆனால் அது குற்றங்கள் புரிவதற்குக் காரணமாகும் போதுதான் பிரச்சினை எழுகிறது. ஒத்த வயதுடையோர் ஈர்ப்பு எல்லாப் பிள்ளைகளிடத்தேயும் இருக்கவே செய்யும். ஆனால் அது பெற்றோர்களின் அரவணைப்புப் பெறாத பிள்ளைகளிடத்தே விகாரமான முறையிலே அமையலாம் என்பது வேதனை. Horatio Alger Association அண்மையில் வெளியிட்ட அறிக்கை நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. அதன்படிக்கு இரண்டாம் நிலைப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் 75%த்தினர் தம்மை ஒத்த வயதுடையோருடன் உறவாடித்திரிய விரும்பினாலும்கூட பெற்றோர்களுடன் நல்லுறவு உள்ளதாகவும் அதில் 44%த்தினர் பெற்றோர்களையே தமது ஆதர்ச மாதிரிகளாகக் (role models) கொண்டதாகவும் கூறியுள்ளனர். பெற்றோர் பிள்ளையிடையே பலமான உறவு இருக்குமாயின் பிள்ளை ஒத்த வயதுடையோரின் மது அருந்தல், பாலியல் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்கமாட்டார் கள் என்பது உறுதி. பெற்றோர்களின் மனத்திருப்தியைப் பெரிதும் எண்ணிக் கொள்வார்கள்.

Oscar Christensen என்பவர் Arizona Universityயின் முன்னைநாள் உளவியல்துறைப் பேராசிரியர். "எம்மில் பல பெற்றோர்கள் தாம் தமது பெற்றோர்களிடமிருந்து பெற்ற பெற்றோரியத்தையே பிள்ளை வளர்ப்பில் கையாள்கிறார்கள். இந்தப் பாரம்பரியங்கள் போற்றுதற்

குரியவை என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்றாலும் அவை 50 வருடங்களுக்கு முந்தியவை" என்கிறார். எமது செயற்பாடுகள் பல எம் பிள்ளைகளை ஓடோடிச் சென்று ஒத்த வயதுடையோரிடம் தஞ்சமடையச் செய்கின்றன. கிறிஸ்ரென்சன் சொல்வதைக் கேளுங்கள்.

01. பிள்ளைகளும் பங்காளிகளே:

இல்ல அமைப்பில் தாங்களும் பங்காளிகள் என அவர்கள் உணர்ந்து பங்காற்றும் விதத்தில் பெற்றோர்களது நடவடிக்கைகள் அமையவேண்டும். வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இன்றைய உலகிலே சிறு குழந்தைகள் கூட இல்ல நடவடிக்கைகளில் தம்மைக் கலந்தாலோசிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

02. கதைப்பதை நிறுத்துங்கள்:

பெற்றோர்கள் நீண்ட நேரம் பிள்ளைகளுக்கு உபதேசிப்பதை விட்டுவிட வேண்டும். பல பெற்றோர்கள் பிள்ளைகளில் ஒழுங்காட்சி ஏற்படுத்துவதற்குப் "பேசுதல்", "கற்பித்தல்" அல்லது "அறிவுறுத்தல்" நல்லது என எண்ணுகிறார்கள். உண்மை அதுவல்ல. ஒரு நொடிப் பொழுதுக்கு மேல் அவர்கள் செவிகளில் நீங்கள் சொல்வது ஏறாது. "செவிடன் காதில் ஊதிய சங்கு" என்றும் "உறங்குகிறவனை எழுப்பலாம் உறங்குவது போலப் பாசாங்கு செய்பவனை என்ன செய்யலாம்" என்றும் கூறுவார்களே. இரண்டு பழமொழிகளையும் ஒன்று சேர்த்துப்பாருங்கள் புரியும். "பல பிள்ளைகளுக்கு தாய் செவிடு" (mother deaf-ness) ஏற்படுகிறதாம். திறந்த மனதுடன் வெளிப்படையான கலந்துரையாடல் (கவனிக்க: போதனை அல்ல!!) அவர்களை நல்ல முடிவுகள் எடுக்க வழி வகுக்கும் என்பதை மறவாதீர்கள்.

03. பிறப்பு ஒழுங்கில் கவனம்:

வீட்டின் மூத்த பிள்ளை தன் சாதனைகள் திறமையாக அமையுமா யின் வீட்டு அங்கீகாரம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் திறமையாகச் செயற்பட முனைவார். இரண்டாவதின் பாடு கொஞ்சம் இக்கட்டாக அமையும். மூத்தவரோடு ஒப்பிடுவதும், அவர் கழித்தவை இவருக்குப் போவதும் இவரைப் பிழையான பாதையில் போக ஏவலாம். மூன்றா வதன் பாடோ திண்டாட்டம்தான். முதல் இரண்டு பற்றியும் பேசுதற்கே பெற்றோர்களுக்கு நேரம் போதாது. எனவே "என்னை விரும்புவார் எவரும் இல்லை" என அவர் குமுறத் தொடங்கலாம். சகோதரங்களி டையே உள்ள போட்டி பற்றிப் புகழ்பெற்ற உளவியலாளர் சிக்மண்ட் ஃபுறாயிட் (Sigmund Freud) "பெற்றோரின் அன்பு பெறும் காரணமாகச் சகோதரர்களிலே ஒருவரை ஒருவர் கொன்றுவிட்டால் என்ன என ஆரம்பத்திலேயே எண்ண வைக்கிறது" என்கிறார்.

04. மன அழுத்தம் பிள்ளைகளை நோயாளிகள் ஆக்குகின்றது:

பல்வகைச் செயல்களில் பங்கேற்றல், பாடசாலைப் படிப்பில் முன்நிற்க வேண்டும் என்ற ஆர்வம், விளையாட்டில் ஈடுபாடு என ஓய்வு ஒளிச்சலின்றிப் பிள்ளைகள் நாயாக அலைதல் அவர்களை நோயாளிகள் ஆக்குகின்றது எனப் பல குழந்தை மருத்துவர்கள் கூறியுள்ளனர். அண்மைக் காலங்களிலே பல பிள்ளைகளுக்கு Anxiety and Depressionக்கு மருத்துவம் செய்ததாகக் கூறுகிறார்கள். எனக்கு எனது பெற்றோர்களால் தரமுடியாத எல்லாவற்றையும் நான் எனது பிள்ளைக்கு வழங்குகிறேன் எனப் பெருமைப்படும் பெற்றோர்கள், தாம் ஏதோ பெரிய தியாகம் செய்வதாக எண்ணிப் பிள்ளைகளைச் சுமக்கமுடியாத அளவினுக்குச் சுமக்க வைக்கிறார்கள்.

"அவர் திறமையாகச் செய்யாவிட்டால் மற்றைய பிள்ளைகளிலும் குறைந்துவிட்டால் அவர் மனநிலை பாதிக்கப்படுவார்" எனப் பெற்றோர் கூறுவது உண்மையில் பிள்ளையின் மனநிலையை அல்ல, தனது மனநிலையையே என்பதை உணரவேண்டும்.

தம் பிள்ளைகளைப் பற்றிய முழுமையான அறிவு எந்த ஒரு பெற்றோருக்கும் இருப்பதில்லை. கட்டாயமாக அங்கே ஒரு குருட்டுப் புள்ளி இருக்கவே செய்யும். நாம் காணாத, காணமுடியாத ஒரு குறையினை மற்றவர்களோ, ஆசிரியர்களோ ஏன் அவன் நண்பர்களோ கண்டிருக்கலாம். ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் சில பெற்றோர் கள் தெரிந்தும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்கிறார்களே அது வரவேற்கத் தக்கதல்ல. இதனை மறுத்தல் (denial) என்பார்கள். வீட்டுக்கு வீடு வாசற்படி. எனவே ஒரு பிரச்சினை வந்தால் அது ஏதோ உங்களுக்குத்தான் சமூகத்திலே வந்ததாக எண்ணி அவஸ்தைப் படாதீர்கள். அதனை மறுக்கவும் முயலாதீர்கள். அத்தகைய பிரச்சினை வேறு பலருக்கும் வந்திருக்கலாம். அவர்கள் மறைத்திருக்கலாம். அதற்காக நீங்களும் மறைத்து அவலப்படாதீர்கள். நெஞ்சில் உரத்துடன் அது மேலும் வலுப்பெறுமுன் அதனை எதிர்கொள்ளுங்கள். சுமுகமாகத் தீர்க்கப்பாருங்கள்.

அவர்கள் வேலையை அவர்களே செய்யட்டும்: நடந்த கதை ஒன்று. ஒரு நாள் மகள் பாடசாலைக்குப் போய்விட்டார். அவரது விஞ்ஞானபாடச் செயல்திட்டத்துக்கு (Project) உதவி செய்யும் முகமாக தாயார் பலகை ஒன்றினைச் சாப்பாட்டு மேசையில் வைத்துத் துறப்பணத்தால் துளைத்தார். அவர் பலகையை மாத்திரமல்லாது சாப்பாட்டு மேசையையும் துளைத்து விட்டாராம். இப்படிப் பல பிள்ளைகளுக்காகப் பெற்றோர்களே தான் செயற்றிட்டங்களைச்

செய்துகொடுக்கின்றனர். இது செயற்றிட்டங்கள் கொடுக்கப்படுவதன் அடிப்படை நோக்கத்தையே பிறழச் செய்துவிடுகிறது. இது மாத்திர மல்லாமல் அதிகமான வீட்டு வேலைகளில் (Home Work) கூடப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பெருமளவிலே உதவி செய்கிறார்கள். செயற்றிட்டங்களினால் பிள்ளைகள் நேரத்தை எப்படி உபயோகிப்பது (Time Management) மூலவளங்கள் பற்றிய அறிவு பெறுவது (Knowledge about resources) தகவல்களைச் சேகரிப்பது (Collecting information), தகவல்களைத் தொகுப்பது (Synthesising Information), பணியினைச் செய்து முடித்தல் (Task Completion) போன்ற பல்வேறு திறன்களைப் பெறுகின்றனர். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பெருமளவிலே செயல்திட்டங்களுக்கு உதவுவதால் இப்பிள்ளைகள் அத்திறன்களைப் பெறமுடியாது போய்விடுகிறது. அதன் தாக்கம் அவர்கள் உயர்கல்வி நிலையங்களில் கல்வி கற்கின்ற போது புலனாகும். பல்கலைக்கழகம் புகுந்தோரில் கணிசமான தொகையினர் பல்கலைக்கழகக் கல்வியை முடிக்காமல் வெளியேறுகிறார்கள். அதற்கு இதனையும் ஒரு காரணமாகச் சொல்லலாம்.

02

பெற்றோருக்கான எட்டுக் கட்டளைகள் அவர்களுக்கு உதவுவது எவ்விதம்

Eight Commandments for Parents: What can you do to help

நான் இதுபற்றி விலாவாரியாக எழுதியுள்ளேன். 'Time' என்ற சஞ்சிகை How to make a better student என்ற தலைப்பிலே கட்டுரை ஒன்றினை அண்மையில் பிரசுரித்துள்ளது. சில பிள்ளைகள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. கார்த்திகா ஞானேந்திரராசா எனும் வன்கூவரில் வசிக்கும் நமது பிள்ளை ஒருவரைப் பற்றியும் எழுதியுள்ளது.

பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவும் முறைகள் எட்டு உள்ளதாகப் பெட்டிச் செய்தியில் தந்துள்ளது. அவற்றினை விளக்கித்தரும் நோக்கிலேயே இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

01. Be Role Models:

சிறந்த முன்மாதிரியாக அமையுங்கள். காஞ்சிப் பெரியவர் வேடிக்கையாக ஒரு கதை சொன்னார்.

வேடிக்கையாகச் சொல்லப்பட்டாலும் அதில் பொதிந்துள்ள உண்மையைப் பாருங்கள். கிருஷ்ணன் வெண்ணெய் திருடினான், கோபிகளின் சேலை திருடினான், பெண்களின் மனதைத் திருடினான் என்கிறோம். அந்தத் திருட்டுப்புத்தி அவனுக்கு எங்கிருந்து வந்தது? அவன் அப்பா வாசுதேவர் செய்த திருட்டுத்தனம்தான் அவனுக்கு வந்திருக்கிறது. கிருஷ்ணன் பிறந்த உடனேயே வாசுதேவர் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் சிறையில் இருந்து தப்பி ஓடுகிறார். குழந்தையைக் கோகுலத்திற்கு எடுத்துச் சென்று திருட்டுத்தனமாய் யசோதைக்குப் பக்கத்தில் அவளுக்குத் தெரியாமல் விட்டுவிட்டு வந்துவிடுகிறார். வசுதேவரிடமிருந்தே திருட்டுப்புத்தி கண்ணனுக்குப் போயுள்ளது. தகப்பன் சிறந்த முன்மாதிரியாக அமையாமல் எதிர் மறையான முன்மாதிரியாக (Negative role model) அமைந்துள்ளார்.

நாம் வசிப்பதை, நாம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முறைகளை நமது பிள்ளைகள் கண்கூடாகவே காணவேண்டும். எமது வெற்றிகள், தோல்விகளை அவர்கள் நேரடியாகவே காண்பதால், எமது தோல்விகள் அவர்களுக்குப் படிப்பினையாக அமையும். எமது வெற்றிகள் அவர்களின் வெற்றிக்கு உத்தரவாதமாய் அமையும்.

02. Don't Jump ahead:

எட்டி அடி வைக்கட்டும். எட்ட வைக்க வேண்டாம்: ஆரம்பப் பாடசாலை, இரண்டாம் நிலைப் பாடசாலை அல்ல. இடைநிலைப் பாடசாலை பல்கலைக்கழகம் அல்ல. எனவே அவரவர் கற்கின்ற வகுப்புக்கேற்றதை மட்டுமே அவர்களைக் கற்கவையுங்கள். பேராசைப் பட்டு அவர்கள் தகுதிக்கு மேல் ஊட்ட முனையாதீர்கள். வயதிற்கு மீறிய சாதனை ஒரு சிலர் செய்யாமல் இல்லை. ஆனால் அவர்கள் விதி விலக்கானவர்கள். அதிகமான வீட்டு வேலை (Home Work) எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

03. Keep on reading:

வாசியுங்கள், வாசிக்கத் தூண்டுங்கள். அவர்கள் சிறுவர்களாக இருக்கிற பொழுது தொடங்கியே அவர்களுக்காக நூல்களை வாங்கியோ, இரவல் எடுத்தோ வாசிக்க விடுங்கள். வாசிக்க வையுங்கள். அவர்கள் மிகவும் ஊக்கமுடன் வாசிக்கத் தொடங்கி விடுவார்கள். நீங்களும் தொடர்ந்து வாசியுங்கள். வெறுமனே தொலைக்காட்சியுடனும், வீடியோப் படத்துடனும் நின்றுவிடாமல், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என நிறையவே உள்ளன. அவைகளை நீங்கள் வாசிப்பதால் வீட்டுச் சூழலே பெரும் அளவிலே மாறி விடுவதைக் காண்பீர்கள்.

04. Be involved:

நீங்களும் சம்பந்தப்பட்டிருங்கள். பாடசாலையில் என்ன நடக்கிறது, வகுப்பில் எதனைக் கற்பிக்கின்றார்கள், ஆசிரியர் எதிர்பார்ப்புக்களைப் பிள்ளை ஈடுசெய்கிறாரா, வீட்டில் செய்யுமாறு ஏவப்படும் வேலைக ளைக் கிரமமாகச் செய்கின்றாரா என்பதைத் தெரிந்து வைத்திருங்கள். பாடசாலைகள் நடத்தும் பாடவிதான இரவுகள், பெற்றார், ஆசிரியர் சந்திப்புக்களைத் தவறவிடாதீர்கள். மொழி விளக்கம் குறைவு என எண்ணாதீர்கள். மொழிபெயர்ப்பு வசதி செய்து தரும்படி பாடசாலை யைக் கேளுங்கள். மொழி பெயர்ப்பாளராகப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு செல்வதைத் தவிர்ப்பதையே நான் விரும்புகிறேன். வசதி உள்ளபோது அதைப் பிரயோசனப்படுத்த வேண்டும். பிள்ளையினை மொழி பெயர்ப்பாளராகக் கொண்டு போவதால் நிறைவான கலந்துரையாடல் சாத்தியம் இல்லை.

பிள்ளையின் பாடசாலைச் செயற்பாடுகளுக்கு நிறையவே ஆதரவு கொடுங்கள், அனுசரணையாயிருங்கள், வளமூட்டுங்கள். ஆனால்... தயவுசெய்து அவர்களுடைய வேலையை நீங்கள் செய்யாதீர்கள். எனக்குத் தெரியும் நம்மில் பலர் இத்தவறினைச் செய்கிறார்கள். ஏன் நான்கூடச் செய்துள்ளேன். சிறார்கள் கெட்டிக்காரர்கள், எமது உறுதியற்ற மனநிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் திறன் உடையவர்கள். கடைசி நேரத்தில் வந்து கழுத்தறுப்பார்கள். என்ன செய்வது பிள்ளையாச்சே என்று பேதைமனம் உதவவே முன்வரும். நாளாந்த வகுப்பு வேலைகளில் மாத்திரமல்ல, செயற்றிட்டங்களில் பெற்றோர்கள் நிறையவே பங்குகொள்வார்கள். அது மேல் வகுப்புகளாயிருந்தால், வேறொரு மாணவனுக்கோ, மாணவிக்கோ நாம் செய்கின்ற துரோகமாகும். தனது சுயமுயற்சியால் செயற்றிட்டம் ஒன்றினை ஒரு மாணவன் செய்யப் பெற்றோர் உதவியுடன் இன்னொருவர் சாதனை செய்வது ஏற்கக்கூடியது அல்ல. பல வருடங்களுக்கு முன்னர் நடந்ததாகப் பேராசிரியர் 'கல்கி' அவர்கள் சொன்ன ஒரு சம்பவம். கல்கி அவர்கள் ஆனந்தவிகடனில் ஆசிரியராய் இருந்தபோது, சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி ஒன்றினை நடாத்திப் பரிசு பெற்றோரின் பெயர்களையும் அறிவித்துவிட்டார். ஒருநாள் ஒரு வயதானவர் கோபாவேசத்துடன் கல்கியின் அலுவலகத்திற்கு வந்து, ஓவியப் போட்டியில் எனது மகனுக்கு ஏன் பரிசு கிடைக்கவில்லை, அவன் படம் மிகவும் நன்றாக இருந்ததே என்றாராம். கல்கி பொறு மையாக "இருக்கலாம் ஆனால் அதனிலும் சிறந்தவை போட்டிக்கு வந்தமையால், அவருக்குப் பரிசு கிடைக்கவில்லை என்றாராம்."

"அப்படி இருக்க முடியாது, இதனிலும் சிறப்பாகச் சிறுபிள்ளைகள் வரைய முடியாது" என வந்த பெரியவர் அடித்துக்கூறினார். கல்கி அவர்கள் "எப்படி உறுதியாக நீங்கள் அவ்விதம் கூறுகிறீர்கள்"என, வந்தவர் "அதை நான்தானே வரைந்தேன்" என்றார். "அதனால்தான், நாம் பரிசு கொடுக்கவில்லை" எனக் கல்கி சிரித்துக்கொண்டே கூறினாராம். இத்தகைய நிலை நம்மில் பலருக்கு வரலாம், பொய் பேசும் கூச்சம் தவிர்த்தோமாயின்.

05. Applaud the effort:

முயற்சியைப் பாராட்டுங்கள். நல்ல பெறுபேறுகளை மட்டுமே பாராட்டுவதுடன் நின்றுவிடாதீர்கள். கடின உழைப்பு, விடாமுயற்சி பாராட்டப்பட வேண்டியவை. பெறுபேறுகள் முக்கியமானவைதான், அவைதான் சமூக அங்கீகாரம் பெற வைப்பவை என்பதும் உண்மையே. கடினமான உழைப்பிற்கும், அர்ப்பணித்த விடாமுயற்சிக்கும் சிறந்த பெறுபேறுகள் சில சமயங்களில் கிடைக்காமல் போகலாம். முயற்சி பாராட்டப்படாவிட்டால் தோல்வி மனப்பான்மை வர வாய்ப்புண்டு. மேலும் முயற்சி மேற்கொள்ளாதுவிடும் மனப்பாங்கு ஏற்படலாம்.

பாராட்டுகின்ற பொழுது மேலெழுந்தவாரியான பொதுப்பாராட்டு உகந்ததல்ல. வெறுமனே அவரது சுயமதிப்பினை உயர்த்துவதற்காக அமைந்த பாராட்டாக அமையக்கூடாது. குறிப்பிட்ட அம்ச ரீதியான பாராட்டாக அமைய வேண்டும். "நீ இப்பகுதியில் மிகத் திறமையாகச் செய்திருந்தாய்" எனக் கருத்துக் கூறினோமாயின் அவருக்கும் தான் எங்கே இன்னும் திறமை காட்டலாம் என்பது புலனாகும்.

06. Allow mistakes:

தவறுகளையும் அங்கீகரியுங்கள். தோல்விகள் தவறுகள் கற்பதற்கு வந்தேற்படும் சந்தர்ப்பங்களே. எனவே தோல்விகள், தவறுகளைச் சகஜமாக்கப் பழகுங்கள். தோல்விகள் வெற்றி காண்பதற்குரிய படிகளே எனச் சித்தாந்தம் மேற்கொள்ளுங்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய வேண்டுகோள். "எனக்கு அப்பவே தெரியும், கொஞ்சம் கூடுதலாகப் படிப்பதற்கென்ன" சாதாரணமாய் எங்கள் வாயிலே வரும் வார்த்தைகள் அவர்களை நிறையவே சீண்டிவிடும். எனக்கு நிறையவே அனுபவம் உண்டு. தவிர்த்துக் கொள்ளுங்கள். இத்தகைய சந்தர்ப்பங் களிலே நம்மில் பெரும்பாலானோர் உபந்நியாசங்கள் செய்வதும் உண்டு. பிரயோசனம் இல்லை. வெறுப்பேற்றாதீர்கள். தோற்றுப் போவது நீங்களாகத்தான் இருக்கும். உபதேசம் இளைய தலைமுறையி னர் வெறுக்கும் ஒன்று. தேவையானால் கட்டளையிடுங்கள், ஒரு

சிறு துணுக்கு, Readers Digestல் வந்தது. சிறிது மாற்றியுள்ளேன். மூன்று பாதிரிமார்கள் சந்தித்தார்களாம். ஒவ்வொருவரும் தமது தேவால யத்தின் உள்ளே உள்ள வௌவால்களின் தொல்லை பற்றிக் கூறினார் களாம். நான் அவை எல்லாவற்றையும் பிடித்துச் சாக்கு ஒன்றில் போட்டுக் கட்டிப் பல மைல்கள் தூரத்திற்கப்பால் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தேன். நான் ஆலயத்திற்குத் திரும்பி வந்து பார்த்தால் அவ்வளவு வௌவால்களும் உள்ளே உள்ளன என்றார் முதலாவது பாதிரியார். "நான் துப்பாக்கியை எடுத்துப் படபடவெனச் சுட்டுத்தள்ளி னேன். புகை போனவுடன் பார்த்தால், கூரை முழுவதும் ஓட்டை, வௌவால்கள் எல்லாமே பழைய இடத்தில் தொங்கியபடி உள்ளன" என்றாராம் இரண்டாமவர் பரிதாபகரமாக. புன்முறுவலுடன் மூன்றாமவர் தனது சாதனையைக் கூறினார். நான் ஆலயத்தின் உள்ளே சென்று வௌவால்களை நிமிர்ந்து பார்த்து உபதேசிக்கத் தொடங்கினேன். சிறிது நேரத்தின் பின் கூரையைப் பார்த்தேன், ஒரு வௌவாலையுமே காண முடியவில்லை. பின் அவை இந்தப்பக்கமே வரவில்லை என்றார். உபதேசம் எவ்வளவு வேலை செய்கிறது என்பதைப் பாருங்கள்.

07. Respect their style:

அவரவர் போக்கிலேயே விடுங்கள். "இது என்ன இப்படி stereo வைப்பாட வைத்திருக்கிறாய். இந்தச் சத்தத்தில் எப்படிப் படிப்பாய். என்று நாம் பலமுறை சொல்லியிருப்போம். கல்வியாளர் கூட எந்த விதமான கவன ஈர்ப்புமற்ற அமைதியான சூழலே படிப்பதற்கு அனுசரணையானது எனக் கூறியுள்ளனர். ஆனால் எப்படியான ஒரு சூழல் பிள்ளைக்குக் கற்பதற்கு உயிர்த்துடிப்பானதாய் அமையும் என்பதை அவர்களே தீர்மானிப்பர். சிலர் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டுகூடக் கற்கும் திறன் உடையவர்கள். உங்களுக்கு நிறையவே அனுபவம் இருக்கலாம். மிக்க அமைதியான சூழலில், புத்தகம் ஒன்றின் பக்கம் ஒன்றினை மணித்தியாலக் கணக்கிலே பார்த்துக் கொண்டே இருந்திருப்போம். மண்டையிலே ஒன்றுமே ஏறியிருக்க மாட்டாது. சூழல் முக்கியமல்ல. மனம் லயிக்க வேண்டும். ஆகவே, அவர்கள் விரும்பிய பாணியிலே அவர்கள் கற்கட்டும்.

08. Don't forget morals:

சீரிய பண்பாடு பேணப்பட வேண்டும். எதிர்மறையான ஒத்த வயதுடையோர் தாக்கம் (Negative peer pressure) பயங்கரமானது. மிக்க கவர்ச்சிகரமானதாய், தன் வயப்படுத்தக்கூடியது. இதனைத் தாக்குப்பிடிப்பதற்கு எம் பிள்ளைகளுக்கு, பெற்றோரின் அனுசரணை மிக்க அரவணைப்பு அவசியம். குழந்தைப் பராயம் தொட்டே நெறி

பிறழா வாழ்க்கை முறை பெற்றோரால் கடைப்பிடிக்கப்படுதல் அவசியம். குடும்பத்தில் பெற்றோரின் தாம்பத்திய உறவு, அவர்கள் மற்றையோரிடம் பழகும் பாங்கு, அவர்களின் ஓய்வு நேரச் செயற் பாடுகள் ஆகியவை பிள்ளைகளால் அவதானிக்கப்படுகின்றன. சமய வாழ்க்கை, சமய நெறிமுறைகள் முக்கியமானவை எனக் கணிக்கப் படுகின்றன. எமது பாரம்பரியக்கலைகளில் ஏதாவது ஒன்றினை நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் என ஏதாவது ஒரு பாரம்பரியக்கலையை பிள்ளையைக் கற்க வைப்பதால் எதிர்மறை ஒத்த வயதுடையோர் தாக்கத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றும் சாத்தியம் உண்டு.

(மனோகரராசா பெயருக்கேற்ப மனோகரமானவர். கணனி செஸ்ஸில் சாதனை புரிந்த வளவனின் அப்பா என்பதுடன், எமது இனத்தின் மேம்பாடு பற்றி என்றுமே சிந்தித்தவண்ணம் இருப்பவர். அவர் வாசிக்கும் சஞ்சிகைகளில், தமிழர் பற்றி வந்தாலோ, தமிழ்ப் பிள்ளைகளுக்கு உதவக்கூடிய செய்திகள் வந்தாலோ, உடனே எனக்கு அவற்றினை அனுப்பிவைப்பார். TIME சஞ்சிகையும் அவர் அனுப் பியதே. நன்றிகள்.)

03

பிள்ளை வளர்ப்புமுறை காலத்தோடு மாற்றம் காணப்பட வேண்டும்

பிள்ளை வளர்ப்பு (child rearing) என்பது எமக்கு நாளாந்தப் பிரச் சினை. Kids are growing faster than ever. Whats happening to childhood? எனக் கட்டுரை ஒன்று "The Toronto Star" பத்திரிகையில் வந்தது. பலர் பார்த்திருக்கலாம். ரொறன்ரோ பல் கலைக்கழகத்தின் நோய்க் குறியியல் பேராசிரியர் மார்சல் டனேசி Marcel Daneshi, "சிறு பிள்ளைகள் வளரிளம் பருவத்தை (Teenagers) மிக வேகமாக அடைகிறார்கள். பின் அங்கே நீண்ட காலத்திற்குத் தங்கி நிற்கிறார்கள்" என்கிறார். ஆக்வே 13 வயதிற்கு மேற்பட் டோரை Teens என்கிறபோது 11, 12 வயதுடை யோரை Tweens என்கி றோம். 11, 12 வயதுடையோரில் வளரிளம் பருவத்தினராக உடலமைப்பிலே மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் பண்பாடு சார்ந்த மாற்றங்களை



அவர்களிடமிருந்து பெற்றுவிடுகிறார்கள். வளரிளம் பருவம் (Teenagers) என்பது பண்பாடு சார்ந்த தோற்றப்பாடு. ஆனால் கட்டிளம்பருவம் (Adolescence) என்பது உடலமைப்புச் சார்ந்தது. முன்னையதைச் சுலபமாக Tweens எனும் 11, 12 வயதுடையோர் பெற்றுக்கொள்ள முடியும். கட்டிளம் பருவம் என்பதுவே அவர்கள் வளர்கிறார்கள் என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

இன்றைய வளரிளம் பருவத்தினர் மின் கணினி யுகத்திலே பிறந்தது அவர்கள் அதிர்ஷ்டம். எனவே அவர்கள் மிகவும் வேகமாகவும் சுலபமாகவும் நிறைய விஷயங்களைத் தெரிந்துகொள்கிறார்கள். இதற்கு அனுசரணையாக அமைவது வீட்டின் வசதிகள். போதிய அளவு பணம் இருக்கின்றமையால் அவர்களது தேவைகள் ஈடு செய்யப்படுகின்றன. சில சமயங்களிலே வீட்டின் வசதியைப் பொறுத்து வெறுமனே தேவைகளாயிருப்பவை இன்றியமையாதனவாக மாறி விடுவதும் உண்டு. அடுத்து அனுசரணையாக அமைவது தொடர்புச் சாதனங்கள். தொலைக்காட்சியில் காண்பவை, கேட்பவை, வானொலியில் கேட்பவை 11, 12 வயது Tweens ஐ நிறையவே புடம்போட்டு விடுகின்றன. பொதுவாகவே Tweens (இரண்டும் கெட்டான் நிலை) வீட்டிலே உள்ள பெற்றோர்கள் அல்லது சகோதரர்களைச் சார்ந்திருக்கின்றமையால் ஒத்த வயதுடையோர் தாக்கம் (Peer Pressure) அவ்வளவாக இருக்க மாட்டாது. அவர்கள் தழுவ நினைக்கின்ற பண்பாடு சார் தோற்றப்பாடுகள் உடன்பிறப்புக்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் பெறக்கூடியவையாக அமையலாம்.

ஒரு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வளரிளம் பருவத்தினர் என்ற ஒரு வர்க்கம் இருப்பதாகவே சமூகம் எண்ணியதில்லை என்றால் 11, 12 வயதினரைப் பற்றி யாராவது சிந்தித்திருப்பார்களா? ஏன் ஒரு தலைமுறை காலத்திற்கு முன்னர்கூட எந்த ஒரு பெண் குழந்தையும் தனது தாய் தந்தையருடன் உடுப்பு எடுக்கச் சேலைக் கடைக்குச் சென்றிருப்பாரா? சென்றிருந்தாலும் அவர் சொல் பெரியவர் காதில் ஏறி இருக்குமா? எதை உடுப்பது எப்படி உடுப்பது என்பதைத் தீர்மானித்த பெற்றோரே, எதை எடுப்பது என்பதையும் தீர்மானித்தனர். நிலைமை இப்போது கணிசமான அளவு மாறிவிட்டது. அவர்களுடைய கருத்துக்கு மதிப்புக் கொடுக்கப்படுகிறது மாத்திரமல்ல சில வேளைகளில் தீர்மானமே அவர்கள் எடுக்கின்ற அளவுக்கு அவர்களுக்கு வலு அதிகரித்துள்ளது. 5, 6 வயதுப் பிள்ளைகள்கூட சில சமயங்களிலே வளரிளம் பருவத்தினர் போன்று கருத்துக்கள் தெரிவிக்கின்ற அளவுக்குப் போய்விட்டனர்.

தொலைக்காட்சி பற்றிய ஒரு உண்மையை இங்கு கூறியே தீரவேண்டும். இன்று பல குடும்பங்களை ஒரு சேரக்கட்டிவைக்கின்ற காரணி தொலைக்காட்சியே. சகல குடும்ப அங்கத்தவர்களும் வீட்டிலே ஒன்றாய் இருக்கின்றார்கள் என்றால் அது தொலைக்காட்சி முன்னால் தானே. வேடிக்கையாகச் சொல்வார்கள். ஒன்றாய் உடல் ரீதியில் உள்ளார்களேயன்றி உளரீதியாய் அல்ல. அவர்கள் கலந்துரையாடல் வெறுமனே விளம்பர நேரங்களில் மட்டுமே.

11, 12 வயதுப் பிள்ளைகள் தினமும் சராசரி 3 மணித்தியாலங்கள் வரை தொலைக்காட்சிக்கு முன்னால் செலவிடுகிறார்கள். இந்த மூன்று மணித்தியாலங்கள் என்பது விழிப்பாய் வீட்டில் இருக்கின்ற நேரத்தில் பெரும்பகுதி என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இங்கே ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ளல் அவசியம். தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்ந்திருக்கும் நேரம் எல்லாம் தொலைக்காட்சி பார்க்கும் நேரமாக அமையாது. பார்க்கின்ற நேரம் அமர்ந்திருக்கும் நேரத்தில் 2/3 நேரமாகவே அமையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆக தொலைக் காட்சி சிறார்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களில் நிறையவே மாற்றங்களைக் கொண்டு வருவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இங்கே ஒன்றினை வற்புறுத்திக்கூற வேண்டும். தொலைக்காட்சியால் நிறையவே அனுகூலமுண்டு. சிறப்பாகப் பிள்ளைகளின் வாய்வழிக் கிரகித்தல் (Oral Comprehension) உலக அறிவு போன்றவை முக்கியமானவை. எனவே 11, 12 வயதுச் சிறார்கள் விரைவிலே வளரிளம் பருவத்தினர் ஆகிவிடுகிறார்கள் என்றால் அதற்கு இன்றைய சமூகமே பொறுப்பாகி விடுகின்றது. நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. ஐக்கிய அமெரிக்காவிலே 17000 பெண் பிள்ளைகளிடம் எடுத்த ஆய்வின்படி, பெண் பிள்ளைகள் பூப்பெய்தும் அறிகுறிகள் 9 வயதிலேயே தெரிய ஆரம்பிக்கின்றன எனப்படுகிறது. இதனால் குழந்தைப் பருவம் படிப்படியாக அற்றுப் போய்விடுகிறது. தேசிய மக்கள்தொகை, உடனலவியல் ஆய்வின்படி கிடைக்கும் செய்திகள் மனநிறைவு தருபவையாக இல்லை. புகைத்தல் வீதம், கர்ப்பம் தரித்தல் வீதம், பாலியல் விவகாரங்களில் ஈடுபடுவோர் வீதம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வளரிளம் பருவத்தவரது இச் செயல்கள் Tweens ஐயும் பற்றிக் கொள்ளக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. எமது சிறார்கள் Razor's Edge (சவரக் கத்தி விளிம்பில்) நடக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பாய் வழிப்பயணத்தை முடிப்பது பெற்றோரின் வழிகாட்டலில் அதிகம் தங்கியுள்ளது. இதோ கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை ஒன்று...

பிறந்து வந்தபோது
நெஞ்சம் திறந்திருந்தது
பிள்ளையோடு தெய்வம்
வந்து குடி புகுந்தது
வயது வந்த பின்பு - நெஞ்சில்
மயக்கம் வந்தது - அங்கு
வாழ்ந்திருந்த தெய்வம் கொஞ்சம்
விலகிச் சென்றது.

தெய்வம் விலகிச் செல்வதற்கு யார், எது காரணம் என்பதை நாம் சிந்தித்தோமாயின் அதற்கு நிவர்த்தி காண முயல்வோமாயின் பெற்றோரியம் (Parenting - புதிய சொல்லாக்கம், நன்றி அலெக்சாந்தர்) பிரச்சினையாக அமைய மாட்டாது. 8, 9 வயதுடைய பாடசாலைச் சிறார்கள் பெற்றோர்களுக்கென ஆத்திசூடி ஒன்றினை ஆக்கியுள்ளனர். அதைப் பெற்றோர்கள் பின்பற்றினால் பெற்றோரியம் மிகச் சுலபம்.

அபிப்பிராயம் கூறல் ஆக்ஞையிலும் மேல்
ஆட்களுக்கு முன் குறை சொல்லேல்
இரைந்தொரு நாளும் பேசேல்
ஈதல் நன்றென்றும் நன்றல்ல
உறுதியுடன் சொல், இறுதிவரை நில்
ஊக்கம் கொடு, உதவ வராதே
எண்ணித் துணி, துணிந்தபின் எண்ணாதே
ஏன் இந்தப்பிழை என ஏசாதே ஒரு போதும்
ஐய, உன் நண்பன் போல் எனையும் பார்
ஒப்பீடு வேண்டாம்.
ஓதாதே ஒருநாளும் பொய் என்முன்னே
ஒளடதம் தேடேல், என் பிணியாவிற்கும்
அஃது உன்பிழையெனில், ஏற்பதற்கேன் தயக்கம்

01. என்னைக்கொண்டு ஒரு வேலை செய்விக்க விரும்பினால் கட்டளை இடவேண்டாம். அதற்குப் பதிலாக ஒரு அபிப்பிராயம் போலத் தெரிவித்தால் அவ் வேலையைச் செய்வதில் எனக்கு அக்கறையும் ஈடுபாடும் ஏற்படும். கட்டளையிடும்போது அவ்வேலையை உங்களுக்காக நான் செய்கிறேன். நான் வெறும் வேலையாளே. ஆனால் அபிப்பிராயமாக வரும்போது அவ்வேலைபற்றிய எனது கருத்தினுக்கு மதிப்புக் கொடுக்கப்படுவதால், நானும் பங்காளியாகிறேன். அதன் வெற்றி, தோல்வி என்னையும் பாதிக்கவுள்ளதால் அதனைச் சிறப்பாகச் செய்து முடிக்கவே நான் விரும்புவேன்.

02. பிழைகள் விடுவது மனித இயல்பு. நான் சிறுபிள்ளை, அனுபவம் போதாது, அறிவு காணாது, எனவே நான் நிறையவே பிழைகள் விடுவேன். உங்கள் மனதைக்கூட நோகடிப்பேன். ஆனால் நீங்கள் பொறுமைபேண வேண்டியது அவசியம். எனது குறைகளை நீங்கள் எடுத்துக்காட்டி, திருந்த வழிகூறி, நான் செவ்வனே செயற்பட உதவுவது உங்கள் கடமை. ஆனால் என் குறைகளை மற்றவர் முன் எடுத்துக்கூறி எனது சுய கௌரவத்தைப் போக்கடித்து விடாதீர்கள். எனது சுய கௌரவம் போனால் என் வாழ்வே போய்விடும்.

03. சொல்லுகின்ற எதனையும் அன்பாக மென்மையாகச் சொல்லுங்கள். இரைந்து பேசுவதால் என்னையும் அப்படிப் பேசவைத்துவிடுவீர்கள். உரத்த பேச்சு உறவின் சுமுகத்தைப் பாதிக்கும். வீட்டின் சூழலைப் பெரிதும் மாற்றிவிடும்.

04. நான் கேட்பது எல்லாவற்றையும் எப்பொழுதும் தந்துவிடாதீர்கள். சில சமயங்களில் இல்லை என்று திடமாகச் சொல்லும் மனப்பான்மை வேண்டும். நான் தொடர்ந்து கேட்பேன். உங்களிடம் எதுவரை பெறமுடியும் என்று தெரிந்துகொள்வதற்காகவே கேட்பேன். கேட்கக் கேட்கக் கொடுத்தீர்களோ அதற்கு ஒரு வரையறையே இல்லாது போய்விடும். உளவியலில் வலியுறுத்தல் (Reinforcement) என்பது கற்றலுக்கு வழி வகுக்கும் என்பர். ஒரு செயலை நிறைவேற்றும்போது அதனைப் பாராட்டும் வண்ணம் ஒன்றினைக் கொடுப்பது அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் எப்போதும் கொடுத்தால் வலியுறுத்தல் முக்கியத்தை இழந்துவிடும்.

05. என்னைக் கொண்டு ஒரு வேலை செய்விப்பதற்காக உபகாரம் தருவதாகச் சொல்லியிருந்தால் அந்த ஏவலை நீங்கள் சொன்ன பிரகாரம் செய்து முடித்தேன் என்றால் சொன்ன உபகாரத்தைச் செய்துவிடுங்கள். பின்போடுவதோ ஏமாற்றுவதோ எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். இதே போன்றவைதான் தண்டனையும். தண்டிப்பேன் என்று சொன்னால் தண்டனையை நிறைவேற்றியே தீரவேண்டும். பாவம் என இரங்கித் தண்டனையைக் குறைப்பதையோ ரத்துச் செய்வதையோ நான் உங்கள் தோல்வி என்றே எடுப்பேன். இதனால் இன்னொரு முறை அடிப்பேன் என்று கூறினால் அது வெறும் அர்த்தமில்லாத வார்த்தையாகவே அமையும்.

06. எனது வேலையை என்னையே செய்யவிடுங்கள். போதிய ஊக்கம் கொடுக்கலாம். மேற்பார்வை செய்யலாம். ஆனால் என்

வேலையை நீங்கள் ஒருபொழுதும் செய்து உதவாதீர்கள். (Home Work) வீட்டு வேலை நல்ல உதாரணம். எனக்கு அனுசரணையான சூழலை அமைத்துத் தந்து தேவையானவற்றை வாங்கித் தந்து ஓரளவிற்கு வேலையை மேற்பார்வை செய்து ஊக்குவிப்பதோடு உங்கள் கடமை முடிவுறுகின்றது. எனது வேலையை நானே செய்யவேண்டும். பிழைகள் ஏற்படலாம். அவற்றினைத் திருத்தலாம் அல்லது அதற்கான தண்டனையைப் பெறலாம். என் வேலை யினை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ நீங்கள் செய்துதந்தால், நான் என்றுமே திருந்தமாட்டேன்.

07. என்னிடம் ஒரு வேலை ஏவுவதாயின் முதலில் அதனைப் பற்றி உங்கள் மனதில் ஒரு படம்போடுங்கள். இதனை நான் செய்து முடிப்பேனா என்பது பற்றித் தீர்க்கமாகவே சிந்தியுங்கள். என்னிடம் வேலையைச் செய்யுமாறு ஏவியபின் தொடர்ந்து மாற்றங்களைச் செய்யாதீர்கள். அது உங்கள் திட்டமிடல் பற்றிக் குறைவாக என்னை எண்ண வைத்துவிடும். இதனால் வேறு சந்தர்ப்பங்களில் நீங்கள் ஏவும் வேலைகளில் பல மாற்றங்களை நான் கூறத் தொடங்கி விடுவேன்.

08. நான் செய்யும் வேலையில் எனது அனுபவக் குறைவினால் சில பிழைகள் விடலாம். விடுவேன். அப்பிழைகளைச் சுட்டிக்காட்டுங்கள். நான் திருத்திச் செய்ய முயல்வேன். தயவுசெய்து ஏன் அப்படிப் பிழைவிட்டாய்? என்று மட்டும் கேட்டு இம்சைப்படுத்தாதீர்கள். எனக்குத் தெரியாததால்தானே பிழை விட்டேன். ஏன் என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன். I don't know என்பது பல பிள்ளைகளின் வாயிலிருந்து வருவதைக் கேட்டிருப்பீர்கள்.

09. நான் உங்கள் பிள்ளைதான், அதற்காக என்னைச் சிறுமைப்படுத் தாதீர்கள். உங்கள் நண்பர்களை எப்படி மரியாதையாக நடத்துவீர் களோ அதே மரியாதையை எனக்கும் தருவதால் நீங்கள் குறைந்து போய்விடப்போவதில்லை. நீங்கள் என்னை உங்கள் நண்பன் போலப் பாவித்தீர்கள் என்றால், நானும் உங்களை எனது நண்பனாக அன்னியோன்யம் பாராட்டுவேன். எமக்கிடையே ஒளிவு மறைவு ஏற்படமாட்டாது. சுமுகமான உறவு மேலிட்டு நிற்கும்.

10. என்னுடன் ஒருவரையும் ஒப்பிட்டுப் பேசாதீர்கள். இன்னொருவரு டன் ஒப்பிட்டு நான் உயர்ந்தவன் என்று காண்பிப்பதால் இன்னொரு வரின் உணர்வுகளைக் கேவலப்படுத்தலாம். அதேபோன்று இன்னொருவருடன் ஒப்பிட்டு என்னைத் தாழ்த்தினால் என் சுயகௌரவம் பாதிக்கப்படுவதை என்னால் தாங்கமுடியாது.

எல்லோரும் ஒரே தன்மையுடையோராய் இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் ஆற்றல்கள் வெவ்வேறு துறைகளில் சிறப்பாய் அமையலாம். எனவே ஒருவருடன் ஒருவரை ஒப்பிடுதல் என்பது ஏற்கமுடியாதது.

11. என்னை வைத்துக்கொண்டு ஒரு நாளும் பொய் பேசுவதையோ அல்லது எவ்வளவுதான் உங்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தாலும் அதற்காக என்னைக் கொண்டு ஒரு பொய் பேச வைப்பதையோ ஒரு போதும் செய்யாதீர்கள். என்றும் என் உள்ளத்தே எழுந்தருளியிருக்கும் பூசைக்குரிய தெய்வம் நீங்கள். அந்தத் தெய்வம் தனது தெய்வாம்சத்தை இழக்குமாறு உங்கள் செயல்கள் அமையக்கூடாது.

12. எனக்கு வயிற்றுக் குத்து என்று நான் கூறினேன் என்றால் உடனடியாக அந்தரப்பட்டு மருந்து தேடவோ மருத்துவரிடம் போகவோ முனையாதீர்கள். இது நான் கையாளும் தப்பிக்கும் முறைகளில் ஒன்று. அதாவது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யாது தவிர்க்கவோ அல்லது குறிப்பிட்ட இடம் எங்கேயோ செல்லாமல் தவிர்ப்பதற்கோ நான் கையாளும் யுக்தி. உளவியல் சார் உடல்நோயாகக் (Psychosomatic disease) கூட இருக்கலாம். நான் உண்மைதான் பேசுவது போன்ற உணர்வு கூட என்னுள்ளே இருக்கலாம். ஆகவே உடனடி நிவாரணம், காண்பதற்கு முனையவேண்டாம். நீங்கள் ஒரு பிழை செய்துவிட்டீர்கள் என்றால் சால்ஜாப்புகள் கூறிச் சமாளிக்க முனையாதீர்கள். "நான் பிழை விட்டுவிட்டேன்" என்று நீங்கள் கூறுவதால் உங்களுக்கு ஒன்றும் குறைந்து விடப்போவதில்லை. மாறாக எனது உள்ளத்தில் உங்களைப் பற்றிய மதிப்பீடு மேலும் உயர்ந்து நிற்கும். உங்கள் பண்பு என்னையும் பற்றிக் கொள்ளும்.

8, 9 வயதுப் பிள்ளைகளுடைய அபிப்பிராயங்களையே சற்று விரிவுபடுத்தி இங்கே தந்துள்ளேன் என்பதை மீண்டும் வலியுறுத்து கிறேன். இதில் இருந்தே தெரியவில்லையா. இன்றைய சிறார்களில் உளவளர்ச்சி, நம் எதிர்பார்ப்புக்களைவிடப் பன்மடங்கு வேகத்தில் செல்கிறது என்று. பெற்றோர்கள் சிறார்களின் உளவளர்ச்சி வேகத்திற்கு ஈடு கொடுப்பது என்பது சுலபமான வேலையல்ல. நிறையவே சிந்திக்க வேண்டும். மற்றையோருடன் கலந்துரையாடி அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

04

மாற்றம் விளைவிக்கும் திறனுடைய எட்டு நிபந்தனைகள்

வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. - வள்ளுவர்

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

(கலைஞர் தெளிவுரை)

மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே என்கிறார் வள்ளுவர். ‘Child is a finished product by the age of five” என்கிறார் குழந்தை உளவியலறிஞர் Piaget. அதாவது ஐந்து வயதாகும் பொழுதே உளவியல் வளர்ச்சி முற்றுப்பெற்று விடுகிறது என்கிறார் பிஜாஜே. ஒரு அரும்பு, முகையாகி, மொட்டாகிறது. மொட்டு

மலராகிறது. அரும்பிலே வியத்தமடையாது காணப்படும் கூறுகள் முகையிலே வியத்தமடையத் தொடங்கி, மொட்டாகின்ற பொழுது அதன் எல்லாப் பகுதிகளுமே தோன்றிவிடுகின்றன. பின்னர் ஒன்றுமே புதிதாகத் தோன்றுவதில்லை. மலராகும்பொழுது ஏற்கனவே உள்ள கூறுகள் வெறுமனே வளர்ச்சியடைகின்றன. இதுபோன்றே ஒரு குழந்தை வளரும்போது ஏற்கனவே அங்கே உள்ள உடல் உளக் கூறுகள் வளர்ச்சியடைகின்றன என்கிறார் பிஜாஜே. வள்ளுவரும் பிஜாஜேயும் முரண்படுகின்றனரா? இல்லை. வள்ளுவர் சொல்லுகின்ற ஊக்கம் என்பது செயலாற்றும் துணிவார்வம். அந்தத் துணிவார்வத்தை உள்ளம் எப்படிப் பெறுகிறது? அதைப் பெறுவதற்குரிய நிபந்தனைகள் எப்போது - உருவாகின்றன என்பது பற்றியே பிஜாஜே கூறுகிறார்.

மனதிலே ஊக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எட்டு நிபந்தனைகளை மனவியல் அறிஞர்கள் (உளவியலறிஞர்) எடுத்துக் கூறியுள்ளனர். அவை...

01. உரித்தாதல் (Belonging)
02. கதாநாயகர் அல்லது பூசனைக்குரியோர் (Heroes)
03. வித்தக உணர்வு (Sense of Accomplishment)
04. பரபரப்பும் வேடிக்கையும் (Fun and Excitement)
05. துருவி ஆயும் பண்பும் படைப்பாற்றலும் (Curiosity and Creativity)
06. துணிகர முயற்சி உணர்வு (Spirit of Adventure)
07. தலைமைத்துவமும் பொறுப்புணர்வும் (Leadership and Responsibility)
08. செயலாற்றுதற்குரிய துணிவார்வம் (Confidence to take Action)

01. உரித்தாதல்:

சிறார்களுக்கு அங்கீகாரம் வேண்டும். இந்த அங்கீகாரம் பெற்றோர்களிடமிருந்தும், ஒத்த வயதுடையோரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. இளம்பராயத்திலே ஒத்த வயதுடையோர் தாக்கம் பெருமளவிலே இருக்கமாட்டாது. எனவே பெற்றோரின் அங்கீகாரம் நிறையவே உள வளர்ச்சிக்குக் காரணமாகிறது. உரித்தாதலைப் பொறுத்தமட்டிலே மூன்றாவது அங்கம் பேரன் பேர்த்திகள். நம்மவர்களிலே மெல்ல மெல்ல மேலைத்தேயப் பண்பாடு வந்து புகுவது உண்மையே என்றாலும் அனேக குடும்பங்களிலே பேரன் பேர்த்திகளும் கூட்டாகவே வாழ்கின்றனர். பேரப்பிள்ளைகள் ஓரளவு வளர்ந்த பின்னர் பேரன் பேர்த்திகள் வெளியேற்றப்படுவதும் உண்மைதான். பெற்றோர்களின் அங்கீகாரம் நிபந்தனையுடன் கூடிய அங்கீகாரம். பெற்றோர்கள் பிள்ளைகளிடம் சில எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதையே



அங்கீகாரத்திற்குரிய தகைமைகளாகக் கணிக்கிறார்கள். பேரன் பேர்த்திகள் அப்படி அல்ல. அவர்கள் காட்டும் அன்பு நிபந்தனைகள் அற்றது. எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமலேயே தாராளமாக அன்பைச் சொரிந்து அரவணைத்துச் செல்கிறார்கள். சில சமயங்களிலே பேரப்பிள்ளைகளுக்காகப் பெற்றோர்களுடன் வக்காலத்து வாங்குகிறார்கள். பெற்றோருடைய இளமைக்காலங்களைக் கூட ஞாபகப்படுத்தி பேரப்பிள்ளைகளின் சில செயல்களைக்கூட நியாயப்படுத்துகின்றனர். பேரப்பிள்ளைகளுக்கு நீதிக்கதைகள் சொல்லுதல், தேவாரம் சொல்லிக் கொடுத்தல் போன்றவற்றின் மூலம் எமது விழுமியங்களையும் சிறார்களுக்குப் புரியவைப்பதில் பேரன் பேர்த்திகள் ஈடுபடுகின்றார்கள் என்பதும் உண்மையே. ஆனால் அவர்கள் வளர்ந்து வளரிளம் பருவத்தினர் ஆகும் பொழுது நிலைமை தலைகீழாக மாறிவிடுவதைக்

காணலாம். பிள்ளைகள் வளரிளம் பருவத்தை அடைகின்றபொழுது பெரும்பாலானோரின் நடை, உடை, பாவனைகள் எல்லாமே மாறத் தொடங்குகின்றன. அவர்கள் விழுமியங்கள் பேரன் பேர்த்திகள் மனதில் இருந்து மாறுபடத் தொடங்குகின்றன. பெற்றோர்கள் இம்மாற்றங்களை ஏற்கின்றனர். பேரன் பேத்திகளோ இதனை அங்கீகரிக்கத் தயங்குகின்றனர். இந்த முரண்பாடு அவர்களுக்கும் பேரப்பிள்ளைகளுக்குமிடையே ஒரு இடைவெளியினை ஏற்படுத்தவே செய்யும். இது Role Reversibility கடமைக் கூறுத்திசைமாற்றம் எனப்படும். எனவே பேரன் பேர்த்திகள் ஒரு எல்லைக் கோட்டுடன் நின்று அன்பினைச் செலுத்துவது நன்று.

02. பூசனைக்குரியோர்:

கதாநாயகர் என்பதிலும் பார்க்கப் பூசனைக்குரியோர் என்பதே சிறந்த சொற்பிரயோகம். சிறார்கள் வளர்ந்துவரும் ஒரு கொடி போன்றவர்கள். கொடி ஒன்று தான் படர்வதற்கு அகப்படுகின்ற ஆதாரத்தைப் பிடித்துக் கொள்வது போன்று சிறார்களும் பூசனைக்குரியவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் மிக்க ஆர்வமுடையவராய் இருப்பர். இங்கு தொலைக்காட்சியின் பாதிப்பு நிறையவே இருக்கும். தொலைக் காட்சியில் வருகின்ற ஒருவர் செய்கின்ற சாகசங்கள் பெருமளவிலே அவர்களைக் கவர்ந்து விடுகின்றன. அங்கு காண்பது வெறும் நடிப்பு என்பதைப் பலர் உணர முடியாது போய்விடுகின்றனர். இங்கு Superman போன்று இந்தியாவிலும் முகேஷ் கன்னா என்பவர் தொலைக்காட்சியில் Superman ஆக நடிக்கிறார். Superman காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் எத்தனையோ பிள்ளைகள் மாடி வீட்டிலிருந்து கீழே குதித்து உயிரைப் போக்கியுள்ளார்கள்.

பூசனைக்குரியோரைச் சிறார்கள் காலத்துக்குக் காலம் மாற்றிக் கொள்ளவும் செய்வார்கள் என்பது உண்மையே. அவர்களின் ரசனை மாறுகின்ற பொழுதும், ஒத்த வயதுடையோர் தாக்கத்தின் ஆதிக்கத்தாலும் இது நடைபெறலாம். ஆனால் பெற்றோர் கொஞ்சம் சிரத்தை எடுத்துப் பூசனைக்குரியோரைப் பிள்ளைகள் தேர்ந்தெடுக்க உதவலாம். கொல்.'ப் விளையாட்டில் நாளைய இளம் புயல் கஜன் பாலசிங்கத்தின் பூசனைக்குரிய கதாநாயகன் Tigerwoods. இன்று பெண்கள் ரென்னிஸ் வீராங்கனை ஆக விரும்புகிறார்கள். பிறந்தவுடனேயே Martina Navaratilova போல வரவேண்டுமென எண்ணியே Martina Hingis என்ற பெயரை அவருக்குச் சூட்டி, ரென்னிஸை ஊட்டி வளர்த்தார் அவரது அன்னை. நான் சண்டிலிப்பாய் தமிழ்ப்பாடசாலையில் படிக்கும் பொழுது அங்கே தலைமை ஆசிரியராயிருந்தவர் சங்கானையைச்

சேர்ந்த நல்லதம்பி ஆசிரியர். மாணவருக்கு அடிப்பதில் ஒரு மன்னன். எப்படியோ அன்றைய எனக்கு அவர்தான் கதாநாயகர். ஆசிரியனாக வேண்டுமென்ற எண்ணம் அப்போதே உதயமானது. எனது ஆசிரிய விளையாட்டால், எங்கள் வீட்டுப் பனைகள் ஒன்றுமே என் பூவரசங் கம்பின் அடியிலிருந்து தப்பியதில்லை.

03. வித்தக உணர்வு:

சிறார்கள் எல்லோரும் ஒரே வேகத்திலோ, ஒரே சீராகவோ அறிவுத்திறன் விருத்தி காட்டுவதில்லை. பெரும் அளவிலே வேறு பாடுள்ளது. எனவே ஒரு பிள்ளையின் அறிவுத்திறனை இன்னொரு பிள்ளையின் அறிவுத்திறனுடன் ஒப்பிடுவது தவறு. எனவே ஒவ்வொருவரையும் அவரது ஆற்றலுக்கேற்ப எல்லை வகுத்து அதனில் சாதனை நடத்த ஊக்குவிக்கவேண்டும். இதனால் அவருக்குச் சாதனை நடத்திய வித்தக உணர்வு ஏற்படவே செய்யும். இதன் நிமித்தம் எல்லையைச் சிறிது சிறிதாக விசாலமாக்கலாம்.

சிறார்கள் தமது திறன்களை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அளவீடு செய்கிறார்கள். இதன் காரணமாக அவர்களது உணர்வுபூர்வ அனுபவங்கள் பாதிக்கப்படுவதுடன் அதே போன்ற சந்தர்ப்பங்களில் எடுக்கும் நடவடிக்கைகளும் பெரும் மாற்றத்திற்கு ஆளாகின்றன. Jigsaw Puzzle ஒன்றினை முழுமையாகச் செய்து முடித்தவுடன் "அம்மா இங்கே பாருங்கோ" என்று அழைக்கையில் அதன் முகத்திலே ஏற்படும் பரவச உணர்ச்சி சொல்லுந்தரமன்று. இந்த வித்தக உணர்வைப் பெற்றோர் உதாசீனப் படுத்தக்கூடாது. கூடிய ஊக்கம் கொடுத்தல் அவசியம். இதனால் அவர்களின் சுயகௌரவம் உயர வாய்ப்புண்டு. பொதுவாகப் பாடசாலை செல்வதற்கு முன் பிள்ளைகள் தமது சுய கௌரவம் பற்றி வைத்திருக்கின்ற மதிப்பீடு பாடசாலையில் சேர்ந்ததும் குறையும் சந்தர்ப்பம் உண்டு. Social Comparisons என்று கூறப்படும் சமூக ஒப்பீடு காரணமாகத் தமது ஆற்றல்கள், நடத்தை, தோற்றம் போன்றவற்றை மற்றையோருடன் ஒப்பிட்டுத் தம் சுயகௌரவ அளவீட்டைக் கூட்டியோ குறைத்தோ கொள்வார்கள். பெற்றோர்கள் இச்சந்தர்ப்பங்களிலே நிறையவே ஆதரவுகொடுத்து அவர்களின் சுய கௌரவம் இறங்காது பார்க்க வேண்டும். மற்றைய பிள்ளைகளுடன் ஒப்பிடாதீர்கள். வித்தக உணர்வு மேலோங்கச் செய்யுங்கள்.

04. பரபரப்பும் வேடிக்கையும்:

பரபரப்பும் வேடிக்கையும் இல்லாத வாழ்க்கை பெரியவர்களுக்கே சப்பென்று இருக்குமென்றால், எந்த நேரமும் ஓடியாடித்திரியும் சிறார்களுக்கு எப்படி இருக்கும். ஒவ்வொருவருமே வேடிக்கைப்

பேச்சுக்களையும், சிறு சேட்டைகளையும் ரசித்துச் சிரிப்பார்கள். மருத்துவ ரீதியாகவும் சிரிப்பது உடல் நலத்திற்கு நல்லது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பரபரப்புக்கும் வேடிக்கைக்கும் மிகச் சிறப்பாக நொடி, விடுகதை, புதிர் (Ruddles) போன்றவற்றைக் கையாளலாம். இதனால் கருத்துக்களோ எண்ணங்களோ புதிய முறைகளிலே பிரயோகிக்கப்படுகின்றன. இதனை Associate Thinking இணைவான சிந்தனை என்பார்கள். இத்தகைய வேடிக்கைகளைக் குடும்பமாகக் காரில் செல்லும்போது நடைமுறைப் படுத்தலாம். நாடுகள், ஊர்களின் பெயர்களை முதல் எழுத்தை வைத்துப் போட்டி போன்று பிள்ளைகள் சொல்வார்கள். இத்தகைய முயற்சிகளால் பிள்ளைகளின் படைப்புத்திறன் சிந்தனை (Creative Thinking) அதிகரிக்கவே செய்யும்.

05. துருவி ஆயும் மனப்பான்மை:

துருவி ஆயும் பண்பு சிறார்களிடம் நிறையவே உண்டு. ஏன்? எதற்கு? எப்படி? என மூன்று வினாக்களும் அதைச் சார்ந்த துணை வினாக்களும் அவர்களுக்கு அத்துப்படி. பெற்றோர் பொறுமை பேண வேண்டும். அவர்களுடைய வினாக்களை எமது சிந்தனை மட்டத்திலே வைத்து முட்டாள்தனமான வினா என மட்டந்தட்டவோ, உதாசீனம் செய்யவோ கூடாது.

படைப்புத்திறன் என்பது மற்றவர்களால் சிந்திக்கப்படாத வித்தியாச மான முறையிலே சிந்தித்துத் தனக்கே உரித்தானது ஒன்றினைச் செய்தலாகும். நாளாந்த வாழ்க்கையில் இப்படைப்புத்திறன் மிக முக்கியமானது. படைப்புத்திறன் இல்லாவிட்டால் புதிய கண்டு பிடிப்புகளோ, விஞ்ஞான முன்னேற்றங்களோ, கலை ஆக்கங்களோ, இலக்கிய முன்னேற்றங்களோ சாத்தியமில்லை. எனவே சிறார்களிடம் அடிப்படையிலே காணப்படுகின்ற படைப்புத்திறனை மெருகூட்டி, விருத்தி செய்யவேண்டியது பெற்றோர்கடன்.

இங்கே ஆச்சரியமான உண்மை ஒன்றினைக் கூறவேண்டும். மிகைபடைப்புத்திறன் உள்ள பிள்ளைகள் பலரின் புத்திக்கூர்மை ஈவு (Intelligent Quotient) குறைவாக இருக்கும் சாத்தியம் உண்டு. புத்திக்கூர்மை அளவீடுகள் பொதுவாக Convergent Thinking எனும் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையையே மதிப்பீடு செய்கிறது. அதன்படிக்கு ஒரு வினாவினுக்குச் சரியான விடை ஒன்று மாத்திரமே எனக் கணிக்கப்பட்டு அளவீடு செய்யப்படுகிறது. படைப்புத்திறன் உடையவர்கள் அப்படி அல்லாது ஒவ்வொரு வினாவுக்கும் சாத்திய மான பல விடைகளைத் தருவார்கள். இதனை Divergent Thinking

அல்லது பன்முக சிந்தனை என்போம். இரண்டு சிறு வட்டங்களைத் தாளில் வரைந்து ஒரு பிள்ளையிடம் கொடுத்து அதன் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வரையச் சொல்லிக் கொடுத்துப் பாருங்கள். எத்தனையோ அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வருவார்கள். அவர்களுக்கு நிறையவே படைப்புத்திறன் உண்டு. எமக்குத்தான் பொறுமை, நேரம் போதுமானதாயில்லை.

06. துணிகர முயற்சி உணர்வு:

நாம் சிறார்களாக இருந்தபோது செய்யவே துணியாத பல செயல்களை இன்றைய சிறார்கள் செய்கிறார்கள். அன்றைய காலத்திலே நம்மில் பலரை எமது தாய்மார்கள் கக்கத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டு எந்த ஒரு துணிகர முயற்சியிலும் ஈடுபடுவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்தார்கள். அவர்களின் பாசத்தைப் புலப் படுத்தும் முறை அத்தகையதே. இன்றைய சிறார்கள், உலக ஞானம் கூடுதலாகப் பெற்றுள்ளனர். தொலைக்காட்சிகளைப் பார்ப்பதால் உடலியக்கம் பற்றிய தெளிவான அறிவினை உடையோராக வளர்கின்றனர். எனவே, அவர்கள் எடுக்கின்ற துணிகர முயற்சிகளின் பலாபலன்கள் என்னவாக இருக்கும் என்று தெரிந்தே ஆரம்பிக்கிறார் கள். பெற்றோர் அவர்களைக் கண்காணிக்கலாம். கண்டிக்கத்தேவை யில்லை. அவர்கள் தோல்வியடைந்தால் நையாண்டி செய்தோ, எமக்குத் தெரியுமே என்றுகூறியோ அவர்களின் சுயகௌரவத்தைத் தாழ்த்த வேண்டாம். உன் முயற்சி அடுத்தமுறை வெற்றியளிக்கும் என்ற உற்சாக வார்த்தை முயற்சி உணர்வுக்கு ஆதாரமாக அமையும். சில வேளைகளில் அசாத்தியத் துணிவினால் அதிதீவிர முயற்சியில் ஈடுபட முனைவார்கள். அப்படிப்பட்ட துணிவார்வத்தைச் சாதுரியமாகத் தடுக்க வேண்டும். சில சிறார்கள் வயதுக்குமீறிய சாதனைகள் செய்துள்ளனர் என்பது உண்மையே. அதற்காகச் சில பெற்றோர்களே அப்படிச் செய்யுமாறு பிள்ளைகளை நிர்ப்பந்தப்படுத்துவதும் உண்டு. சென்ற வருடம் அமெரிக்காவிலே விமானம் ஓட்டிச் சாதனை புரிய வைக்கத்தன் பெண்குழந்தையை ஏவிவிட்ட தாய், குழந்தை, கணவர், பயிற்றுனர் ஆகியோரை இழந்த சோகம் பற்றி நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். கனடாவின் சோனியா ஜெயசீலன், பிரான்சின் மேரி பியர்ஸ் போன்ற ரென்னிஸ் வீராங்கனைகளின் தந்தைமார் கையில் தடியுடன் மைதானத் துக்கருகில் நிற்பார்களாம். பிள்ளைகள் இப்போது தந்தையை விட்டுப் பிரிந்தே போய்விட்டனர்.

07. தலைமைத்துவமும் பொறுப்புணர்வும்:

வீட்டினை விட்டுப் பிள்ளைகள் பாடசாலையில் சேருகின்ற பொழுது பெரிய சமூகச் சூழல் ஒன்றினில் தம்மையும் சேர்த்துக் கொள்கின்றனர். அந்த விசால மான கட்டமைப்பிலே தலைமைத்துவம் பெறுவது சற்றுக் கடினமே. அங்கே பல்வேறு குழுக்கள் தனித்தனியே இயங்கும். ஆகவே பெற்றோர்கள் வீட்டிலேயே பிள்ளைகளுக்கு நிறைய அவர்களுக்கேற்ற பொறுப்புக்களாகக் கொடுத்து, பொறுப் புணர்வுள்ளவர்களாகவும், தலைமைத்துவத்துக்கு வேண்டிய சில இயல்புகளைப் பெறக்கூடியவர்களாகவும் ஆக்குதல் அவசியம். வீட்டு வேலைகளிலே கூட்டுதல், சாப்பாட்டு மேசை ஒழுங்கு போன்றவற்றில் அவர்களிடம் பொறுப்பினை ஒப்படைக்கலாம். மீன் வளர்த்தல் மிக நல்ல பொழுதுபோக்கு. பொறுப்புணர்வுடன் நேரத்திற்கு உணவூட்டல் அவர்கள் விரும்பிச் செய்யும் ஒரு கடமையாய் அமையும்.

08. செயலாற்றுதற்குரிய துணிவார்வம்:

"பொருள்கருவி காலம் வினைகிடனோடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்" - வள்ளுவர்

ஒரு காரியம் செய்யும்முன் அதன் நோக்கம், அதற்கு வேண்டிய கருவிகள், செய்யவேண்டிய காலம், செயலின் தன்மை, செய்ய வேண்டிய இடம் ஆகிய ஐந்தையும் தெளிவாக அறிந்து செய்ய வேண்டும் என்றார் வள்ளுவர். ஏற்கனவே நாம் சொன்ன ஏழினையும் ஈடு செய்திருந்தால் எட்டாவதாகிய செயலாற்றும் துணிவார்வம் வரவே செய்யும். துணிவார்வமென்பது அசட்டுத்தனமான துணிச்சல் அல்ல, உள்ளத்திலே நிறையவே சிந்தித்தபின்னர் செயற்படும் பண்பு. வள்ளுவன் சொன்ன ஐந்து அம்சங்களையும் நினைவில் வைத்துச் செயற்படும் ஆற்றல். பின் என்ன வெற்றிமேல் வெற்றி வந்துகூடும். எப்படி? வரைபடம் கூறும்!

Levels of Achievement
100% I did
90% I will
80% I can
70% I think I can
60% I might
50% I think I might
40% What is it?
30% I wish I could
20% I don't know
10% I can't
0% I won't

05 செவிமடுத்தல் தொடர்புறுதல்



கணவன், மனைவி இருவரும் ஓர் இரவு உணவு அருந்துவதற்காக உணவகம் சென்றனர். உணவகச்சிப் பந்தியிடம் இருவருக்கும் ஆட்டிறைச்சிப் பிரியாணி கொடுக்குமாறு கணவன் பணித்தான். "ஏன் கோழிப் பிரியாணி எடுப்போமே. அதுவும் நல்லாத்தான் இருக்கும்" என்றார் மனைவி. "நீர் விருப்பம் என்றால் கோழிப் பிரியாணியை எடும். நான் ஆட்டுப் பிரியாணி சாப்பிடப் போகிறேன்" என்றார் கணவன். "இல்லையப்பா உங்களுக்கு......" என மனைவி கூறமுன் கணவன் பாய்ந்துவிட்டார். "வீட்டிலேதான் நீர் அவித்துப்போடுவதைச் சாப்பிட வேண்டும் என்ற தலைவிதி, இங்கேயாவது என் எண்ணப்படி சாப்பிடுவதா அல்லது வெளியே போவதா" என்றார். உள்ளே வரும்போது இருந்த சந்தோஷம், உல்லாசம் எல்லாம் போய்விட்டது. ஏதோ சாப்பிட்டார்கள். வீடு சென்றார்கள். இருவரிலுமே குறையில்லை. இருவரும் தொடர்புறலில் (Communication) செய்தியை (Message) கிரகித்

தார்களேயன்றி அதில் உள்ளார்ந்த செய்தியை (அனுசெய்தி metamessage) உணரத் தவறியதால்தான் இப்பிரச்சினை எழுந்தது. கணவனுக்கோ இதயக்கோளாறு உண்டு. மனைவிக்கு அவன் உடல்நலத்தில் அக்கறை. ஆட்டிறைச்சியில் கொழுப்பு அதிகம் என்ற ஆதங்கம். எனவே அதனைத் தடுக்க முனைகிறார். கணவனுக்கோ, வீட்டுக் கட்டுப்பாடுகளால் ஆசைக்குச்சாப்பிட முடியாத அவலம். எனவே, இங்கேயாவது நாக்கின் ருசிக்குச் சாப்பிடுவோமே என்ற வேட்கை. இருவருமே ஒருவரை ஒருவர் சற்றுப்புரிய முனைந்திருந்தால் இப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது. ஆங்கிலத்தில் "Reading between the lines" என்பார்கள். வாசகங்களுக்கு இடையே வெளி இருப்பதில்லை. அங்கேதான் அனுவாசகங்கள் உள்ளன. சொல்லாத ஆனால் உணர வேண்டிய வாசகங்கள் அவை.

பொதுவாக நாம் சிந்திக்கையில் நிமிடம் ஒன்றுக்கு 1000 முதல் 3000 சொற்கள் வரை சிந்திப்போம். ஒருவர் பேசும்பொழுதோ 125 முதல் 250 சொற்கள் வரைதான் ஒரு நிமிடத்தில் காதால் கேட்போம். மேலும் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவர் பேசும்பொழுது நாம் கேட்பதுபோல் பாவனை செய்தாலும் 75% நேரம் எமது மனம் பேச்சில் லயிக்காது. வேறேதேனும் பற்றிச் சிந்திக்கும், அல்லது அசட்டைசெய்யும் அல்லது கவனபேதமிருக்கும். எனவே ஒரு நிமிடத்திலே நாம் கேட்ட 250 சொற்களில் 60-65 சொற்களே சாதாரணமாக மனதில் பதியும் சாத்தியம் உண்டு. இப்போ, சிந்தித்துப் பாருங்கள் Reading between the lines என்பது பற்றி.

உற்றுக்கேட்டல் அல்லது செவிமடுத்தல் (Listening) நான்கு வகைப்படும் என்பர். அவை...

01. மக்கள் சார்பு செவிமடுத்தல் (People oriented listening)
02. செயல் சார்பு செவிமடுத்தல் (Action oriented)
03. பொருள் சார்பு செவிமடுத்தல் (Content oriented)
04. காலம் சார்பு செவிமடுத்தல் (Time oriented).

ஒரு சம்பவம் விபரிக்கப்படுகிறது என்று எடுத்துக் கொள்வோம். அச் சம்பவத்தைச் செவிமடுக்கின்றவர்களில் மக்கள் சார்பினர் - சம்பவத்துடன் சம்பந்தப்பட்டோர் அணிந்திருந்த உடை, கூடியிருந்தோர் என்ன செய்தனர் போன்ற விபரங்களைத் தெரிந்து கொள்வதிலேயே அக்கறை காண்பிப்பார்கள். செயல் சார்பினர் - நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றியே தெரிந்து கொள்வதில் அவாவுற்றிருப்பர். சம்பவத்தில் யாராவது பாதிப்புக்குள்ளானார்களா? நகர பாதுகாவலர் வரவழைக்கப் பட்டனரா? பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடைபெற்றது போன்றவை

பற்றிய செய்திகளுக்கே முன்னுரிமை கொடுப்பார்கள். பொருள் சார்பினர் - நடைபெற்ற சம்பவம் ஏற்பட்டதற்குரிய காரணம் யாது, எவ்விதமாக அச் சம்பவம் ஆரம்பமானது, அதற்குப் பின்னணியில் யாராவது உள்ளனரா? அப்படியாயின் யாராக இருக்கலாம் என்பவை பற்றி அறிய முனைவர். காலம் சார்பினர் - நடைபெற்ற சம்பவம் நடந்த காலம் பகலா, இரவா? காலையா, மாலையா? வானிலை எப்படி இருந்தது? மழையா, வெய்யிலா, பனிமழையா? என்பது போன்றவற்றைத் தெரிந்துகொள்ள முனைவர்.

எனவே, மக்கள் சார்பு செவிமடுத்துனர் ஒருவருக்கும் செயல் சார்பு செவிமடுத்துனர் ஒருவருக்குமிடையே சம்பாஷணை நடக்கின்ற பொழுது தொடர்புறல் (Communication) வெற்றியீட்டும் வாய்ப்பு அரிதாகவே தான் இருக்கும். பெரும்பாலான பெண்கள் மக்கள் சார்பு செவிமடுப்போராகவே உள்ளனராம். அதே சமயம் ஆண்களில் அதிகமானோர் பொருள் சார்பு செவிமடுப்போராக இருப்பார். இதனால் தானோ, மனைவிமார் சொல்லுவது கணவர் காதில் ஏறுவதில்லை. எனவே தாய்மார்களே, உங்கள் கணவன்மாரைக் கோபிக்காதீர்கள். அவர்கள் வேண்டுமென்று செய்யவில்லை. உளவியல்சார் உண்மையே தான் நிலைநாட்டப்படுகின்றது. பொதுவாகவே ஆண்களுக்குத் தமது ஆற்றல் பற்றி மிகையான (என்னைத் தவிர) அபிப்பிராயம். தம்மால் ஒரு சமயத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட விஷயங்களைச் செய்யமுடியும் என்ற (நான் கனடா வந்த காலத்தில் நான்கு வேலைகள் செய்தேன்) தளராத நம்பிக்கை. பத்திரிகையும் வாசித்தபடியே மனைவி கூறுவதையும் கேட்க முடியும் எனப் பல தடவைகள் பல கணவன்மார் செய்துகாட்ட முயன்றுள்ளனர். "ம்", "ம்" என்பதை விடச் சற்று விபரமான மீள ஊட்டலை (Feedback) எதிர்பார்க்கும் மனைவி கணவன் உதாசீனம் செய்கிறார் எனக்குற்றம் சாட்டுவதில் தப்பு இல்லை.

அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய மனைவி, "இன்று அலுவலகத்தில் ஒரு பெண் சொன்னார்" என்றார் தனது கணவனை நோக்கி, "என்ன சொன்னா" என்றார் கணவர். "இல்லை, எப்பொழுதும் ஒரு விஷயத்தை ஒருமுறை சொன்னாலேயே பெண்கள் சடுதியில் புரிந்து கொள்வார்களாம். ஆண்கள் அப்படி இல்லையாம். ஒரு முறைக்கு இருமுறை சொன்ன விஷயத்தைச் சொன்னால்தான் அவர்களின் மண்டையில் ஏறுமாம்" என்றார். "எங்கே எங்கே இன்னொரு முறை சொல்லும்" என்றாராம் கணவன்.

இங்கே ஒரு உண்மையை மிக்க சங்கடத்துடன் ஒத்துக்கேண்டே யாக வேண்டும். ஆண்கள் என்னை மன்னிப்பார்களாக(?) இன்டியானா

பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் Joseph T.Lorito என்பவர் அண்மையில் சில அவதானங்களைக் கூறியுள்ளார். அதன்படி, ஆண்கள் செவிமடுக்கின்றபோது தமது இடப்பக்கத்து மூளையைத்தான் பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். பெண்கள் இருபுறத்து மூளையையும் ஒரே சமயத்தில் உபயோகிக்கின்றனர். இதன் காரணமாக இரு கருத்துகள் கூறப்படுகின்றன. “பெண்கள் ஒரே சமயத்தில் இரு சம்பாஷணைகளைச் செவிமடுக்க முடியும்” என்கிறார் பேராசிரியர் லூறீற்ரோ. ஆனால் பெண்களைச் சிறந்த செவிமடுப்போராகக் கொள்வதற்கும் இல்லை எனக்கூறி ஆண்களின் கோபாக்கினியில் இருந்து தப்பித்துக் கொள்கிறார். ஆண்கள் செய்கின்ற அதே செயலைப் பெண்கள் செய்வதற்கு ஆண்கள் உபயோகித்த மூளைப் பகுதியிலும் கூடிய பகுதியைப் பெண்கள் உபயோகிக்க வேண்டியுள்ளது. இது பெண்கள் சிறந்த செவிமடுப்போராக இருப்பதைக் கடினமாக்குகிறது என லூறீற்ரோ சொல்கிறார். தொடர்புறல் என்பது ஆங்கிலத்தில் Communication எனப்படுகிறது.

Communication என்பது Communis எனும் லத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது. ‘Communis’ என்பதன் பொருள் பொதுவானது. நாம் ஒருவருடனோ, ஒரு கூட்டத்தினருடனோ தொடர்புறுகின்ற போது எம் இருசாராருக்கும் பொதுவான தளம் ஒன்றினை உருவாக்கி விடுகின்றோம். தொடர்புறல் நடைபெற மூன்று பிரதான மூலக்கூறுகள் அவசியம். அவை மூலம் (Source), செய்தி (Message), சேரிடம் (Destination) ஆகும். மூலம் என்பது தனிநபராகவோ அல்லது அமைப்பாகவோ அமையலாம். அங்கே இருந்துதான் செய்தி வெளி வருகின்றது. மூலத்தில் இருந்து வெளிவருவது பேச்சு, எழுத்து, படம், சைகை எனப் பல்வேறு வகைப்படலாம். அவை செய்தியாகச் செல்லுகையில் ஒலி அலைகளாகவோ வெறும் பத்திரிகையாகவோ அல்லது அர்த்தம் பொதிந்த வேறேனும் சுட்டுக்குறியாகவோ செல்கின்றன. செய்தி எவரை எதிர்பார்த்து அனுப்பப்பட்டதோ அவரை அடைதல் வேண்டும். அவருக்கேதான் செய்தியின் அர்த்தம் புரியும். வெறுமனே ஒலி அலைகளாகக் காற்றூடகத்தினால் எடுத்துச் செல்லப் படும் செய்தி சேரிடத்தை அடைந்ததும் அர்த்தம் பொதிந்ததாகி விடுகிறது. செய்தி பல சுட்டுக் குறிகளாகவே ஊடகத்தின் ஊடாகச் செல்கிறது. பின்னர் சேரிடம் அடைந்ததும் இச் சுட்டுக்குறிகள் (Signs) மீண்டும் ஒன்றுசேர்ந்து செய்தியாகின்றன. எனவே தொடர்புறல், நிகழ்விலே மேலும் இருபடி நிலைகள் ஏற்படுகின்றன. அவற்றினைக் குறியீடாக்கல் என்றும் குறியீடகற்றல் என்றும் அழைப்போம்.



செய்தியை மேலெழுந்தவாரியாக இரு வகையாகப் பிரிக்கலாம். அவை சொல் சார்ந்தவை (Verbal), சொல் சாராதவை (Nonverbal) ஆகும். சொல் சார்ந்த தொடர்புறலே மனித குலத்தின் தனித்துவம். ஒரு பாத்திரத்தில் மையினால் எழுதப்பட்டவையோ அல்லது காற்றில் கலந்துவரும் ஒலி அலைகளோ ஒவ்வொருவருடைய மூளையிலும் பிம்பம் ஒன்றைத் தோற்றுவிக்கிறது என்றால், அது ஒரு ஆச்சரியமான விடயமல்லவா? நாய் இல்லாத ஊரிலிருந்து ஒருவர் நம் நாட்டிற்கு வருகிறார் என வையுங்கள். அவர் நாயைப்பற்றி முன்பின் கேள்விப்படாதவர் எனக் கொள்வோம். அவர் முன்னே “நாய்”, “நாய்” என எத்தனை முறை நாயாய்க் கத்தினாலும், அவர் என்ன சொல்கிறாய் எனக் கேட்பாரேயன்றி அவர் மூளையில் நாய் பற்றிய பிம்பம் தோன்றவே மாட்டாது.

சொல் சாராத செய்திகள் என்பவை, சொற்கள் அற்ற முறையிலே அல்லது சொற்களுடன் கூட்டாக நாம் செய்தியொன்றினைப் பரப்புதற்குக் கையாளும் நெறிமுறைகள். அவை முகபாவனை, நிலைகோடல் (Posture), கை அசைவுகள், உடுத்திய உடையின் தன்மை, குரலின் தன்மை போன்றவை, தனித்தோ அல்லது சொற்களுடன் இணைந்தோ செய்தி ஒன்றினை வழங்க முடியும்.

தொடர்புறல் என்பது ஒரு வழிப்பாதையல்ல. இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் சம்பந்தப்பட்ட இருவழிப்பாதை. மூலத்தில் இருந்து பிறந்த செய்தி சேரிடம் போய்ச் சேர்ந்ததா? எதிர்பார்க்கப்பட்ட பிரதிவினை கிடைத்ததா என மூலத்திற்குத் தெரிதல் அவசியம். இது மீளவூட்டல் மூலம் சாத்தியமாகிறது. மீளவூட்டல் சொல் சார்ந்தவையாகவோ அல்லது சொல் சாராதவையாகவோ அல்லது வேறு செயல்களாகவோ அமையலாம். மீளவூட்டல் தொடர்புறல் தொடர்வதற்கும்

காரணமாக அமைவதுடன் சில நடத்தைகளை வலுப்படுத்தவும் (Reinforce) வேறு சிலவற்றை ஒழிப்பதற்கும் காரணமாகி விடுகின்றன. தமிழ் சினிமாவிலே தொப்புள் புராணம் தெரியும்தானே! அங்கே பம்பரம் விட ரசிகர்கள் ஆர்வமாய்ப் பார்க்க 'ஒம்லட்' சுடுமளவிற்குப் போனார்களே. அதேபோன்று கவுண்டமணி, செந்திலைத் தேங்காய்த் தலையன் என, ஏற்பட்ட வரவேற்பு ஒவ்வொரு படத்திலேயும் புதுப் புதுத் தலையனாக வைதாரே. இதுதான் வலுப்படுத்தல்.

சாதாரணமாகத் தொடர்புறுதலின்போது ஒருவர் ஐந்து பிரச்சினை களைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டிய அவசியம் உள்ளது.

01. அவர் தொடர்புறுகிறவர் (சேரிடம்) தனக்கு ஏற்றவர்தானா என்பதை முன்கூட்டியே தீர்மானித்துவிடல் வேண்டும். வள்ளுவன் அழகாகச் சொல்லியுள்ளான்.

"உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று" - *குறள் : 718*

சொல்வதை உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல், பாத்தியிலே நன்கு வளரும் பயிர்களுக்கு மேலும் நீர் பாய்ச்சுவது போன்ற பயன்விளைவிக்கும்.

02. பேசப்படுகின்ற விஷயம் சேரிடத்தை அடைதல் அவசியம். எனவே இடத்துக்குத் தகுந்த மாதிரிப் பாவிக்கும் சொற்கள், பிரயோகிக்கும் சைகைகள் அமைதல் அவசியம். இங்கேயும் வள்ளுவன் உதவிக்கு வருகிறான்.

"அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்" *குறள் : 711*

அவையிலே கூடியிருப்போரின் தன்மையை உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுபவர்களே ஒவ்வொரு சொல்லினதும் தன்மை உணர்ந்த நல்ல அறிஞர்கள்.

03. தொடர்புறலின் போது மற்றவருடன் நல்ல உறவினை ஏற்படுத்தக் கூடிய விதத்திலே செய்தியை வெளிவிடுகின்றோம். சுவாமி சுகபோதானந்தர், "அகமே, ரிலாக்ஸ் ப்ளீஸ்" எனும் தொடரில் எழுதியுள்ளதை வாசியுங்கள்.

"பதஞ்சலி என்பவர் யோகாசனக் கலையின் முன்னோடிகளில் முக்கியமானவர். அவரது 'யோகசூத்திரம்' வாழ்க்கையின் பல ஆழமான பரிமாணங்களை எடுத்துக் காட்டும்நூல். அதிலே அவர் கருத்து மாறுபாடு விவாதம் பற்றியும் விபரமாக எடுத்துச் சொல்லுகிறார்."

"ஒரு விஷயம் குறித்துக் கருத்துச் சொல்வதில் மூன்று விதமான அணுகுமுறை உள்ளதாக அவர் சொல்கிறார். முதலாவதாகத் தர்க்கம். இரண்டாவதாகக் குதர்க்கம். மூன்றாவதாக விதர்க்கம். தர்க்கம் என்பது, எது ஒன்றினாலும் அதைப்பற்றித் தனக்கென ஒரு கருத்தினை ஏற்படுத்திக் கொள்வது. (ஆனால் இங்கே எதிராளியின் கருத்துச் சரியென்றால் அதனை ஏற்க முடியும். தனது தான் சரியாக இருக்கும் என்ற முடிவான கருத்து இல்லை).

குதர்க்கம் என்பது தனது கருத்துத்தான் சரியென்று கருதி அதனை நிலைநாட்டப் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போவது. (எதிராளி எவ்வளவுதான் நியாயத்தை எடுத்துக்கூறினாலும், தனது கருத்தே சரியானது என்ற நிலைப்பாட்டிலே குதர்க்கவாதி இருப்பார்). விதர்க்கம் என்பது ஒரு பொருள் குறித்து, மாறுபட்ட கருத்துக்களைத் தன் மனத்திலே ஆராய்ந்து பார்த்துப் பேசுதல் (எதிராளியிடம் இருமாறுபட்ட கருத்துக்களையும் பெருந்தன்மையுடன் எடுத்துக்கூறி அவரது தீர்மானத்துக்கு விட்டுவிடலாம்).

விதர்க்க முறையே மற்றவருடன் நல்ல உறவினை ஏற்படுத்து வதற்கு உகந்த வழி. ஆனால் நம்மில் எத்தனைபேர் இதனைக் கையாள்கிறோம். நமது கருத்துத்தான் சரி, மற்றவர் அதனை ஏற்பதுதான் முறை என விதண்டாவாதம் புரிபவர்கள் அநேகர்.

04. அனாவசியமான வார்த்தைப் பிரயோகங்களைக் குறைத்துச் சொல்ல வேண்டியதை ஆணித்தரமாக நறுக்குத் தெறித்தது போலச் சொல்லிப்பெற வேண்டிய விளைவைப் பெற முயல வேண்டும். இதோ இன்னொரு பழைய பாடல். (சென்ற வருடமும் எழுதியுள்ளேன்) "ஆசாரக்கோவை" எனும் பதினெண் கீழ்க்கணக்கு நூலிலே பெருவாயின் முன்னியனார் கூறியது:

"விரைந்துரையார் மேன்மேல் உரையார் பொய்யாய
பரந்துரையார் பாரித்து உரையார் - ஒருங்கனைத்தும்
சில்லெழுத்தினாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லும் செவ்வி அறிந்து"

விரைவாகச் சொல்லப்படாது, மீண்டும் மீண்டும் சொல்லப்படாது, பொய்யான சொற்களைப் பரப்பி எடுத்துக்கூறப்படாது, சொல்ல வேண்டியதை நீட்டாமல் சிக்கனமாகச் சொல்லவேண்டும், கேட்போரின் தன்மையை அறிந்து அதற்கேற்பக் கூறவேண்டும். (இப்பாடலை பெரிதாக எழுதிக்கூட்ட மேடைகளிலே வைத்தால் என்ன எனப் பலர் எண்ணுவீர்கள்).

05. தொடர்புறலில் கருத்துகள் என்றும் மாறாத்தன்மையுடையவையாக அமையக்கூடாது. இரு முனைகளிலிருந்தும் இடைத்தாக்கம் (Interaction) அல்லது மீளவூட்டல் நடைபெற்றதன் விளைவாக ஆரம்பத் தில் தொடர்புறல் எந்தக் கருத்தினைப் புலப்படுத்த ஆரம்பிக்கப்பட்டதோ அதற்கு நேர்மாறான கருத்துடன் தொடர்புறல் முடியலாம். இதனை ஏற்கின்ற மனப்பக்குவம் அவசியம்.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களிலே முன்றுறையரையனார் எழுதியது "பழமொழி நானூறு", அதில் ஒரு பாடல்

கள்ள அகிலும் கருங்காக்கைச் சொல்லும் போல்
எள்ளற்க யார் வாயின் நல்லுரையைத் - தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாடா! நாய் கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு *(31)*

கருத்துச் சுருக்கம்: அறிவு குறைந்தோர் வாயிலிருந்து வந்தாலும் கூட அது பிழையென எள்ளி நகையாடாது அதன் தன்மையை உணர்ந்து பெரியோர்கள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் விளை வாக ஏற்கனவே உள்ள கருத்தில் மாற்றம் ஏற்படலாம்.

கணவன் - மனைவி, பெற்றார் - பிள்ளைகள், உற்றார் - உறவினர், நண்பர் - சமூகம், சக ஊழியர் - மேலாளர் என நாளாந்தம் பலருடன் தொடர்புறல் நிகழ்த்துகிறோம். ஆங்காங்கே கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் வேறுபடும். கண்ணியம் காக்க வேண்டும். உறவில் விரிசல் ஏற்படக்கூடாது. விரும்பிய விளைவு பெறவேண்டும். அனுப வமே சிறந்த ஆசான். 'தொடர்புறுதல்' என இங்கே குறிக்கப்பட்டுள்ளது, பேச்சு எழுத்து மூலமாகவோ வேறு ஏதேனும் முறையாலோ தகவல்களைப் பரிமாறிக்கொள்ளலாகும். சாதாரண தொடர்புறுதல் முறை தனி நபர் சம்பந்தப்பட்டதே (Personal Communication). இதன்மூலம் ஒருவர் தனது தேவை, உள்ளக் கிடக்கை, அறிவு, அனுபவம், உணர்வு, ஆதங்கம் போன்றவற்றைப் பரிமாறிக் கொள்கி றார். தொடர்புறுதலுக்கு மொழி அவசியம். மொழியென்பது வாய்ச் சொல்லாக அமையலாம் அல்லது உடற்கூற்று மொழியாகலாம். (Body Language) வெறுமனே ஒரு கண் அசைவும் வலுவான மொழிப் பிரவாகம் ஆகலாம். "An Action Speaks more than a thousand words" என ஆங்கிலத்தில் சொல்வார்கள். வாய் மூலம் சொல்கின்ற கருத்தினை வலியுறுத்த உடலசைவு, முகபாவ மாற்றம் நடைபெறுதல் இயக்கசார் மொழியாகும் (kinesics). ஆனால் வாய் பேசாதோர் கையாளும் சைகை மொழி பதிலாள் மொழியாகும் (Proxemics).

பெரியோர்களுடன் தொடர்புறுதல், வெகுஜனத் தொடர்புறுதல் பற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். இப்பொழுது வளரும் சிறார்களுடன் தொடர்புறுதல் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" குறள் : 90

இன்றைய இளைய தலைமுறையினரின் உள்ளம் அனிச்சத்திலும் மென்மையானது. சிறிது வித்தியாசமான உடற்கூறு மொழியே அவர்களது உள்ளத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடும். அவர்களுடன் தொடர்புறுகையில் தெளிவு மிகவும் அவசியம். குதர்க்கம் தவிர்க்கப்படல் வேண்டும். பொறுமை பேணப்பட வேண்டும். வள்ளுவன் மிக அழகுறச் சொல்கிறான், "அவை அறிதல்" எனும் அதிகாரத்தில்

"அவையறிந் தாராய்ந்து செல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்" குறள் : 711

அவையிலே கூடியிருப்போரின் தன்மையை உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுபவர்கள் தான் சொல்லின் தன்மையை உணர்ந்த அறிஞர்கள். இங்கே 'அவை' என்பதற்குப் பதிலாக இளைய தலை முறையினரை வைத்துப்பாருங்கள். அவர்களுடன் தொடர்புறும் வேளை யிலே, அவர்கள் தன்மைக்கு ஏற்ற சொற்பிரயோகம் இருந்தால்தான் தொடர்புறுதல் ஆக்கபூர்வமானதாக அமையும். அவர்களுடன் நாம் தொடர்புறுகின்றபோது தெரிந்தோ தெரியாமலோ சில தவறுகளை இழைத்து விடுகின்றோம். சீரான தொடர்புறுதலுக்குத் தடையாய் நிற்பவை சிலவற்றைக் குறிப்பிடலாம்:

01. உத்தரவிடல் - ஆணையிடல்:

"இதை நீ செய்" - "கட்டாயமாகச் செய்தே தீரவேண்டும்" போன்ற ஏவல்கள் பிள்ளைகளின் மனதிலே பய உணர்வினை ஏற்படுத்தலாம் அல்லது எதிர்க்கும் மனப்பான்மையை உருவாக்கலாம். செய்யாமல் விட்டால் என்ன செய்துவிடப்போகிறார் என்று பார்ப்போமோ எனும் சோதனை முயற்சியில் ஈடுபட வைக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாகப் பிள்ளையின் நடத்தையில் எதிர்க்கும் தன்மை ஏற்பட நிறையவே வாய்ப்புண்டு.

02. எச்சரித்தல் - அச்சுறுத்தல்

"இதை நீ செய்யாவிட்டால்... - தெரியும்தானே" "இதைச் செய்து விட்டுத்தான் போகவேண்டும், தெரியுமோ" இதற்கு அடிபணியும்

பிள்ளை பயந்தாங்கொள்ளியாக வளரலாம். இணங்கிப் போகின்ற மனப்பாங்குடையவராக அடிபணிந்து செயற்பட்டாலும்கூட ஆழ்மனதிலே வெறுப்புணர்வு, கோபம், எதிர்க்கும் தன்மை படியவே செய்யும். வேறு வேறு சந்தர்ப்பங்களிலே அவை தலைகாட்ட முடியும். சிக்கலான, அச்சுறுத்தும் சந்தர்ப்பங்களில்கூட சோதித்துப் பார்க்கும் எண்ணம் மேலெழுந்து நிற்கலாம்.

03. நீதிமுறை வகுத்தல் - அறிவுரை கூறல்

"நீ செய்ய வேண்டிய கடமை", "இது உனது பொறுப்பு" அப்போது இது என் கடமையின் கூறா?" என மனம் சிந்திக்கத் தொடங்குவதுடன், அதனைச் செய்து முடிக்காவிட்டால் மனத்திலே "குற்ற உணர்வு" ஏற்பட வாய்ப்புண்டு. வளர்ந்த பராயத்திலேகூடத் தன் சுயபொறுப்பு எது என்று தெரிந்துகொள்ளும் பகுப்பறிவு குன்றிவிடக்கூடும். அல்லது "அவர் யார் எனக்குச் சொல்வதற்கு" என்று தனது செயல்களை நியாயப்படுத்தவும் முயலலாம்.

04. அறிவுரை - தீர்வுகளைக் கூறல்

"இப்படிச் செய்தால் என்ன" - "நான் என்ன செய்வேன் என்றால்" இதன்படி செயற்படும் பிள்ளை தனது பிரச்சினையை உணர்ந்து அதற்குரிய பல்வேறு வகையான தீர்வுகளை மதிப்பீடு செய்து உகந்ததினைத் தெரிவுசெய்து செயற்படுத்தும் திறமை குன்றியவராகிறார். எதற்கும் மற்றையோரை நம்பியே வாழ முனைவார். செயற்படாதவர் எதனையும் எதிர்க்கும் மனப்பாங்கினைப் பெறுகிறார்.

05. இணங்குவித்தல் - தருக்கமுறை வாதிடல்

"சரிதான் ஆனால்..." "நீ இங்குதான் பிழைவிட்டுள்ளாய்" செயற்படுபவரில் தாழ்வுச் சிக்கல் ஏற்படலாம். தன்னில் ஏதோ குறைபாடு உள்ளதாய்க் கீழ்ச்சுயமதிப்பு உருவாகலாம். தன்னை நியாயப்படுத்தும் விதத்தில் வாதம் செய்து செயற்படாமல் விடுவதுடன், அவ்விடத்தையே விட்டு விலகிச் சென்று சொல்வதைச் செவிமடுக்காது போய்விடலாம்.

06. தீர்ப்புக்கூறல் - குறை கூறல் - குற்றம் சாட்டல்:

"நீ அறிவுபூர்வமாகச் சிந்திக்கவில்லை" "நீ சோம்பேறித்தனமாய்..." இத்தகைய கூற்றுகள் பிள்ளையின் தனித்துவத்தையே பாதித்துவிடும். சரியான தீர்ப்பு எடுக்கமாட்டாதவர், திறனற்றவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். "நான் எதற்கும் லாயக்கற்றவன்" என்று தன்னைத்தானே குறைகூறும் சுய பச்சாதாப உணர்வு மேலிடலாம். தொடர்புறுபவர் எதிர்மறையான தீர்ப்புகள் கூறுவதால் அவரோடு தொடர்புறுவதை

முற்றாகவே தவிர்க்க முனையலாம் அல்லது "நீர் என்ன திறமோ?" என எதிர்த்து வாயாடலாம்.

07. புகழ்தல் - இணங்குதல்

"நன்று! நீ மிகச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளாய்", "நீ சரியாச் சொன்னாய், அந்த ஆசிரியர் ஒரு முட்டாள்" இத்தகைய கூற்றுகள் ஏற்புடைய நடத்தையை (Desired Behaviour) மீள் வலியுறுத்தி விருத்தியுற வைக்க உதவுகின்றன. சொல்லுகின்றவர் பாராட்டுகின்ற அளவுகோல் கேட்கின்றவருக்குத் திருப்தியளிக்காத இக்கட்டான நிலையினை ஏற்படுத்தி அவருக்குப் பதகளிப்பு (Anxiety) ஏற்பட வைக்கலாம்.

08. நையாண்டி - ஏளனம்

"ஏய்! அழுகுணி / அழுமூஞ்சி" "உன் வேலை அழகாய்த்தான் உள்ளது" இவ்வித தொடர்புறல் ஒருவரைத் தன்னைப் பற்றிய அபிப்பிராயத்தைப் படுமோசமாய்க் கீழ்நிலைக்குக் கொண்டுசெல்லும் தன்மையது. நான் கையாலாகாதவன், என்னை எவருமே விரும்புகிறார்கள் இல்லை என்ற பரிதாப உணர்வு மேலோங்கும் அல்லது எதிர்மறை விளைவுகளாய் வாய்ச்சொல்மூலம் அல்லது உடற்கூறு மூலம் எதிர்க்கும் தன்மை வெளிவரலாம்.

09. பகுத்தாய்தல் - ஆய்வுறுதி செய்தல்

"நீ விட்ட பிழை என்னவென்றால்", "நீ அவ்விதம் எண்ணிச் செய்யவில்லைப் போலும்" பிள்ளைகளுக்கு ஒன்றைச் செய்வதற்கு இயற்கையாக ஆவல் ஏற்படாது. பிழை விடலாமோ என்ற பயமும் விரக்தி உணர்வும் ஏற்படலாம். தெரியாத்தனமாய் மாட்டிக்கொண்டேனோ, பிழையான முறையைக் கையாண்டதால் அகப்பட்டுவிட்டேனோ, என்னில் நம்பிக்கை இழந்துவிடுவார்களோ என்ற பயம் மேலிடலாம். இதன் காரணமாகத் தொடர்புறுதலையே தவிர்க்க முனையலாம்.

10. மீள் உறுதியளித்தல் - பரிவிரக்கம்

"போகுது, கவலைப்படாதே" "இப்போது என்ன போய்விட்டது என்று கவலைப்படுகிறாய்", "விட்டது சனியன்" தொடர்புறுபவர் உற்சாகம் ஊட்டுதற்காகக் கூறிய வார்த்தைகளை நியாயப்படுத்தலாகப் பிள்ளை ஏற்றுக்கொண்டு செய்த தவற்றினுக்காக மனவருத்தப்பட வேண்டிய தேவை இல்லை என்ற நிலையினை ஏற்கத் தொடங்கலாம். என்னைத் தப்பாக விளங்கிக் கொண்டு விட்டார்களோ என்று மனதில் குமையலாம். அதன் பிரதிபலிப்பாக வெறுப்புணர்வு காட்டும்

தன்மையான "உங்களுக்கென்ன சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்" என்பது போன்ற கசப்பான வார்த்தைப் பிரயோகம் வெளிப்படலாம்.

11. ஆழ்ந்தாராய்தல் - வினாவுதல்

"ஏன், ஏன்...?", "யார்...?", "நீ ஏன் அப்படி...?", "எப்படி...?" நிகழ்வுகளை ஆழ்ந்து ஆயும் நோக்குடன் பெற்றோர்கள் வினா எழுப்பும்பொழுது பிள்ளைகள் பதிலிறுப்பார்களானால் அது பெற்றோர் கள் குறை காண்பதற்குரிய தளமாகவோ அல்லது தீர்வுகளைக் கூறும் தளமாகவோதான் அமையும். எனவே, பிள்ளைகள் பதில்கூறாமல் தவிர்க்கப்பார்ப்பார்கள் அல்லது அரையும் குறையுமாக ஏதோ சொல்லித் தப்பிப்பார்கள் அல்லது முழுமையாகப் பொய்கூறி ஏமாற்றப் பார்ப்பார்கள்.

பொதுவாகவே பெற்றோர் வினா எழுப்புகின்றபொழுது அவர்க ளின் நோக்கம் பற்றி முழுமையாகத் தெரியாத பிள்ளைகள் தமது பிரச்சினையையே மறந்துவிடக்கூடிய அளவினுக்குப் பயமும், பதகளிப்பும் உடையோராய் இருப்பர்.

12. போக்குமாற்றல் - வசைகூறல் - விலகல்

"இப்போ நாம் வேறு சந்தோஷமான விசயங்கள் பற்றிப் பேசுவோம்", "அட! உலகத்தைப் பிரட்டிப் போட்டாயே", "என்னை விடு! கொம்மாவும் நீயும் பட்டபாடு" பெற்றோரின் நடவடிக்கை பிள்ளைக்குப் பிழையான வழிகாட்டலைத் தருகிறது. பிரச்சினைகள் ஏற்படுகின்றபொழுது அவற்றினை எதிர்கொண்டு தீர்வு காண்பதிலும் பார்க்கத் தவிர்ப்பதுவே சிறந்த வழி என எண்ண வைக்கிறது.

எனது பிரச்சினை என் அப்பாவிற்குப் பெரிதாகத் தெரியவில் லையே என்ற காழ்ப்புணர்வு மேலோங்கலாம். வளர்ந்த பின்னரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது திறந்த மனதுடன் அவற்றினை எதிர்கொள்ளும் பக்குவம் வராமலே போய்விடலாம்.

தொடர்புறுதல் செவ்வனே நடைபெறுவதற்குரிய தடைகள் இவைதான். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என நம்மவர்கள் கூறுவதுண்டு. பிள்ளை வளர்ச்சியின் உளவியல் தத்துவத்தை உள்ளடக்கிய அற்புதமான வாசகம். பிஜாஜே (Piaget) சென்ற நூற்றாண்டில் கூறிய - Child is a finished product by five - என்பதை நம்மவர்கள் எப்போதோ சொல்லிவிட்டார்கள். பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு அரும்பங்கேற்பது 'தொடர்புறுதல்' என்பதை நாம் உணரவேண்டும்.

எமது இலக்கியங்களில் இவை எல்லாமே உள்ளன. நாம் அவற்றினைக் கவனிப்பதில்லை. 'Old wine in new bottle' என ஆங்கிலத்திலே வந்ததும் ஆச்சரியப்படுவோம். அவற்றினைக் கைக்கொள்ள வேண்டும் என எண்ணுவோம். அவ்வளவே,

"அட பாவி! எல்லாமே தடைகள் என்று கூறுகிறாய் அப்படி என்றால் பிள்ளைகளுடன் நாம் தொடர்புறுதல் முடியாத காரியமா? எனச் சிலர் முனகுவதும், "அது தெரிந்தது தானே, நாம் பிள்ளைக ளுடன் கதைப்பதைக் குறைத்து அவர்களைத் தொலைக்காட்சியுடன் உறவாட விட்டுவிட்டு நாமும் நமது தொழிலுமெனத் திரிகிறோம்" எனப் புளகாங்கிதம் அடையும் இன்னொரு சாராரின் கெக்கலிப்பையும் கேட்கமுடிகிறது.

கஷ்டமான விசயம்தான். பெற்றோரியம் என்றால் சுலபமான தொழிலா? சற்றே ஏழாவதைக் கூர்ந்து வாசியுங்கள்! அது ஒன்றுதான் தொடர்புறுதலுக்கான சீரிய வழி. ஆனால் அளவுடன் நின்று கொள்ளுங்கள். வெற்றி உங்களதே!

06

அந்தநாள் ஞாபகம் வந்ததே நண்பனே!

சேரனுடைய "ஆட்டோகிராப்" படத்திலே ஒரு பாடல் ஞாபகம் வருகிறதா? ஆம், அந்தப் பாட்டுத்தான் ''ஞாபகம் வருகிறதே ஞாபகம் வருகிறதே'' பாட்டுத்தான். இந்த ஞாபகத்தினைத்தான் "நினைவாற்றல்" எனவும் கூறுவார்கள். ஞாபகம் என்பது அற்புதமான ஒரு கொடை. இது இல்லாவிட்டால் வாழ்வே மாயம். பல சமயங்களிலே எமக்கு இது இடர் பாதுகாப்பாகவும் அமைகிறது.

"அடடா! மறந்துபோய்விட்டேனே" என இந்த ஞாபகத்தில் பழியைப் போட்டு எத்தனைமுறை சில இக்கட்டுக்களில் இருந்து நாம் தப்பியுள்ளோம் என்பது ஞாபகம் வருகிறதா.

ஜெயலலிதா ஒருமுறை பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் அத்வானிக்கு தேர்வு ஞாபக மறதி (Selective Amnesia) உள்ளது எனக் குற்றம் சாட்டினார். தேர்வு ஞாபக மறதி என்றால் என்ன தெரியுமோ? அதுதான் சில நினைவுகளைத் தேர்ந்தெடுத்து மறந்து

விடுவது. இது அவ்வளவு சாத்தியமானதா? சுலபமல்ல. எத்தனையோ நினைவுகளை மனதில் இருந்து அகற்ற வேண்டும் என நாம் நாளாந்தம் அல்லாடிக்கொண்டு இருக்கிறோமே. அது சாத்தியமாயின் எமது வாழ்வு இன்னும் மகிழ்ச்சிகரமானதாயும் நிறைவானதாயும் அமையுமே.

இந்த ஞாபகம் என்கிற நினைவாற்றல்தான் என்ன? அந்த நாள் ஞாபகம் வருகிறதா? எந்த நாள்? அதுதான் - சின்ன வயதிலே தமிழ் வாத்தியார் "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்று வக்கணை வக்கணையாகச் சொல்லிச் சொல்லி "அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல்" என அடித்தடித்துச் சொல்லிக் கொடுத்தது. அடுத்தநாள், சொல்லடா எனக் கேட்கும்போது மறந்து போச்சு என்று சொன்னால் "மறதிக்கு மருந்து வாத்தியார் பிரம்பு" என்று பூவரசம் தடியால் வாட்ட அழுது அழுது பாடமாக்கினோமே. அப்போ "ஆத்திசூடி"யின் அர்த்தத்தில் ஏதாவது ஒரு மண்ணாவது விளங்கினதா?

எம்மை மனனம் செய்ய வைத்தது அர்த்தத்தின் ஈர்ப்பு அல்ல. உபாத்தியாயரின் அடி.

ஆனால் இன்றும் பசுமரத்தாணிபோல அவை எமது மனதிலே நிற்கின்றனவே. இன்றோ எமக்கு அறிவு வளர்ந்தது. அர்த்தம் புரிகிறது. அர்த்தம் எம்மை ஈர்க்கிறது. ஆனால் இந்த வயதிலே எத்தனைதான் நெட்டுருப் பண்ணினாலும் அடுத்தநாள் அவை மறந்துவிடுகின்றனவே. அர்த்தம் விளங்கினால் மனதிலே சுலபமாகப் பதியும் என்கிறார்களே, அர்த்தம் புரியாமல் நெட்டுருப் பண்ணியது இன்றும் நினைவில் நிற்க அர்த்தம் புரிந்து கற்றதன் அர்த்தம் நினைவில் நிற்கிறதேயன்றி அதனது மூலம் நினைவில் நிற்க மறுக்கிறதே. இதற்கு என்னதான் காரணம்?

ஒரு சமயம் கணவர் ஒருவர் தனது மனைவியை வைத்தியரிடம் அழைத்து வந்தாராம். இவருக்கு ஞாபக மறதி அநியாயத்துக்கு உள்ளது. குடும்பம் நடத்துவதே எனக்குக் கஷ்டமாக உள்ளது என்றாராம். பெண்மணி நடுத்தர வயதுடையவர். சுகதேகியாகக் காணப்பட்டார்.

அவருக்கு ஞாபகமறதி இருக்கக்கூடிய சாத்தியங்கள் மிகக்குறைவு என்றே வைத்தியர் எண்ணினார். எதற்கும் கணவன் கூறுகின்றமையால் பரிசோதித்துப் பார்த்துவிடலாம் என எண்ணினார்.

அப்பெண்மணியிடம் "இந்த அறையில் உள்ள மூன்று பொருட்களின் பெயர்களை இப்போது கூறுகிறேன். அவை கதிரை, மேசை, மணிக்கூடு. நீங்கள் இவற்றினை ஞாபகம் வைத்திருங்கள். ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் நான் கேட்கும்போது அப்பெயர்களைக்

கூறவேண்டும்" என்றாராம். பெண்மணி, "ஆம்" என்றார். ஐந்து நிமிடங்களின் பின்னர் ஒருவர் அதனைத் திரும்பக்கூறுவாராயின் அவருக்கு ஞாபக மறதி இல்லை என அனுமானிக்கலாம். ஐந்து நிமிடங்களின் பின்னர் வைத்தியர் அப்பெண்மணியைப் பார்த்து, எங்கே நான் முன்னர் சொன்ன பொருட்களின் பெயர்களைக் கூறுங்கள் என்றாராம். அப்பெண்மணி வைத்தியரைப்பார்த்து "நீங்கள் யார், என்ன பொருட்கள் பற்றிப் பேசுகிறீர்கள்" எனக் கேட்டாராம். எப்படி இருக்கிறது இது. கதையல்ல நிசம். அப்பெண்மணிக்கு வைத்தியரைக் காணத்தான் வந்ததேகூட மறந்து போய்விட்டது.

நினைவாற்றல் என்பது உயிர்வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது. மனிதருக்கு மாத்திரமல்ல விலங்குகளுக்குமே அது தேவை. "சூடு கண்ட பூனை அடுப்படிப் பக்கம் போகாது" என்பது நீங்கள் கேள்விப்பட்டதுதானே. பூனைக்குப் பட்ட அனுபவம் அல்லது பட்டறிவு நினைவில் நிற்கும்வரை சூடான பாலைக் குடிக்கத் துணியமாட்டாது. எல்லா விலங்குகளுமே கற்கின்றன. தமது சொந்த அனுபவத்தால் கற்கின்றன. அல்லது மற்றது செய்வதைப் பார்த்துக் கற்கின்றன. இது அனுபவக்கல்வி. எமக்கு நாம் கற்றதாலும் பெற்றதாலும் (பட்டறிவு) ஏற்பட்ட அனுபவங்கள்தான் எமது வாழ்வை வழி நடாத்துகின்றன. அவை அறிவுசால் கல்வியும் அனுபவக்கல்வியுமாகும்.

அறிவுசால் கல்வியும், அனுபவக்கல்வியுமே எம்மை வழிநடத்துகின்றன என்கிறோம். சாதாரணமாக எமது புலன் உறுப்புக்களின் அவதானத்துக்கு ஆளாகாத எந்த ஒரு விசயத்தையும் நாம் நினைவாற்றலிலிருந்தே பெற வேண்டும். ஒரு விசயத்தை நாம் கற்பதற்கு அல்லது அனுபவிப்பதற்கு ஒரு நொடிப்பொழுது போதுமானதாக இருக்கலாம். ஆனால் அந்த அறிவோ அனுபவமோ நமது நினைவில் நின்று நமது வாழ்நாள் முழுவதும் வழிநடத்த உதவுகின்றதே. அதற்குக் காரணமாய் இருப்பது நினைவாற்றல் அன்றோ.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு." - *குறள் : 396*

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக்கொண்டே இருக்கும் என்கிறார் வள்ளுவர். படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டுபோகும் என்றால் ஒவ்வொரு முறையும் கற்ற கல்வி ஒரு இடத்தில் நிலையாகத்தேங்கி நிற்றல் வேண்டும். அப்படி நிற்பதுதான் நினைவாற்றல். அது எங்கே நிற்கிறது?

மூளை என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். மூளையில் எங்கோ, எப்படியோ நினைவாற்றல் தேக்கி வைக்கப்படுகிறது. நினைவாற்றல் ஒன்றின் உயிர் இரசாயன அமைப்பினை அகப்பதிவு (Engram) என அழைப்பார்கள். ஆரம்பத்தில் இந்த அகப்பதிவு மூளையின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லாமல் சீராக எங்குமே வியாபித்திருக்கும் எனச் சொல்லப்பட்டது. இதனைச் சம வலுவுடைமை (Equipotentiality) என அழைத்தார்கள். ஆனால் இக்கருத்தினை இன்றைய ஆய்வாளர்கள் நிராகரிக்கிறார்கள். அவர்களின் கருத்துப்படி நினைவாற்றல்கள் மூளையின் வெவ்வேறு மட்டங்களிலே தேக்கி வைக்கப்படுகின்றனவாம். சிக்கல் வாய்ந்த நினைவுகளாயின் கூடுதலான இடங்களிலே தேக்கி வைக்கப்பட்டு மீண்டும் நினைவு கூரும் தருணத்திலே எல்லா இடங்களிலிருந்தும் வந்து ஒன்றுகூடுகின்றன என்கிறார்கள்.



ஆனாலும் கொஞ்சம் பக்கத்திலே உள்ள படத்தை எட்டிப் பார்க்கிறீர்களா?

அது எமது மூளையின் நெடுக்கு வெட்டுமுகத் தோற்றம்.

அங்கே உள்ள கூம்பு வடிவான அமைப்புத் தெரிகிறது அல்லவா. அது தண்டுரு (Thalamus) எனப்படுகிறது. அதற்குப் பின்னாலே வளைந்து அரிவாள் போன்ற அமைப்பில் உள்ளதே. அதனைக் கடற்குதிரை (Hippocampus) என்றே அழைக்கின்றனர். இவை இரண்டு பகுதிகளும் நினைவாற்றலோடு பெரிதும் சம்பந்தமுடையவை. ஹிப்போகாம்பஸ் பிரதானமாக கற்றலுடன் சம்பந்தமுடையது. கற்றலுக்கு நினைவாற்றல் பெரிதும் உடந்தையாகிறது.

கற்றல் இரண்டு கட்டங்களிலே நடைபெறுகிறது. முதலாவது ஆரம்பச் செயற்பாடு நினைவாற்றல் (Initial working memory) அதனைத் தொடர்ந்து நீண்டகால நினைவாற்றல் (Long term memory).

உதாரணமாக, நீங்கள் தொலைபேசி அழைப்பினைச் செய்ய வேண்டியுள்ளது. தொலைபேசி அட்டவணைக் கையேட்டில் தொலைபேசி எண்ணைப் பார்த்துக் கொண்டு வந்து அந்த எண்ணினை அமுக்கிப் பேசுகிறீர்கள். கை ஏட்டினில் பார்த்த எண் தொலைபேசியில் அழுத்தித் தொடர்பினை ஏற்படுத்தும் வரைக்கும் நினைவில் நிற்கிறது. அதன் பின்னர் மறந்துவிடுகிறது. இதனையே ஆரம்பச் செயற்படு நினைவாற்றல் என்கிறோம்.

இந்தத் தொலைபேசி எண்ணினைத் தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருக்கிறோம். அப்பொழுது கைநூல் இன்றியே அந்த எண்ணினை அழுத்தும் திறன் வந்துவிடுகிறது. ஏறக்குறைய நிரந்தரமாகவே அந்த எண் எமது நினைவாற்றலில் புகுந்துவிட்டது.

"என்னப்பா, என்னைத் தெரியவில்லையா? நான்தான் உன்னோடை ஐந்தாம் வகுப்பிலே படித்த நாகலிங்கம்" என்கிறார் உங்களிடம் வந்த ஒருவர். நீங்கள் பேந்தப் பேந்த விழிக்கிறீர்கள். அட என்னப்பா ஒரு பீடிகுடித்துப் பிடிபட்டு சின்னப்பு வாத்தியாரிடம் இருவரும் அடிவாங்கினது. ஞாபகம் இல்லையா? என்கிறார் நண்பர். அட அந்த ஓட்டைப்பல்லு நாகலிங்கம் எண்டு சொல்லு.

50 வருடமாப் போச்சு எனக்கூறிப் பழைய கதைகள் பேசுகிறிர்கள். இத்தகைய நிகழ்ச்சிகள், சம்பவங்கள், முகங்கள் பற்றிய நீண்டகால நினைவாற்றலைத் தெளிவான நினைவாற்றல் அல்லது சம்பவ நினை வாற்றல் (Explicit memory or Fact memory) என்போம். இத்தகைய நினைவாற்றல்கள் காலப்போக்கிலே மெல்ல மெல்ல மறைந்து போவதுண்டு.

நீச்சல் கற்றுக் கொள்கிறோம், நடனம் கற்கிறோம். எத்தனை வருடமானாலும் நாம் கற்றது மறந்து போவதில்லை. இந்த வகை நீண்டகால நினைவாற்றலை முழுமனதான நினைவாற்றல் அல்லது தொக்கிநிற்கும் நினைவாற்றல் (implicit memory) என்போம். என்னப்பா, நினைவாற்றல் பற்றியே சொல்கிறாய், ஞாபக மறதி பற்றிச் சொல்ல வில்லையே என்கிறீர்களா?. அடடா! மறந்தே போய்விட்டேன், ஞாபகப் படுத்தி அடுத்த பக்கத்தில் சொல்கிறேன்.

07

நினைக்கத் தெரிந்த மனமே... உனக்கு மறக்கத் தெரியாதா?

சில நினைவுகளை நாம் மறக்க விரும்புகிறோம். முடிவதில்லை. சில நினைவுகளை நாம் பேண விரும்பு கிறோம். தவறி விடுகிறது. மறதி என்பது நாம் கற்றதனை அல்லது பெற்ற அனுபவத்தை வேண்டிய போது மீண்டும் நினைவுகூரமுடியாது போதல் ஆகும்.

எவராலும் எல்லா அனுபவங் களையும் கற்றவை யாவற்றையும் எல்லா நேரங்களிலும் நினைவு கூருதல் சாத்தியமில்லை. வயது, காலம், முக்கியத்துவம் போன்றவை நினைவுகளின் மறைவிற்குக் காரண மாகின்றன.

நாம் ஏற்கனவே நீண்டகால நினைவாற்றல் பற்றிக் கூறியுள்ளோம். எந்த ஒரு நிகழ்வோ தகவலோ அந்த நீண்டகால நினைவாற்றலில் பதியப் படாவிட்டால் மறப்பதற்கு அதிக சாத்

தியக்கூறு உள்ளது எனலாம். மறதி என நாம் கூறுகின்றபோது மூன்று நிலைகள் கூறலாம்.

01. நினைவு கூரலுக்குத் தலையீடாக இருக்கும் விளைவுகள்
02. மறதி
03. நீண்டகால மறதி

01. நினைவு கூரலுக்குத் தலையீடாக இருக்கும் விளைவுகள்

நாம் நீண்டகால நினைவாற்றலிலிருந்து ஏதாயினும் ஒன்றினை நினைவுகூர முயல்கையில் அதற்குச் சில சம்பவங்கள் தடையாக அமைகின்றன. உங்களுக்குப் புதிய தொலைபேசி எண் வந்துள்ளது என வையுங்கள். இப்போ அந்தப் புதிய எண்ணினை நினைவுகூர முயல்கிறீர்கள். ஆனால் உடனடியாக உங்கள் ஞாபகத்திற்கு வருவது உங்களது பழைய தொலைபேசி எண்ணே. சிறிது காலத்தின் பின்னர் நிலைமை மாறலாம். ஆனால் அதுவரைக்கும் உங்கள் பழைய தொலைபேசி எண் புதிய தொலைபேசி எண்ணினை நினைவு கூருவதற்குத் தடையாக அமைகிறது.

இப்படித்தான் புதிய காதலி அல்லது மனைவி வந்த பின்னரும் பழைய காதலியை மறக்கமுடியாமல் அவஸ்தைப்படுவது உண்டல்லவா. (தேவர் மகன் படம் பார்த்தீர்கள்தானே. கமல் ரேவதியிடம் கௌதமியை மறக்கச் சிறிது காலம் எடுக்கும் எனச் சொன்னது ஞாபகம் வருகிறதா?) இதனை முன் செயற்பாட்டுத் தலையீடு (Proactive interference) என்பார்கள். இதற்கு நேர்மாறாக உள்ளது பின்செயற்பாட்டுத் தலையீடு. இங்கே புதிய தொலைபேசி எண் தொடர்ந்து உபயோகிக்க உபயோகிக்க அது பரிசயமாகிவிடுகிறது. இதனால் பழையது படிப்படியாக நினைவிலிருந்து மறைகிறது. இதனால் எமது மனத்தொடர்பு புதிய எண்ணிற்கே வலுப்பெறுகின்றது. இதனால் பழைய எண்ணினை நினைவுபடுத்த முனைகையில் முதலில் ஞாபகம் வருவது புதிய எண்ணாகவே இருக்கும். பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக வழக்குத்தானே. இதனைப்பின் செயற்பாட்டுத் தலையீடு (Retroactive interference) என்பார்கள்.

02. மறதி:

மறதி (Forgetting) என்பது வயதின் காரணமாக ஏற்படலாம். சில அனுபவங்கள், திறன்கள் நீண்டகாலத்திற்கு நினைவுகூராமல் விடப்பட்டால் நினைவிலிருந்து அகற்றப்படலாம். ஆனால் அவை முற்றாகவே இழந்துவிட்ட அனுபவங்கள் எனக்கூறமுடியாது. ஆழ் மனதிலே இருக்கவே செய்யும். யாராவது ஒருவர் அதைப்பற்றி

ஞாபகப்படுத்துகின்றபொழுது மீண்டும் நினைவுக்கு வரலாம். அல்லது ஏதாயினும் ஒரு தொடர்பான சந்தர்ப்பம் அந்த அனுபவத்தை நினைவுக்குக் கொண்டுவரலாம்.

அண்மையிலே சுவிஸ் நாட்டின் தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனம் ஒன்று மூளையில் PP1 எனும் நொதியம் ஒன்று சுரக்கப்படுவதாகவும், அதுவேதான் மூளையில் பதியப்படுகின்ற செய்திகளை நினைவில் இருந்து அகற்றுவதாகவும் சொல்லியுள்ளது. எனவே வெகுவிரைவில் அந்த நொதியத்தின் தொழிற்பாட்டினை செயலிழக்கச் செய்யக்கூடிய இரசாயன மாற்றங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பார்கள் என்பது உறுதி.

சில சமயங்களிலே மறதி ஏற்படுவதிலும் பார்க்க ஞாபகம் திரிக்கப்படுவதுண்டு. ஏதாவது ஒரு சம்பவத்தை நம் கண்களால் பார்த்து அது நமது மனதில் படிந்து கொள்கிறது. பின்னர் தொடர்ந்து அச்சம்பவம் பற்றி முரணான செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இதன் விளைவாக நாம் கண்ணால் பார்த்த அனுபவம் பற்றிய ஞாபகம் திரிபடைய வாய்ப்புண்டு. அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்களே. அல்லது திரும்பத் திருப்பப் பொய்யை மெய் போலச் சொன்னால் பொய்யும் மெய்யாகும். மெய்யும் பொய்யாகும். இந்தத் திரிபடையும் ஞாபத்துக்குச் சாட்சி சொல்லுதலில் அதிகம் உதாரணம் பார்க்கமுடியும். அழுத்தத்தின் விளைவாக ஞாபகம் திரிபடைய அதிக வாய்ப்புண்டு.

03. ஞாபகசக்தி இழப்பு அல்லது குறைபாடு (Amnesia):

இது ஒரு நோயாகக் கருதப்படுகிறது. ஞாபகத்துடன் சம்பந்தப்பட்ட மூளையின் பகுதி பாதிக்கப்படுவதாலேயே இது ஏற்படுகின்றது.

நினைவாற்றலுக்கு மிக முக்கிய காரணியாக அமைவது பலப்படுத்தலாகும். அதாவது புதிதாக ஒரு தகவல் மூளையை வந்தடைந்ததும் அது நீண்டகால நினைவாற்றலில் பதியப்படுவதற்கு ஒரு கால அவகாசம் எடுக்கும். இக்கால அவகாசத்தையே பலப்படுத்தல் என்பார்கள். புகை பிடித்தல் பலப்படுத்தலுக்குத் தலையீடாக அமையமுடியும் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

திடீரென ஏற்படும் அதிர்ச்சி அல்லது பயங்கரமான அனுபவம் பலப்படுத்தலைப் பெரியளவில் பாதிக்க முடியும். சில வேளைகளில் இதன்விளைவு அண்மைக்கால நினைவுகள் யாவற்றையுமே முற்றாகவே அகற்றிவிடுதலாகும். ஒரு படுமோசமான கார் விபத்து அந்த விபத்துக்கு ஒரு சில மணித்தியாலங்கள் முன்னர் நடந்த

அத்தனையையுமே மறக்கச் செய்துவிடலாம் அல்லது பல வருடங்கள் நடைபெற்ற அத்தனை சம்பவங்களையுமே நினைவாற்றலில் இருந்து அகற்றிவிடலாம். அவ்விதமாகச் சம்பவம் நடைபெற்றதற்கு முன்னர் நடந்தவை யாவற்றையும் மறந்துவிடுவதை பிற்தரவுக்கான ஞாகப இழப்பு (Retrograde Amnesia) என்பர். பல தமிழ்த் திரைப்படங்களில் இதனைக் கண்டிருப்பீர்கள். சன் தொலைக்காட்சியில் "சொர்க்கம்" பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். ஞாபகம் கற்றலுக்கு மிக அத்தியாவசியம் என்பது முன்னரேயே சொல்லப்பட்டது. மேற்படி ஒரு விபத்தோ அல்லது பெரும் அதிர்ச்சியோ ஏற்படுகின்றபொழுது பழைய சம்பவங்கள் அத்தனையுமே நினைவில் நிற்கலாம். ஆனால் அந்த அதிர்ச்சிக்குப் பின் ஏற்படும் எந்த நிகழ்வோ அனுபவமோ நினைவில் நிற்காத ஒரு நிலையும் சிலருக்கு ஏற்படுவதுண்டு. இதனை முற்றரவுக்கான ஞாபகஇழப்பு (Anterograde Amnesia) என்பார்கள். இவர்களின் வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். வெறும் ஜடமாகவே வாழ்வார்கள்.

பெரும்பாலும் மூளையில் ஏற்படுகின்ற பாதிப்பேதான் ஞாபகசக்தி இழப்புக்குக் காரணமாக அமையலாம். மண்டையில் ஏதாயினும் பாரதூரமாகத் தாக்கி அதன் விளைவாக மூளை பாதிக்கப்படுமாயின் அல்லது குருதிக் கலங்கள் பாதிக்கப்பட்டு மூளையின் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் போதிய குருதி விநியோகம் இல்லாமல் போயின் மூளைக்கலங்கள் இறந்து செயலிழக்க ஞாபக இழப்பு ஏற்பட முடியும். இது உடற்பிறப்பு ஞாபகமறதி (Somatogenic Amnesia).

சில சமயங்களிலே அதீத மன அழுத்தத்தின் காரணமாக ஞாபகங்கள் ஒரு வகை அடக்குமுறைகளுக்கு ஆளாகின்றன. இதனைத் தூண்டப்பட்ட மறத்தல் (Motivated Forgetting) என்பார்கள். இது தொடருமானால் அந்த ஞாபகமறதி நிலையானதாகிவிடும். இதனை உளப்பிறப்பு ஞாபகமறதி (Psychogenic Amnesia) எனலாம். ஒருவர் தனது தாயின் மரண வீட்டினுக்குத் தான் செல்லவில்லை எனக்கூறி வருத்தப்பட்டவராம். ஆனால் அவர் அங்கு இருந்ததை எத்தனையோ நண்பர்கள் கண்ணால் கண்டுள்ளனர்.

அவர்கள் எப்படித்தான் சொன்னாலும் அவர் அதனை ஏற்பதற்கில்லை. உண்மையில் அவர் சென்றுள்ளார். ஆனால் அவருக்குத் தாய்மேல் உள்ள அதீத பாசம், தாயை நினைக்க மனத்தில் ஏற்பட்ட மன அழுத்தம் இவ்விதமாக அவரை எண்ண வைத்துள்ளது.

08

நனவு அல்லது பிரக்ஞை

உள்ளம் என்பது ஆமை. அங்கே உறங்கிக் கிடப்பது உண்மை?

நனவு அல்லது பிரக்ஞை (consciousnous) என்பது வெளியுலகை மாத்திரமல்ல அகத்திலே நடைபெறும் நிகழ்ச்சிகள் போன்ற சிந்தனையைக் கூட உட்படுத்தும் நிலை. எனவே இதனை உள்ளம் எனவும் கூறலாம். இந்த உள்ளம் எங்கே உள்ளது?

நீண்ட காலமாக விஞ்ஞானிகள் நனவு என்பது விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்டது எனக் கருதி வந்துள்ளனர். ஆனால் அண்மைக்கால ஆராய்ச்சிகள் நனவு தொழிற்படும் விதம்பற்றி விளக்க முனைகின்றமை இங்கேயும் விஞ்ஞானம் கால்புதைக்கின்றது என எண்ண வைக்கிறது.

ஒரு பிரயாணம் செல்கிறோம். அட இங்கே வந்துவிட்டோமா? அதற்குள்ளே வந்துவிட்டோமா? எப்படி வந்தோம்! என வியக்கிறோம். அவ்வளவு தூரம் வந்தது மனதில் பதியவில்லை. இப்படியாகத்



தினசரி காலை எழுந்தது முதல் இரவு உறங்கப்போகும்வரை எத்தனையோ எண்ணங்களும், நினைவுகளும் உள்ளே இருந்து வருகின்ற ஒரு அக ஒலி மூலம் (inner voice) எடுத்துச் சொல்லப்பட்டுக் கொண்டே இருப்பதைக் காண முடிகிறது. உள்ளம் மூளையின் சார்பு இல்லாமல் தொழிற்படமுடியும் என நரம்பு விஞ்ஞானிகள் ஒருபொழுதும் அங்கீகரிப்பதில்லை. மூளை இல்லாமல் உள்ளம் செயற்படமாட்டாது என்பதுதான் நிஜம்.

எமது உணர்வுகளின் மூலம் முடிவு இல்லாமல் வந்துகொண்டிருக்கின்ற தகவல்களைச் சேகரித்து, பகுத்தாய்ந்து (Analyse) முடிவு எடுக்கும் பெரும் பணியில் எமது மூளை தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மூளையில் உள்ள எல்லா நரம்புக்கலங்களும் (100 Billion) ஒரே மாதிரியாகவே தொழிற்படுகின்றன. எந்த வேலை செய்தாலும் அது பிரக்ஞை அற்ற செயல் முறைப்படுத்தல் அல்லது எண்ணம் (nonconscious processing or thought.) ஆகின்றது. எனவே, நனவு என்பது தனிப்பட்ட கலங்களின் அகத்தே அமைந்திருப்பதில்லை. நரம்புக் கலங்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டிலேயே (co-ordinated activity) அமைந்திருக்கலாம் என அறிஞர்கள் எண்ணுகின்றனர்.

நீங்கள் நிமிர்ந்து நிற்கிறீர்கள். பொதுவாக உங்களைப் புவியீர்ப்பு விசை தரை மட்டத்தில் வீழ்த்தவேதான் முனையும். ஆனால் நீங்கள் விழுவதில்லை. அதற்குக் காரணமாய் அமைபவை உங்கள் கால்களில் உள்ள தசைகள் சில. அவற்றின் முயற்சியால்தான் நீங்கள் தரையில் பாட்டறிய விழுந்துவிடாமல் நிமிர்ந்து நிற்கிறீர்கள். இதனை நனவு அல்லது பிரக்ஞை எனலாமா? இல்லவேயில்லை. இது ஒரு பிரக்ஞை யற்ற செயல். அப்போ பிரக்ஞை எப்போது தடம்பதிக்கிறது. ஏதோ காரணத்தால் நிலைதழும்புகிறீர்கள். நண்பனின் வற்புறுத்தலுக்காகக் கொஞ்சம் மதுவை உள்ளே செலுத்திவிட்டீர்கள் என வைப்போமே. வீடு செல்கையில் நடையில் மெல்லிய தடுமாற்றத்தை உணர்கிறீர்கள். கீழே விழுந்துவிடலாம் என்ற மனப்பயம் ஏற்படுகிறது. கவனமாக அடிஎடுத்து வைத்து நடக்கிறீர்கள். இது பிரக்ஞையின் விளைவாக ஏற்பட்ட நடத்தை. ஆகவே கவனம் பிரக்ஞைக்கு அவசியமாகிறது. நாம் கதிரையில் ஓய்வாக உட்கார்ந்து இருக்கிறோம். எமது உடல் கதிரையில். கதிரை உங்கள் உடலின் பரப்பினை அமுக்குகின்ற உணர்வினை உங்களால் நன்றாகவே உணரமுடிகிறது. கதிரையில் இருந்தபடி கால்களை நீட்டித் தரையின் பரப்பிலே அவற்றினைப் படிய வைக்கிறீர்கள். தரையின் அமுக்கத்தினை உங்கள் கால்கள் மூலமாக உங்களால் உணர முடிகிறது.

உடலின் பரப்பிலே நீளக் களிசானும் சேட்டும் அமைந்து உடலினைப் போர்த்தி உள்ளன. இந்த உடைகளின் அமுக்கத்தை உங்கள் பூரா உடலாலும் உணர முடிகிறது.

ஆனால், இவை எவற்றினது அமுக்கம் பற்றி எமது எண்ணத்தில் என்றாவது தோன்றியதுண்டா? இப்போது காற்றோடு வந்த சிலந்தி ஒன்று எமது கையின் பரப்பிலே தங்கிவிடுகிறது. மற்றைய மூன்றினால் ஏற்பட்ட அமுக்கத்திலும் பார்க்க இந்தச்சிலந்தி ஏற்படுத்திய அமுக்கம் பன்மடங்கு குறைவு. ஆனால் நாம் காண்பிக்கும் செயற்பாடு எத்தகையது? உடனடியாகவே ஏதாயினும் செய்து அந்தச் சிலந்தியை எடுத்துத் தூரவீசிவிடுகிறோம். அல்லது துவம்சம் செய்து அதன் ஆயுளை முடித்துக்கொள்கிறோம். இந்த நான்கு நிகழ்ச்சிகளிலும் எமது தோலில் உள்ள தொட்டுணர் நரம்பு முளைகள் சம்பந்தப்பட்டன. அவை நரம்புத் தாக்கத்தை மூளைக்குக் கொண்டு செல்ல அங்கே சிந்தனை நடைபெறுகிறது. அச்சிந்தனையின் முடிவே சிலந்தியை அகற்றுதற்குக் காரணமாயிற்று. இதனையேதான் பிரக்ஞைப் பட்டறிவு என்போம்.

09

பயம்
அச்சம் தவிர்

அச்சம் என்பது ஒரு உணர்வு. அச்சம் அல்லது பயம் சாதாரணமாக ஒவ்வொரு ஜீவராசிக்கும் உள்ளது. இது இயற்கையானது. இதன் பரிமாணம் எந்த அளவினுக்கு உள்ளது என்பதுதான் முக்கியம். குறிப்பிட்ட அபாயகரமான நிகழ்வு ஒன்றினுக்குப் பிரதிவினை காட்டும் செயற்பாடுகள் உடலியக்கத்தில் ஏற்படுகின்றன.



அபாயத்தை எதிர்கொள்ள ஒருவர் அறிவாற்றல் தொடர்பான அல்லது உடலியக்கம் சம்பந்தப்பட்ட அல்லது நடத்தை சம்பந்தமான விளைவுகள் சிலவற்றினை எடுத்து அந்த அபாய நிலையினைப் போக்கிக் கொள்ளவோ தவிர்க்கவோ முனைவார். எனவே பயம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வைக்கிறது.

“அஞ்சி அஞ்சிச்சாவார் - இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே” என்றான் பாரதி. எதற்கும் அஞ்சுகின்றவர்களைக் கோழை அல்லது பயந்தாங்கொள்ளி என்போம். சின்னப் பிரச்சினை என்றாலே வியர்த்து விறுவிறுத்து நிற்பார்கள்.

“அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடைமையடா” இது தமிழ்த்திரைப்படப்பாடல். உண்மைக்குப்புறம்பானது உற்சாகத்துக்காகச் சொல்லப்படுவது. திரைப்படங்களில் சொல்லப்படுவதும் காட்டப்படுவதும் சற்று மிகையானவை என்றும் வாழ்க்கைக்கு ஒவ்வாதவை என்றும் நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும். இவை பற்றிக் “காதோடு காதாக” “வெற்றிமணி” பல சந்தர்ப்பங்களில் கோடு காட்டியுள்ளதே.

அச்சம் என்பது மடைமையல்ல. வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் வாழ்க்கையைச் செவ்வனே அமைத்துக் கொள்வதற்கும் அச்சம் சிறிதளவு தேவையே. இதற்காகவேதான் ஔவையார் அச்சம் தவிர் என்றாரேயன்றி அச்சம் வேண்டேல் எனக் கூறவில்லை.

பாடசாலையில் கல்வி கற்கின்ற ஒரு மாணவன் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய பயம் இருந்தால்தான் நன்கு படிப்பான். சிறந்த பெறுபேறுகளைப் பெறுவான். தனக்கு அடுத்த நிலையில் உள்ளவன் தன்னை முந்திவிடுவான் என்ற பயம் விளையாட்டுப் போட்டியில் ஒருவனை முன்னேற வைக்கிறது. பெற்றோர் கோபிப்பார்கள் என்ற பயம் ஒன்றின் காரணமாகவே தன் நண்பர்களுடன் இரவுக் கேளிக்கைகளுக்குச் சென்ற பிள்ளைகள் நண்பர்களை விட்டு வர மனமில்லாமல் வீடு ஏகுகிறார்கள். வீதியில் விபத்து ஏற்படலாம் என்ற பயத்தினாலேயே நாம் கார் ஓட்டும்பொழுது கவன சிரத்தையுடன் வாகனத்தை ஓட்டுகிறோம்.

அதிகம் போவானேன், வீட்டுக்கு வருகிற விருந்தினரைக் காப்பி குடிக்கும்படி கேட்டால், சீனி போடாமல் தாருங்கள் என்பவருக்கு என்ன பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரிந்துவிடுகிறது.

“கொஞ்சம் எண்ணை குறைவாகப் பாவிக்கிறேன்” என்று ஒருவர் நாசூக்காகச் சொன்னால் அவரது உடல்நலப் பிரச்சினை எத்தகையது என்பது விளங்கிவிடுகிறது. இவர்கள் எடுக்கும் இக்கவனங்கள் தமது நோய் மேலும் தீவிரம் அடையக்கூடாது அல்லது அந்த நோய் வருவதைத் தவிர்க்கவேண்டும் என்ற பயத்தினாலேதான். சட்டத்துக்கு அமைந்த நற்பிரஜைகளாக வாழவேண்டும் என்று மனச்சாட்சிக்குப் பயந்து வாழ்கின்றவரிலும் பார்க்கச் சட்டத்துக்கு விரோதமாக நடந்தால் தண்டனை பெறவேண்டும் என்ற பயத்திலே சட்டத்துக்கு அமைய வாழ்பவரின் தொகை பன்மடங்கு அதிகம்தானே. மனது எனும் பொலிஸ்காரனிலும் பார்க்கத் தெருவில் நிற்கும் பொலிஸ்காரனுக்குப் பயந்து கார் ஓட்டும் வேகத்தை நாம் குறைப்பதில்லையா?

ஆகவே பயம் என்பது மிக அவசியமானது.

ஆனால் அது அளவோடு இருக்கவேண்டும். மிகுந்த பயம் வாழ்க்கையை அனுபவிக்க விடமாட்டாது. வெற்றி தோல்வி பற்றிய அதீத பயம் தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்க விடமாட்டாது. பாதுகாப்புப் பற்றிய அசாதாரண பயம் தலைமைத்துவம் ஏற்பதற்கோ, முன்னின்று செயற்படவோ வேண்டிய துணிவினைத் தரமாட்டாது. மறுமை பற்றிய மிகையான பயம் இம்மையைத் துய்ப்பதற்குத் தடையாக அமையும். உலக வாழ்க்கை வெறும் சடப்பொருள் வாழ்க்கையாக அமைந்துவிடும். இந்தப்பய உணர்வுக்கு எது காரணமாகிறது?

எமது சிறுநீரகங்கள் இரண்டும் வயிற்று அறையினுள்ளே மேற்பகுதியில் முள்ளந்தண்டின் இருபுறமும் காணப்படுகின்ற அவரை விதை போன்ற அமைப்புடைய கட்டமைப்புகள். இவை ஒவ்வொன்றின் முற்புறத்திலேயும் அவற்றினுக்குத் தொப்பி போட்டதுபோன்ற வகையாக ஒரு கானில் சுரப்பி உள்ளது. அதனை அதிரினல் சுரப்பி (Adrenal gland) என்பார்கள். கானில் சுரப்பி என்பது அகம் சுரக்கும் சுரப்பி (Endocrine gland) வகையைச் சார்ந்தது. இதனது சுரத்தல் நேரடியாகவே குருதித் தொகுதியை அடைகின்ற மையால் அதன் தாக்கத்தால் உடனடியாக விளைவுகள் ஏற்பட முடிகின்றது. இந்த அதிரினல் சுரப்பி சுரக்கும் ஓமோனை அதிரினலின் (Adrenalin) என்பார்கள். இதனை ஆங்கிலத்தில் Hormone of fight or flight என வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள்.

தெருநாய் ஒன்று ஆவேசமாக வாயைப் பிளந்தபடி உங்களைக் கடித்துக் குதறுவேன் என வஞ்சினத்துடன் வருகிறது.

நீங்கள் மூன்று விதமான பிரதிவினை காட்டலாம். என்ன செய்வது ஏது செய்வது எனத் தெரியாமல் "ஐயோ நாய் நாய்" எனக் கத்திக்கொண்டு அசையாமல் ஒரு சிலை போல நின்று அது இரக்க சிந்தனையுடன் உங்களை ஒன்றும் செய்யாமல் விட்டுப் போனால் "கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை" நான் என்ன செய்வது எனப்பின்னர் பிரலாபிக்கலாம்.

இவர்கள் கோழைகள்.

இரண்டாவது வகையினர் வேகமாகத் திரும்புவார்கள். குதிக்கால் குண்டியில் அடிக்க எடுப்பார்கள் ஓட்டம். வெகுதூரம் போனபின் மூச்சிரைக்கத் திரும்பிப் பார்த்து நாய் கிட்டடியில் இல்லை என ஊர்ஜிதம் செய்த பின்னர் நிம்மதிப் பெருமூச்சுவிடுவார்கள். இவர்கள்

சமயோசித புத்தியுள்ளவர்கள். மூன்றாவது வர்க்கம் அசகாய சூரர்கள். குனிந்து நிலத்தில் இருந்து இரண்டு மூன்று கற்களை எடுத்து நாயை நோக்கி வீசுவார்கள். சந்தர்ப்பம் சரியில்லை. இன்னொரு சந்தர்ப்பத்தில் பழி தீர்க்கிறேன் எனச் சபதம் எடுத்துவிட்டு நாய் வாயை மூடிக்கொண்டு வாலைக் கால்களுக்கிடையில் வைத்தபடி வந்த வழியே திரும்பி ஓடும். மேற்படி செயற்பாடுகளிலே பின்னைய இரண்டுக்கும் தேவையானது அதிரினலின் என்ற ஓமோன்.

அண்மையிலே ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தின் உடற்றொழிலியல் பேராசிரியர் மின் சுஹோ (Min Zhuo) என்பவர் இந்த பய உணர்வுகட்குரிய மையத்தைத் தான் கண்டுபிடித்துள்ளதாகக் கூறியுள்ளார். இது எமது மூளையிலே நெற்றிக்கு 8 சென்ரி மீற்றர் தூரத்திலே அமைந்துள்ளதாக அவர் சொல்கிறார். இதனை Anterior cigulate cortex (ACC) முற்புற அரைவளைய மேற்பட்டை என அழைக்கின்றார். இந்த மேற்பட்டையின் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்தக்கூடிய மருந்து வகைகளை விரைவிலே கண்டுபிடித்தால் முற்றாகவே பயமெனும் உணர்வை அகற்றிவிடலாம் என அப் பேராசிரியர் கூறியுள்ளார். இது சிலசமயம் ஆபத்திலும் போய் முடியலாம் என்று கருத இடமுண்டு. என்றாலும் பயத்தினால் ஏற்படுகின்ற பதகளிப்பு (Anxiety) அச்சக் கோளாறு (Phobia) போன்ற நோய் அறிகுறிகளை அறவே ஒழிப்பதற்கு இவை உதவலாம்.

பதகளிப்பு என்பது வருங்காலத்தில் நடக்கவுள்ளது ஒன்றைப் பற்றி மனதிலே எண்ணம் ஒன்றினை ஏற்படுத்தி அதைப்பற்றியே எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டிருத்தல். பொதுவாக அது ஏற்படுத்திய எண்ணம் சந்தோசகரமானதாக இருக்காது. இத்தகையவர்கள் அதிகம் தோல்வி மனப்பான்மை உடையவர்கள். எனவே அவர்களது எண்ணம் முற்போக்கானதாக அமைய வாய்ப்பில்லை. இவர்கள் பரீட்சை எடுத்தால், சித்தியடையாவிட்டால் என்ன செய்வது என்பதுபற்றியே எண்ணியவண்ணம் இருப்பார்கள். ஒரு தொழில் பெறுதற்காக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினார்கள் என வையுங்கள்.

நேர்முகப் பரீட்சை முடிந்தநாள்முதல் அதன் பெறுபேறுகள் கிடைக்கும்வரை எந்த நேரமும் "சீ" நான் அதை அப்படிச் சொல்லியிருக்கலாம், இப்படிச் சொல்லியிருக்கலாம், பிழை விட்டு விட்டேன் எனப் பிதற்றியபடியே இருப்பார்கள். அச்சக்கோளாறு என்பது மனதிலே தோன்றுகின்ற எவ்விதத்திலும் நியாயப்படுத்தமுடியாத அதீத பயம். இதனால் ஒருவர் உணர்வு ரீதியாகப் பாதிக்கப்படுகின்றமையால் அவரது அன்றாட வாழ்க்கையும் பெரிய அளவிலே பாதிக்கப்படும்.

உலகின் ஜதார்த்த நிலை இவர்களுக்குச் சோதனையாக அமையலாம். இவர்கள் ஏன் பயப்படுகிறார்கள், எதற்குப் பயப் படுகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதுகூடக் கடினமாக இருக்கும்.

ஒரு தேர்ந்த உளவியலாளர்தான் உண்மையான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும். ஆகவே பயம் என்பது வாழ்க்கையை ஓட்டுதற்கு அவசியமானது. அது அதிகரித்தால் வாழ்க்கையை விட்டே ஓடச் செய்துவிடும்.

10 கற்றல் (Learning)

'கல்லைத்தான் மண்ணைத்தான் காச்சத்தான் கற்பித்தான்?' பராசக்தியில் சிவாஜி.



பட்டறிவு அல்லது அனுபவம் மூலமாக நடத்தையில் ஏற்படும் ஒப்பீட்டளவிலான ஒரு நிரந்தரமான மாற்றத்தையே கற்றல் என்பார்கள்.

அனுபவம் புதுமை என்பார்கள். ஆனால் அந்த அனுபவம் அடிக்கடி ஏற்பட நிரந்தரமான மாற்றம் ஒன்று நடத்தையில் ஏற்படுகிறது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குத வாது என்பது பழமொழி. ஆம் வெறும் ஏட்டுக்கல்வி மாத்திரம் கற்றல் ஆக முடி யாது. அது அனுபவத்துடன் சேர்ந்து வரும் போதுதான் நிரந்தரமாகிறது.

சூடுகண்ட பூனை அடுப்படிப்பக்கம் போகாது என்பது இன்னொரு பழமொழி. அதன் பட்டறிவு அதற்கு அதனைத் தெரிய வைக்கிறது. அதுவே கற்றல்.

கற்றலில் சூழல் மிக முக்கியமான பங்கேற்கிறது.

ஒரு உயிரி எதனைக் கற்கிறது, எவ்வித மாக நடத்தை காட்டுகிறது என்பதற்கான

பொறுப்பினைச் சூழல் ஏற்றுக் கொள்கிறது. கற்றலுக்கு வேண்டிய பொறிமுறைகள் எல்லா விலங்கினங்களுக்கும் ஒரே தன்மையானதே.

உதாரணமாக ஒரு மனிதன் மோட்டார்க் காரினை ஓட்டப் பழகுவதற்கும் யானை ஒன்று சேர்க்கஸ்சில் காண்பிக்கும் செயல் ஒன்றினைக் கற்பதற்கும் கையாளும் பொறிமுறைகள் ஒரே தன்மையானவையே.

பொதுவாக மனிதர் வெவ்வேறு வழிகள் மூலம் கற்கின்றனர். இதில் மிக எளிமையானது பழக்கப்படுத்தல் எனப்படுகிறது.

உதாரணமாக ஒரு பெண் அவரது வீட்டிலேயே கற்பழிக்கப்படுகிறார் என வைப்போம். இது நடந்த பல காலத்தின் பின்னரும்கூட வீட்டில் ஏதாவது சத்தம் கேட்டால் அவர் திகைத்து நிற்பார்.

மனதில் சஞ்சல உணர்வு தோன்றும். ஏனையவர்கள் அதனைச் சாதாரணமாக எண்ணுகின்ற பொழுது இவருக்கு மாத்திரம் அந்த ஓசை வித்தியாசமானதாகப் புலப்படும்.

கற்றலின்போது அது மிகச் சிக்கலானதாக இருந்தாலும்கூட இரண்டு எளிமையான இணைப்புப் பொறிமுறைகள் சம்பந்தப்படுகின்றன.

அவை,

01. சிறப்பு நிபந்தனையாக்கல் (Classical Conditioning):

இயன் பவலோவ் (Ian Pavlov) எனும் ரசிய விஞ்ஞானி நாய்களை வைத்து ஒரு பரிசோதனை நிகழ்த்தினார். உமிழ்நீர் சுரத்தல் என்பது கற்றல் இல்லாத தூண்டல். உணவைக் கண்டால் உமிழ்நீர் சுரக்கும். மணி ஓசை வெறும் ஓசையாக மட்டுமே அமைகிறது. பவ்லோவ் இந்த இரண்டினையும் இணைக்கிறார். நாயினுக்கு உணவு ஒரு தட்டினிலே வைக்கப்படுகிறது. உடனே அதன் வாயில் உமிழ்நீர் சுரக்க ஆரம்பிக்கிறது.

பாவ்லோவ் அதே சமயம் மணியையும் அடிக்கிறார். ஆகவே நாய் தனது கண்களினால் உணவினைப் பார்க்கின்ற அதேவேளை தன் காதுகளினால் மணி ஓசையையும் கேட்கிறது.

தொடர்ந்து இவ்விதம் செய்துவந்ததும் உணவுத்தட்டுக் கொண்டு வரப்படாமலேயே மணி அடித்ததும் நாய் உமிழ்நீர் சுரக்கத்தொடங்கி விடுகிறது. சாதாரணமாக உமிழ்நீர் சுரத்தல் என்ற பட்டறிவில் உமிழ்நீர்ச்சுரப்பி எனும் இயக்க உறுப்பும் கண் எனும் புலனுறுப்பும் சம்பந்தப்பட்டிருந்தன. ஆனால் ஒரு நிபந்தனையாக்கலினாலே உமிழ்நீர்ச் சுரத்தல் எனும் பட்டறிவிலே கண் எனும் புலனுறுப்புக்குப் பதிலாக காது எனும் புலனுறுப்பு பிரதியீட்டி விட்டதைக் காண்கிறோம்.

02. செயல் விளைவான நிபந்தனையாக்கல் (Operant Conditioning):

எமது கற்றல் செயற்பாடு பெரும்பாலும் இப்பொறிமுறையிலேதான் நடைபெறுகிறது. பிரதிவினை ஒன்றினை நாம் காட்டுகின்றபோது அதன்விளைவுகள்தான் எமது நடத்தை மாற்றத்தைத் தீர்மானிக்கின்றன.

முன்னையதில் இயற்கையாகவே நடைபெறுகின்றதாய் உமிழ்நீர் சுரத்தல் எனும் நடத்தை கற்றலின் பயனாகச் சற்று மாற்றியமைக்கப்படுகிறது. இங்கே கற்றல் ஒரு புதிய நடத்தைக்குக் காரணமாய் அமைகிறது.

சரி அங்கே நாயை வைத்து இயன் பாவ்லோவ் பரிசோதனையைச் செய்தார், என்றால் இங்கே தோர்ண்டைக் (Thorndike) என்பவர் அதன் விரோதியை வைத்து இன்னொரு பரிசோதனையைச் செய்தார். ஆம் அவர் பூனையைத் தேர்ந்தெடுத்தார்.

பூனை ஒன்றினைப் பட்டினி போட்டார். பின்னர் அதனைக் கூட்டிலே அடைத்து வைத்துவிட்டுக் கூட்டின் வெளியே அதற்கான உணவினை வைத்தார். கூட்டின் கதவு திறப்பதற்கு ஒரு பொறி இருக்கும்.

அப்பொறியினைத் தட்டினால் மாத்திரம் வாசல் திறக்கப்படும். பூனை அதன் மூலமாக வெளியேறி உணவை உட்கொள்ளமுடியும்.

கூட்டின் உள்ளே உள்ள பூனை பசிக்கொடுமையால் கூட்டின் உள்ளே எங்கெல்லாம் ஓடமுடியுமோ அங்கெல்லாம் ஓடும். இப்படி அது ஓடுகின்றபொழுது சந்தர்ப்பவசத்தால் அது பொறியினை அமுக்கக் கதவு திறந்துகொள்ளும். பூனை வெளியேறித் தனது உணவினை உட்கொள்ளும். இங்கே பூனையின் பிரதிவினை அதற்கு அனுகூலமாக அமைந்திருந்தது.

இப்படியாகத் தொடர்ந்து செய்கின்றபோது பூனை மிகச் சுலபமாகக் கதவினைத் திறக்கின்ற யுக்தியைக் கற்றுக் கொள்கிறது என்கிறார் தோர்ண்டைக். வெளியே உணவு உள்ளது. அதனைப் பெற வேண்டும் என்ற முயற்சியேதான் பூனைக்கு இந்த நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இதனைக் காரணமான கற்றல் (Instrumental learning) என்போம். நம் பெற்றோர்கள் பெரும்பாலானோர் கையாளுவதும் இதனையேதான். "இம்முறை சோதனையில் நீ எல்லாப் பாடங்களிலும் வெகு திறமைச் சித்தி பெற்றாயானால் உனக்கு ஒரு நல்ல புகைப்படம் எடுக்கும் கருவி வாங்கித் தருவேன்." எனப் பிள்ளையிடம் கூறினால் அவர் கற்றலில் அதிக ஈடுபாடு காட்டுவதைக் காணமுடியும். அவர்

இயற்கையாகவே கற்றலில் திறமை உடையவராக இருந்தாலும் இத்தகைய அறிவிப்பு அவரது முயற்சிக்கு ஒரு சவாலாக அமைகிறது. கற்றலுக்கு ஒரு காரணமாகிறது. ஆகவே அவர் அச்சாதனையைச் செய்யும் பட்சத்தில் சொன்ன படியே புகைப்படக் கருவி வாங்கிக் கொடுத்தே தீரவேண்டும். சொன்னதைச் செய்யவேண்டும். செய்வதைத் தான் சொல்லவேண்டும்.

இது பெற்றோர்கள் நினைவிலே வைக்கவேண்டிய தாரக மந்திரம். இங்கே மாத்திரமல்ல எங்கேயும் பிள்ளை வளர்ப்பின்போது பெற்றோர்கள் மறந்தும் இதனை மறந்துவிடப்படாது. இச்செயலையே தான் வலுப்படுத்தல் என்கிறோம். (Reinforcement)

நீங்கள் விலங்குக் காட்சியகத்திலே டொல்பீன் (Dolphin) காட்சி அல்லது சீல் (Seal) பல சாகசங்கள் செய்து காட்டுவதைக் கண்டிருப் பீர்கள். அந்தச் சாகசங்கள் ஒன்றுமே அவ்விலங்குகள் தமது வாழ்நாளில் செய்ததில்லை. அவற்றிக்குக் கற்பித்துள்ளனர். எனவே நடத்தையில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளனர். அவை ஒவ்வொருமுறையும் சாதனை நிகழ்த்தியபின்னர் அவற்றிற்குப் பயிற்சியாளர் மீன் கொடுப்பதை அவதானித்து இருப்பீர்கள். இம் மிருகங்கள் சாகசம் செய்யும்பொழுதே மீன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே செய்கின்றன. அவற்றுக்கு இச் சாகசங்கள் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டபொழுது ஒவ்வொரு முறையும் தீன் கொடுக்கப்பட்டது. ஆகவே நடத்தைமாற்றம் வலுப்பெற்றது.

பயிற்றுனர் சாகசம் செய்து முடிந்ததும் மீன் கொடுக்காமல் விட்டாராயின் அவை சிறிது சிறிதாக அப்படிச் செய்வதை விட்டுவிடும். நடத்தை மாற்றம் அற்றுவிட்டது என்று அர்த்தமல்ல. இதனைச் செய்வ தால் என்ன பிரயோசனம் என்ற எண்ணம் அவற்றுக்கு ஏற்படுவதுண்டு.

எனவேதான் பிள்ளைகளுக்கும் ஏதாவது சொன்னால் அதனைச் செய்யவேண்டியது அவசியம்.

11

தூக்கம் கண்களைத் தழுவட்டுமே!

தூங்குகிறவனை எழுப்பலாம், தூங்குவது போலப்பாசாங்கு செய்ப வனை எழுப்புவது கஷ்டம் என்பது நம்மவர் வழமையாகச் சொல்வது.

சிலர் பிரச்சினைகளைத் தவிர்ப் பதற்காகத் தூங்குவது போலப் பாசாங்கு செய்வதுண்டு. இது மனிதருக்கு மட்டுமே பொருந்தும். விலங்குகள் பலவற்றக்கோ கண் ணுக்குள் எண்ணெய் வைத்துக் கொண்டிருக்கவேண்டிய நிலை. சிறிது கண்ணயர்ந்தால் அந்த விலங்கு இன்னொன்றின் வயிற்றுக் குள் குடியிருக்க வேண்டி வந்து விடும். ஆமாம் தனது உயிருக்கு ஆபத்தில்லை என உத்தரவாதம் கிடைத்தால்தான் நிம்மதியாகத் தூங்கமுடியும்.

அப்படியாயின் தூக்கம் என்றால் என்ன?

விலங்குகளும் மனிதரும் கண் களை மூடியபடி இருந்தால் அவை

உறங்குகின்றன எனச் சொல்வோம். உறங்குகின்றபொழுது புலன் உறுப்புக்கள் கூடச் செயற்படுவதில்லை எனக் கருதுவோம். ஆனால் மீன்களைப் பாருங்கள். அவற்றினுக்குக் கண்கள் உண்டு. மூன்றாவது இமை அல்லது சிமிட்டு மென்சவ்வுகூட உண்டு. அவை எந்நேரமும் அசைந்தபடியே இருக்கின்றன. அவை உறங்குவதாயிருந்தால்கூட அசைந்தபடியேதான் உறங்குகின்றன.

நம்மில் சிலர் உறக்கத்தில் நடப்பதில்லையா?

மீன்களின் உறக்கம் பற்றிச் சிந்திப்போமாயின் உறக்கத்துக்கு நாம் சொன்ன வரைவிலக்கணம் தப்பாகப்போய்விடுகிறது.

"தூங்காதே தம்பி தூங்காதே" என்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் . பாடல் நினைவுக்கு வருகிறதா? தூங்கியதால் பலர் பலவற்றை இழக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகத் தூங்கும் பொழுது உயிரினை இழக்கும் சாத்தியம் அதிகம் என்பதால் பல விலங்கினங்கள் உறக்கத்திற்காகப் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன.

திமிங்கலம், கடற்பசு (டொல்பின்கள்) போன்றவை சமுத்திரத்திலே வாழ்கின்ற முலையூட்டிகள். இவை நுரையீரல் அல்லது சுவாசப்பை மூலமே சுவாசிக்கவேண்டும். கடலிலே வாழ்ந்தாலும் இவை மீன்களைப் போன்று நீரில் உள்ள காற்றினைச் சுவாசிப்பதில்லை. ஆகவே இவ்விலங்குகள் வளிமண்டலத்திலே உள்ள காற்றினைப் பெறுவதற்காக எப்பொழுதும் நீரின் பரப்பினுக்கு வந்தே ஆகவேண்டும். "கரணம் தப்பினால் மரணம்" என்பார்களே, இவை நீரின் பரப்பினுக்குக் குறிப்பிட்ட அவகாசத்தில் வராவிட்டால் செத்த உடல்தான் நீரின் பரப்புக்கு வரும். அப்படியென்றால் இவை உறங்குவதேயில்லையா? இல்லை! இல்லை!. அவையும் உறங்குகின்றனவாம்.

இங்கே, உறக்கம் என்பதற்கு இன்னொரு விளக்கம் தருகிறார்கள். அதாவது மூளைக்குச் சற்று ஓய்வு கொடுப்பதே உறக்கம். எமது மூளை எந்நேரமும் ஓய்வு ஒளிச்சல் இல்லாமல் வேலை செய்து கொண்டே இருக்கிறது. அதற்குச் சற்று ஓய்வு வேண்டும் அல்லவா? உறக்கத்தின்போதுதான் அது சாத்தியமாகிறது. ஆனால் திமிங்கலம், கடற்பசு போன்ற விலங்குகள் தொடர்ந்து நீரின் பரப்பினுக்கு வந்துகொண்டேயிருக்கின்றன. அப்படியாயின் மூளைக்கு அவை எப்படி ஓய்வுகொடுப்பதாம்? சில கருவிகள் மூலம் மூளையின் செயற்பாட்டு அலைகளைத் தெரிந்துகொள்ளலாம். அப்படி இவ்விலங்குகளில் சோதித்துப் பார்த்தபொழுது அவற்றிலே இடப்பக்க மூளை செயற்படுகையில் வலப்பக்க மூளை ஓய்வு எடுப்பதாகவும் பின்னர் வலப்பக்க

மூளை செயற்பட இடப்பக்க மூளை ஓய்வு எடுப்பதாகவும் சொல்கிறார்கள்.

திமிங்கிலமும் கடற்பசுவும் இவ்விதமாக மூளைக்கு ஓய்வுகொடுப்ப தால் நீரில் மூழ்கி இறந்துவிடுவதைத் தவிர்த்துக்கொள்கின்றன என்றால் குருவிகளோ இதே பொறிமுறையைக் கையாண்டு தம்மை இரைகௌவிகள் உண்டுவிடாமல் காப்பாற்றிக் கொள்கின்றன. ஆனால் குருவிகள் உறங்குகின்றபொழுது தமது இமைகளால் கண்களை மூடிக்கொள்கின்றன.

"ஒரு கோழித் தூக்கம் போட்டேன்" எனச் சிலர் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். மனிதன் ஒருவரின் சாதாரண இமைகள் மூடிய உறக்கம் குறைந்தது 45 நிமிடமாவது ஒரே சமயத்தில் இருக்கும் என்கின்றனர் ஆய்வாளர்கள். ஆனால் ஒரு குருவியில் (கோழி) இத்தகைய இமை மூடிய உறக்கம் ஒரு சில வினாடிகள் மாத்திரமே. அதோடு மாத்திரமல்லாமல் அது உறங்குகின்றபொழுது ஒருபக்க மூளை மாத்திரமே ஓய்வுபெறுகின்றது.

"அங்கேபார் மாடு மாதிரி நித்திரை கொள்ளுகிறான்" என்று நன்றாக ஈவு சோர்வாக உறங்குகின்றவர்களைப் பார்த்துப்பழிப்பதுண்டு. மாடு, ஆடுகள் நன்றாகக் கால்களை நீட்டிப் படுப்பது நிம்மதியாக அவை தூங்குகின்றது போலக்காட்டினாலும் அவை மனதில் ஒரு பயத்துடனேயே உறங்குகின்றன.

தாம் உறங்குகின்ற வேளையில் தம்மை மற்றைய விலங்குகள் தாக்கிவிடலாம் என்ற பயத்தின் விளைவாக அவற்றின் உறக்கநிலை என்றுமே ஆழ்நிலை உறக்கமாக அமைவதில்லை.

மனிதனுக்கு அடுத்தபடியாக ஒரு பயமும் இல்லாமல் நிம்மதியாகத் தூங்கக்கூடியவை புற்றுக்களிலே வாழ்கின்ற விலங்குகள்தான். அவற்றக்குத் தம்மை இரைகௌவிகள் பிடிக்கமாட்டா என்ற நம்பிக்கை உள்ளமையால் விடியவிடியத் தூங்கலாம். ஆஸ்திரேலியாவுக்குப் போனீர்களாயின் வளைகளிலே வாழ்கின்ற பிளாரிப்பஸ், மற்றும் இயூக்கலிப்ரஸ் மரங்களிலே வாழ்கின்ற கோலா போன்றவை தூங்குவதிலேயே பொழுதைக் கழிப்பதைக் காண்பீர்கள். உறங்குகின்ற பொழுது உடல் வெப்பநிலை சற்றுக் குறைகிறதாக அவதானிக்கப் பட்டுள்ளது. பொதுவாகவே விலங்குகள் தமது உடல் வெப்பநிலை யைச் சீராக வைப்பதற்காக உடலில் வெப்பத்தைத் தோற்றுவிக்கின்றன.

ஆகவே விலங்குகள் உறங்குகின்றமையால் வீணே வெப்பம் இழப்பதைக் குறைக்கின்றன எனும் கருத்தும் உலவுகிறது. இதன்படி

பார்ப்போமாயின் சிறிய உடல் கொண்ட விலங்குகளே கூடிய நேரம் உறங்க வேண்டியுள்ளது.

நீங்கள் யாழ்ப்பாணத்தில் இலுப்பைப்பழக்காலத்தில் பெரிய வௌவால்கள் இரவிலே வருவதைக் கண்டிருப்பீர்கள். நிலாக்காலங் களிலே அவை வானத்திலே பறந்துவருவதைக் காண்பது மிக்க அழகான காட்சி. இவற்றினுடைய சிறகு மென்சவ்வினால் ஆனது. ஆகவே அவை பகல் நேரங்களில் பறந்தால் மென்சவ்வினால் ஆன சிறகு உலர்ந்துவிடும். சிறகினை அடித்து அவற்றினால் பறக்கமுடியாது. ஆகவே இவை பகல் நேரங்களிலே பாதுகாப்பான ஒதுக்குப் புறங்களில் உறங்கிவிட்டு இரவு வேளைகளிலேயே சஞ்சரிக்கின்றன. இவற்றை இரவுக்கு உரிய பிராணிகள் என்பர். ஊரிலே குளங்கள் கோடை காலங்களிலே நீர் இல்லாமல் வறண்டு இருக்கும் போது நத்தைகள் மூடப்பட்ட நிலையிலே இருப்பதைப் பலர் கண்டிருப்பீர்கள். நத்தை ஓட்டின் வாய் ஒரு மூடியினால் மூடப்பட்டிருக்கும். உடைத்தீர்கள் என்றால் நத்தையைக் காணமுடியாது. வெறும் சதைப்பிண்டமாகவே காணப்படும். இந்நிலையில் அந்த நத்தை மழைகாலம் வரும்வரை இருக்கும். இந்த நத்தை கோடைத்தூக்கத்தில் உள்ளது என்பார்கள். மீண்டும் மழைகாலம் வந்ததும் அந்த நத்தை தனது சுய உருவைப் பெற்றுச் சீவிக்கத் தொடங்கிவிடுகிறது.

"கல்லினுட் தேரைக்கும், கருப்பை உயிருக்கும்
புல்லுணர்வே தந்து போற்றும் நம் நாளன்"

என அந்தக் காலத்துத் தியாகராஜ பாகவதர் பாடிய பாடல் சிலருக்கு ஞாபகம் வரலாம். கோடை காலங்களிலே தேரை அல்லது மண்டுகத் தவளைகள் பெரிய கற்களின் கீழே உறங்கு நிலையில் இருப்பது உண்டு. பின்னர் மழைகாலம் தொடங்க ஈசல் பறக்கத் தொடங்குகையில் கறையான் புற்றுகளின் அருகே அவை இருந்து இரசனையுடன் வேக வேகமாக ஈசல் சாப்பிடுவதைச் சிலராவது கட்டாயமாகக் கண்டிருப்பீர்கள். இவை உறக்கநிலையில் இருக்கின்ற பொழுது உடற்றொழில்கள் மிகவும் அதிக அளவிலே நிறுத்தப்பட்டு விடுகின்றன.

உணவு உட்கொள்வதில்லை. ஏற்கனவே உடலில் சேமிக்கப்பட்ட உணவினை மாத்திரம் உபயோகிக்கின்றன. இதைப்போலவே குளிர் காலத்திலே பல்வேறு விலங்கினங்கள் உறக்க நிலையை மேற்கொள் கின்றன. இதனை மாரித்தூக்கம் என்பார்கள். சுண்டெலிகள், கரடிகள் எல்லாம் இவ்விதம் மாரித்தூக்கத்தில் ஈடுபடுபவை. தூங்கினால் கனவு வருமா? தூங்காமலும் கனவு காணலாமா? அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

12

கனவு...
அது ஒருவர் பார்த்து அனுபவிக்கும் நாடகம்

"I have a dream" இக்கூற்றினைப் பற்றி அறியாதவர்கள் பலர் இருக்க முடியாது. நீக்கிரோக்களின் நல்வாழ்விற் காகக் குரல்கொடுத்து மடிந்த மார்ட்டின் லூதர்கிங் (Martin Luther King) என்ற பெருமகன் 1963ம் ஆண்டு அமெரிக் காவில் வாசிங்ரன் நகரில் உள்ள லிங்கன் ஞாபகார்த்த சதுக்கத்தில் ஆற்றிய பிரபலமான உரையின் ஆரம்ப வசனம்தான் இது. இங்கு அவர் கண்ட கனவு என்பது நனவாக வேண்டும் என்பது உள்ளத்தில் எழும் கற்பனை. இதற்கு உறங்கவேண்டிய தேவை இல்லை. "கனவு - நினைவு" இப்படி அற்புதப் பொருத்தமான இரு பதங்கள் வேறு எந்த மொழியிலாவது உள்ளதோ எனக்குத் தெரியவில்லை. இது வேறு வகையான கனவு.

நான் சொல்ல வரும் கனவுதான் என்ன? உறங்கும்போது நடைபெறும் நிகழ்வு. அதற்கு ஒன்றோடொன்று தொடர்புடைய நான்கு அர்த்தங்கள் உள்ளன.

01. கனவின் போது மிகச்சிறிய அளவிலே மூளை இயங்கச்செய்கிறது. வெளியே இருந்து ஏதாயினும் தூண்டல்கள் மூளையை வந்தடைவது தடுக்கப்படுகிறது. "நான், எனது" என்ற "சுய தொகுதி" கனவின்போது இல்லாமல் போய்விடுகிறது.

02. கனவு என்பது நாம் அனுபவிப்பது. நிகழ்ச்சி நடக்கின்றபோது எமது புலன்களைச் சம்பந்தப்படுத்துவதாகவும் அமைகிறது. நாமே கனவின் பிரதான நடிகராக அமைவதால் சில சமயங்களிலே அது மிக உணர்வுபூர்வமானதாகவும் அமைந்துவிடுகிறது.

03. அதிகாலையில் நாம் எழுந்திருக்கும்போது இந்தக்கனவு எமக்கு நன்றாக நினைவில் உள்ளமையால் கனவு அனுபவத்தை நினைவாற்றலில் பதித்துள்ளோம்.

04. எமது கனவு அனுபவத்தை நாம் எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ இன்னொருவருக்குச் சொல்கின்றோம். ஆகவே கனவு எனும் நாடகத்தை நாம் ஒருவர் மாத்திரமே அனுபவிக்கிறோம். இன்னொருவர் காண்பதற்கோ கேட்பதற்கோ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இல்லை நாம் சொல்லித்தான் இன்னொருவருக்கும் தெரியவருகிறது. ஆகவே கனவு என்பதை உறக்க நிலையில் நாம் அனுபவிக்கும் உணர்வினை நினைவுக்குக் கொண்டுவருதல் எனலாம். அல்லது எமது சுயதொகுதி வெளி உலகத்துடன் தொடர்பற்ற நிலையில் இருக்கும் சமயத்திலே எமது மனத்தில் நடைபெறும் சிறுசிறு நாடகங்கள் எனலாம்.

சாதாரணமாக, சராசரியாக ஒருவருக்குத் தினசரி மூன்றோ நான்கோ கனவுகள் வரலாமாம். குழந்தைகள் கூடிய நேரம் உறங்குகின்றமையால் அவர்களுக்குத் தினசரி இன்னும் அதிக கனவுகள் தோன்றலாம். நாம் உறங்குகின்ற சமயங்களிலே REM என அழைக்கப்படும் Rapid Eye Movement நடைபெறுகிறது. அச் சமயத்தில் மூடப்பட்ட கண் இமைகளின் பின்னே நமது கண்கள் முன்னும் பின்னுமாக அசைகின்றன என 1950ம் ஆண்டிலே ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அப்போதுதான் கனவுகள் ஏற்படுகின்றதாக உளவியலாளர்கள் சொல்கிறார்கள். நமது உறக்கத்தின் ஆரம்பத்தில் தோன்றும் கனவுகள் சிறியவையாகவும் நேரம்போக நீண்டு கொண்டும் போகுமாம். சிறப்பாகப் பிந்திவரும் கனவுகள் நெடியவையாக இருப்பதுடன் மிகத் தெளிவானவையாகவும் அதிகம் போலித்தனமானவையாகவும் அமையலாம். நம்மவர்கள் இதனாலேயே காலையில் கண்ட கனவு பலிக்கும் எனப் பயந்தடித்தபடி இருப்பதைக் காணலாம்.

கனவுபற்றி வெவ்வேறு கொள்கைகள் விஞ்ஞானிகளால் சொல்லப்பட்டுள்ளன. சிக்மண்ட் புறோயிட் (Sigmund Freud) எமது மனத்திலே நம்மால் அடைக்கப்பட்ட ஆசைகள் வேறோரு அடையாளத்தில் புலப்பட்டு எமது மனத்திற்கு அந்த ஆசையை நிறைவேற்றிய மனச்சாந்தியைத் தருவதுடன் அந்த எண்ணம் மீண்டும் எமது வாழ்வில் குறுக்கிடாமல் செய்கிறது என்றார். காதல் வயப்பட்டவர்கள், சிறப்பாக ஒருதலைக்காதல் வயமானோர், இக்கொள்கையினை ஏற்பார்கள் என நம்பலாம். அமெரிக்கப்பூர்வ குடிமக்களின் கனவு பற்றிய கொள்கை நம்மவர்களுக்குப் பெரும் அளவிலே ஒத்துவரும்போலத் தெரிகிறது. கனவுகள் உண்மை நிகழ்வுகள் என்பார்கள் அவர்கள். எமது கனவுகள் எம்மைப் பற்றிய உண்மைகளையும் எமது வாழ்வு பற்றிய செய்திகளையுமே சொல்வதாக அவர்கள் கருதுகிறார்கள்.

இன்னொரு கொள்கை மிகவும் ஜதார்த்தமானது. அதன் படிக்கு எமது நாளாந்த அனுபவங்கள் எமது ஆழ்மனத்திலே (Sub conscious mind) தங்கியுள்ளன. நாம் உறங்குகின்றபோது இவற்றில் சிலவற்றை எமது மூளை தொகுத்து ஒரு சிறு நாடகமாக எமக்குக் கனவுமூலமாக அளிக்கின்றது. இரவிலே அதி பயங்கரமான திரைப்படம் ஒன்றினை உங்கள் பிள்ளைகள் பார்த்தார்கள் என்று வையுங்கள். அன்று இரவு உங்கள் தூக்கம் நிம்மதியாக இருக்கும் என்பதற்கு உத்தரவாதமே இல்லை. நடு இரவில் பிள்ளைகள் உங்களைத் தட்டி எழுப்பி உங்களுடன் உறங்கப்போகிறேன். பயங்கரக் கனவுகள் வருகின்றன எனக் கெஞ்சுவார்கள். ஏன் பெரியவர்கள்கூட இத்தகைய கனவுகளைக் காண்பதுண்டு. ஆனால் அனுபவங்கள் அன்றன்றே கனவில் வரவேண்டும் என்ற அர்த்தம் இல்லை. அனுபவங்கள் எமது ஆழ்மனத்திலே வருடக் கணக்கிலே புதையுண்டு இருக்கலாம். இந்தப் புதையலைக் கிண்டி எடுத்துத் தொகுத்து நீக்க வேண்டியதை நீக்கித் தேர்ந்த மூளை ஒரு நாடகத்தை அமைத்துப் பல வருடங்களின் பின்னே உங்களைப் பார்க்க வைக்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் இங்கே ஒரு வழக்கு நடைபெற்றது.

28 வயதுப் பெண்மணி ஒருவர் தனது சிறிய தந்தையார் தன்னைப் பால்முறை வன்செயலுக்கு ஆளாக்கினார் எனக் குற்றம் சாட்டினார். அப்போது தனக்கு 7 வயது எனவும் கூறினார். தனது அறியாப் பருவத்தில் நடந்த இந்த நிகழ்ச்சி தனது உறக்கத்தை இப்பொழுது கனவுகள் மூலமாகக் கெடுப்பதாகக் கூறினார்.

எத்தகைய கனவுகள் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப் படுவீர்கள். அப்பெண்ணுக்கு அதிக கனவுகளிலே தனது பற்கள்

வீழ்வதாக இருக்குமாம். நம்மவர்கள் பல் விழுவதாகக் கனவுகண்டால் இறப்பு நடைபெறும் என்பார்கள். பல்விழுவதாகக் கண்ட கனவுக்கும் பாலியல் வன்முறைக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா? கனவுகள் தத்ரூபமாக நடந்த நிகழ்வுகளைக் காண்பிக்க வேண்டும் என்பதில்லை. அவை சங்கேதங்களாகவோ குறியீடுகளாகவோ (Symbolic) அமையலாம். இப்பெண்ணை அக்கொடியவன் பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகின்றபொழுது அவளுக்கு ஏழுவயது. அப்பொழுதுதான் அதன் பாற்பற்கள் விழுந்து நிரந்தரப் பற்கள் தோன்றுகின்றன. எனவே கனவு நிஜ நிகழ்ச்சியைப் புலப்படுத்தாது சங்கேதமாக நடந்த காலத்தைப் பிரதிபலித்துள்ளது.

கனவுகள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவையா என்ற வினா எழுகிறது. இது மனப்பான்மையிலேயும் அவர்கள் வாழ்கின்ற கலாச் சாரத்திலேயுமே தங்கியுள்ளது. ஆனால் சில பிரபலங்களைக் கனவுகள் வழிநடத்திய உண்மை பதிவுகளில் உள்ளது.

ஆபிரஹாம் லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்தபோது படுகொலை செய்யப்பட்டார். அவர் படுகொலை செய்யப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் அவர் ஒரு கனவு கண்டாராம். "வெள்ளைமாளிகையிலும் அதற்கு வெளிப்புறத்திலும் மக்கள் பெருந்தொகையாக நின்று பெருமளவில் தமது துயரத்தைக் காட்டியபடி இருந்தார்களாம். அங்கே ஒருவரின் உடல், (அதனைக் குடியரசுத் தலைவர் என்றே லிங்கன் இனம்கண்டார்) காணப்பட்டதாம்." லிங்கன் கனவுகண்ட சிலநாட்களில் அவர் கொலைசெய்யப்பட்டார்.

நான் காங்கேசன்துறையில் வாழ்ந்த காலத்தில் எனது இல்லத்தில் கிணற்றடியில் கமுக மரங்கள் நட்டிருந்தேன். ஒரு இரவு அந்தக் கமுகமரத்தில் ஒன்று வட்டுடன் முறிந்து வீழ்வதாகக் கனவுகண்டேன். இதை எனது தாயாரிடம் சொன்னேன். குடும்பத்தில் ஒரு துயரச் சம்பவம் நடைபெறலாம் என்றார். அந்த வாரத்தில் எனது மைத்துனர் இறந்தார்.

Robert Louis Stevenson என்பவர் சென்ற நூற்றாண்டின் பிரபல மான எழுத்தாளர். அவருடைய மிகப் பிரபலமான கதைகளில் ஒன்று "Dr. Jeckell and Mr. Hyde" இந்தக் கதைக்கான கரு அவருக்குக் கனவிலேதான் தோன்றியதாம். 1960களில் மிகப் பிரபலமாயிருந்த Beatles இசைக்குழுவினரில் ஒருவரான Paul McCartney க்கு Yesterday என்ற பாடலுக்கு இசை கனவிலேதான் உதித்ததாம். இப்படிப் பல உதாரணங்கள் சொல்லலாம். ஏன் உங்களுக்குக்கூட இத்தகைய பல அனுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே கனவுகள் வாழ்க்கைக்கு

இன்றியமையாதவையா என்பதற்குப் பதில் கூற முடியாது. அவரவர்கள் மனப்பாங்கினைப் பொறுத்தது. இரவினிலே கண்ட கனவு, கனவு முடிந்து கண் முழித்ததும் நினைவுக்கு வரும். ஆனால் மீண்டும் உறங்கிக் காலையில் எழுந்ததும் அரைகுறை ஞாபகமே வருவதும் உண்டு. ஆனால் பின்னர் ஒருபொழுது அது நினைவுக்கு வரலாம்.

இரண்டு கண்களும் பார்வை அற்றவர்கள் கனவு காணமுடியுமா என எண்ணலாம். கனவு என்பது கண்கள் மூலம் காண்பது இல்லையே. அது ஒரு அகத்தோற்றம். எனவே கண்பார்வை இல்லாமலே பார்க்கக் கூடியது ஒன்று உண்டென்றால் அது கனவு மாத்திரமே.

விலங்குகளால் கனவு காணமுடியுமா என்பது இன்னொரு சந்தேகம். REM உள்ள எல்லா விலங்குகளாலுமே கனவு காண முடியுமாம். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் நாயினை அவதானித்தீர்களானால் அதன் கால்கள் சில சமயங்களில் அசைவ தைக் காணமுடியும். அப்போ அது கனவு காண்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

கனவு மெய்ப்பட வேண்டும்
காரியமாவது விரைவில் வேண்டும்

(பாரதி)

13

பாரதியும் மாஸ்லோவும்

ஆபிரகாம் எச்.மாஸ்லோ எனும் கல்வி உளநூலறிஞர் நாற்பது வருடங்களுக்கு முன்னர் "அடிப்படைத் தேவைகளும் அவற்றின் ஆதிக்க ஒழுங்கும்" (Basic needs and their Hierarchical arrangement) என்னும் முக்கிய தனித்துவம் ஒன்றினைக் கூறினார்.

மனிதனது இயற்கையான அமைப்பு முறையிலே உடற்றொழிலியல் தேவைகளுடன் உளவியல் தேவைகளும் உள்ளன. அடிப்படைத் தேவைகள் அல்லது உயிரியல் தேவைகளாகிய இத்தேவைகள் சூழற்காரணிகள் ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யாதவிடத்து ஏற்படக்கூடிய பற்றாக்குறைகள் அவரது உடல்நிலையிலும் உளநிலையிலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்த முடியும்.

பொதுவான அத்தியாவசியத் தேவைகளை மாஸ்லோ உணவு, பாதுகாப்பு, அன்பு அல்லது பாசம் சுயமதிப்பு, சுயதிறன் நிறைவு (Self actualisation) என்று ஒழுங்குபடுத்து

கிறார். இத்தேவைகள் ஒன்றினை ஒன்று ஆட்சிசெய்கின்றன. கீழ் மட்டத்திலே அமைந்த ஒரு தேவை ஓரளவுக்கேனும் திருப்தி செய்யப்படாதவிடத்து அதற்குமேல் உள்ள தேவையைப் பற்றிய சிந்தனை எழவே மாட்டாது. தேவைகள் மறுக்கப்படும் போது ஒருவர் அத்தேவைகளைத் திருப்திப்படுத்துவதே தன் வாழ்வின் இலட்சியம் போலத் தொழிற்படுவார்.

மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவை சீவியமாகும். அதாவது உணவு. உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார். ஒருவன் படுபயங்கரப் பசியுடன் இருப்பானாகில் அவன் உணர்வு செயல், எண்ணம் யாவுமே உணவு சம்பந்தமாகவே அமையும். அவனது அப்போதைய நிலையிலே உணவு தவிர வேறொன்றிலுமே நாட்டம் இருக்காது. வேறொன்று பற்றிய சிந்தனையுமே எழமாட்டாது. "இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்று குமுறவைக்கும். வாழ்வின் இலட்சியத்தையே தலைகீழாக்கிவிடும்.

கவிஞர் கண்ணதாசன் "சுகமான சிந்தனைகள்" எனும் நூலிலே மூன்று நாட்களாகப் பட்டினி கிடக்கும் ஒருவன் முன்னால் சோற்றையும் வைத்துப் பெண்ணையும் வைத்தால் அவன் முதலில் பெண்ணையே தொடுவான் என்கிறார். இதில் எனக்கு உடன்பாடு இல்லை. கவிஞர் தனது உணர்வுகளையே தன் எழுத்தில் பிரதிபலிப்பவர். அதனைப் பொதுமைப்பாடாக நாம் கொள்வதற்கில்லை.

எனினும் மாஸ்லோ கவிஞர் கருத்திற்கும் அங்கீகாரம் தருகிறார். அடிப்படைத் தேவைகளின் ஒழுங்குமுறை மனிதர்களுடைய மனப் பாங்கிற்கு அமைய மாறுபடுதல் சாத்தியம் என்கிறார்.

மாஸ்லோவின் ஒழுங்குப்படி உணவுத் தேவையின் ஓரளவு பூர்த்தி அடுத்ததாகப் பாதுகாப்புத் தேவையைப் பற்றிய சிந்தனைக்கு அடி கோலும். இதனைத் தொடர்ந்து வருவது அன்புத்தேவை. அல்லது பாச உணர்வுத்தேவை. ஏனையோருடைய பாச உணர்வுக்கு மதிப்புக் கொடுத்தல். இதற்கு அடுத்ததாக சுயமதிப்புத் தேவையாகிய சமூக அங்கீகாரம். இதனைத் தொடர்ந்து வருவதே இறுதியானதும் மிக இன்றியமையாததுமாகிய சுயதிறன் நிறைவுத்தேவை. ஒருவன் எத்தகையவனாக வர விரும்புகிறானோ அத்தகையவனாக வருவதே சுயதிறன் நிறைவுத் தேவை. What a man can be he must be. சுய திறன் நிறைந்த ஆக்கத் தேவை பலருக்கு ஈடு செய்யப்படுவதில்லை. எனவே பலர் விரக்தியின் விளிம்பிலே நின்று மாய்கின்றனர். சிலர் எதை அடைய முடியுமோ அதனுடன் திருப்திப்பட்டு வாழப் பழகிக் கொள்கின்றனர். மாஸ்லோவினுடைய அடிப்படைத் தேவைக்கொள்கை

இன்று மனித நடத்தையை விளக்குவதற்குப் பெரிதும் உதவுகின்றது. பல்வேறு உடற்கூற்றுப் பாதிப்புக்களுக்கும் உள நோய்கட்கும் சிகிச்சை செய்வதற்கு இக் கொள்கை ஆதாரமாகின்றது. பாடசாலை மாணவர் களின் நடத்தையினை நன்கு புரிந்துகொள்ள, போதைப் பொருட்களுக் குத் தீவிர அடிமையானவர்களுக்கும் புனர்வாழ்வு தர இக்கொள்கை அடித் தளமாகிறது.

அமரகவி பாரதி தனது ஒரு கவிதைமூலம் மாஸ்லோவிற்கு அநேக வருடங்களுக்கு முன்னரே இக்கொள்கையைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது பெருமைக்குரியதே.

கவிஞர் கண்ணதாசன் எந்த அளவிற்குச் சிற்றின்பத்திற்கு முதன்மை கூறினாரோ அதே உக்கிரத்துடன் பாரதி சுய கௌரவத் தேவையை முதன்மைப்படுத்துகிறார். அமரகவியின் வாழ்க்கையைப் பற்றி அறிந்தவர்கள் இதனை நன்கு உணர்வார்கள். பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே என்று கூறிக்கொண்டே இருந்த கொஞ்சத் தானியத்தை அன்றைய உணவு செய்வதற்காக முற்றத்தில் மனைவி யார் உலரவிட அதனைச் சிட்டுக் குருவிகள் உண்பதைக் கண்டுகளித்த பாரதி அன்று தாம் உண்ண உணவின்றிப் பட்டினி கிடக்க வேண்டுமே எனக் கொஞ்சமும் கலங்கியதில்லை. அத்தகைய மாவீரன் பாரதி சுயகௌரவம் பேணுவதில் பாமரத்தன்மை காட்டுகி றான். நாடோடி போன்று நிலையாக ஒரு இடத்தில் வாழாது எங்கெல்லாமோ அலைந்த பாரதி சமூக அங்கீகாரம் பெறுவதாயின் ஒரு சிறு காணியும் அதில் தனக்கென ஒரு வீடும் வேண்டுமென்பதை உணர்ந்து அதனையே மனிதனின் முதல் தேவையாக வைத்துப் பாடுகிறான்.

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணிநிலம் வேண்டும் - அந்தக்
காணிநிலத்திடையே ஒரு மாளிகை
கட்டித் தரவேணும்.

அடுத்ததாகத் தான் உணவுத்தேவை பற்றிக் கவிஞன் சிந்திக் கிறான். "பசி வந்திடப் பத்தும் பறக்கும்" என்பது உண்மையே. பசியின் கொடுமையைப் பலமுறை பாரதி உணர்ந்தவர். அந்த வஞ்சினமே "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" எனப் பாரதியை ஆர்ப்பரிக்க வைத்தது. "இரந்தும் உயிர் வாழவேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என இறைவனைத் தூஷிக்க வைத்துள்ளது. எனவே பசிபோக்கப் பாரதி,

அங்குக் கேணி அருகினிலே தென்னைமரக் கீற்று மிளநீரும்
பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம் பக்கத்திலே வேணும்
என்றான்.

ஆக உணவுத்தேவை ஓரளவு ஈடுசெய்யப்படுகிறது. சுவைகுன்றா இளநீர், வழுக்கைத் தேங்காய், தெவிட்டாத இன்பம், தொடர்ந்து மெல்ல எழுந்து நன்றாகவே ஆட்கொள்ளுகின்றது பாலியல் தேவை. "பாலும் கசந்ததடி படுக்கை நொந்ததடி" என அரற்ற வைக்கிறது. "காதல் காதல் காதல் காதல் போயின் சாதல், சாதல், சாதல் என ஏங்கச் செய்கிறது. அமரகவி சற்றுக் கூடுதலாகவே காதலைப்பற்றிப் பாடுகின்றான்.

காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினால் மானிடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைகளுண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!
அதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்
கவலை போம் அதனால் மரணம் பொய்யாம்

காதல் வசப்பட்ட ஒரு கிறுக்கன் உளறுவது போலல்லவா இது உள்ளது. மாஸ்லோ இதனையே குறிப்பிட்ட உணர்வு யாவுமே அத்தேவையின் நிவர்த்தி பற்றியிருக்குமே அன்றி வேறொன்றும் சிந்தையில் இடம்பிடிக்கமாட்டாது என்கிறார். ஈடேறாவிடில் வாழ்வதிலும் மாள்வது மேல் என்றே கவிஞர் உணர்ந்து,

"காதலை வேண்டிக் கரைகிறேன். இல்லையெனில் சாதலை வேண்டித் தவிக்கிறேன்" என்கிறார். எனவே பாரதி பாலியல் தேவையை எமது பண்பாட்டுநெறி தவறாது துல்லியமாகக் கூறுகிறார்.

பாட்டுக் கலந்திடவே அங்கே
ஒரு பத்தினிப் பெண் வேணும்

இங்கு பாரதி மாஸ்லோவில் இருந்து சற்று வேறுபடுகிறான். எமது பண்பாடு மேலைத்தேயத்திற்குப் புறம்பானது. கண்ட இடத்தில் காதல் செய்வதோ புனிதமான அந்தவாழ்வு முறையை மற்றவர்களின் இச்சையைத் தூண்டி இம்சைசெய்வதையோ நமது பண்பாடு கண்டு கொள்வதில்லை. அதற்கு ஏற்ற ஒரு சூழல் காலம் வரவேண்டும். அங்குதான் காதலின் உன்னத நிலைதோன்றும் என்பதையே,

முத்துச் சுடர் போலே நிலாவெளி
முன்பு வரவேணும் அங்கு
கத்தும் குயிலோசை சற்றே வந்து
காதிற்பட வேணும் என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே நன்றாய்
இளம் தென்றல் வரவேணும்

என்கிறான் பாரதி... அழகிய நிலவொளி அதனை வடித்துவிடுகின்றது. தென்னையின் நீண்ட ஓலைகள் சித்தத்தைக் கிறங்க வைக்கும். இளம் தென்றல் இடையிடையே பத்தினிப் பெண்ணின் மேலாடையுடனும் சீவிச் சிங்காரித்த கூந்தலுடனும் உறவாடி, உறவாடி விலகிச் செல்ல அவன் சித்தம் மகிழ்வதோடல்லாமல் இன்னும் ஒருபடி மேலே செல்கிறது. இதற்குள்ளே குயில்களும் கத்துகின்றன.

குயில்கள் கூவவல்லவா செய்யும். ஏன் கத்தும் எனப் பாரதி எழுதினான் என்பதற்குப் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் விளக்கம் தந்துள்ளார். அவர் தூத்துக்குடி வ.உ.சி கல்லூரியிலே அதிபராயிருந்த பொழுது அருகே உள்ள சோலையிலே கலவியில் ஈடுபட்டிருந்த குயில்கள் கூவாது சற்று வித்தியாசமான முறையிலே சத்தமிட்டனவாம். ஆக பாரதி எவ்வளவு அழகாகப் பாலியல் தேவையையும் அதனை நிறைவுசெய்யத் தேவையான சூழல் பற்றியும் கூறியுள்ளான்.

பாலியல் தேவையின் நிவர்த்தி இதில் என்ன உள்ளது என எண்ண வைத்து அதற்கு அடுத்ததான சுய திறன் நிறைவுத்தேவையை மேலெழச் செய்கிறது. எமக்குத் தொழில் கவிதை என மார்பினை நிமிர்த்திக் கூவும் பாரதி எவ்வளவு அழகாகப் பாலியல் தேவையையும் அதனை நிறைவு செய்யத் தேவையான சூழல் பற்றியும் கூறியுள்ளான்.

ஒருவன் தனது உள்ளத்திலே கிளர்ந்து எழுகின்ற சுய திறன் நிறைவுத்தேவையினை நிவர்த்திக்காவிடில் அவன் வாழ்வே அர்த்தமில்லாது போய்விட்டதாக உணர்வான். தானும் வாழ்ந்து உலகினையும் வாழவைக்க வேண்டுமென்ற வேட்கை சுயதிறன் நிறைவு நிவர்த்தியினாலே சாத்தியம்.

சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி நிலச்
சுமை என வாழ்ந்திடப் புரிகுவையோ?

என்று ஒவ்வொருவரும் தனது அறிவை உலக உயர்வுக்காக உபயோகிக்க முடியவில்லையே எனக் குமுறிக் கதறுவது நம் காதில் நாளாந்தம் கேட்டவண்ணமே உள்ளது. சுய திறன் நிறைவுத்தேவையைப் பாரதி

எங்கள் கூட்டுக் களியினிலே கவிதைகள்
கொண்டு தரவேணும் எந்தன்
பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்.

எனக்கூறிப் பாட்டினாலே உலகை ஆள்வேன் என்கிறான் இறுமாப்புடன். இது அவன் கனவு! அவன் வெறி! வேட்கை!

பாதுகாப்பு தேவைபற்றி மாஸ்லோ கூறினாரே அதையும் பாரதி விட்டுவைக்கவில்லை. பாதுகாப்புத் தேவை. யார் அதை தருவது? உலகத்து நாயகியிடம் சரணபுகுந்த பாரதி அவளையே தன்னைக் காவல் செய்து தன்னைப் பாதுகாக்க வேண்டுகிறான். அவன் கனவு மெய்த்திட வேணுமென விரும்பி அழைக்கிறான்.

அந்த காட்டு வெளியினிலே அம்மா நின்றன்
காவலுற வேண்டும்.

என்று பாடினான்.

“வாடிய பயிர்கண்டு வாடினேன்” என்றார் வள்ளலார். அதற்கீடான கரிசனத்துடன் ஒரு சீரிய இலட்சிய உலகத்தைப் படைக்கும் வேள்வியில் எம் குழந்தைகளை, அலர் அகவையினரை, இளைஞர்களைத் தயார்ப்படுத்தவேண்டிய முறைமைகள் பற்றி உரத்துச் சிந்திக்கிறார் இந்நல்லாசான். சிறார்களைச் செவ்வனே தயாரிப்பதற்கு முதலில் பெற்றோரை அறிவூட்ட வேண்டியதன் அவசியத்தினை அவர் உணர்ந்ததின் விளைவே இந்நூல். திரு. பொ. கனகசபாபதி அவர்கள் இனிமையான ஒரு குடும்பத்தின் தலைவன், உலகறிந்த கல்வியாளன், பேராசான், இருந்தும் ஒரு நல்ல நண்பனிடம் தான் உரையாடுவதைப்போல போதனையின் சாயைகள் எதுவுமில்லாமல் அழகுமொழியில் எம் குழந்தைகளை நாம் எப்படி அணுக வேண்டும், பழகவேண்டும், புரியவேண்டும், ஊடாட வேண்டும், அவர்கள் பிரச்சினைக்கான தீர்வுகளில் எம் வகிபாகமென்ன என்பதை எம்மோடு இந்நூலூடாக வெகு எளிமையாகவும் சிநேகபாவத்துடனும் பேசுகிறார்.

மனம், புரிதல், தூக்கம், கனவு, நனவு, அச்சம், கற்றல், பெற்றோரியம், தொடர்பாடல், பிரச்சினைகள், அவைமீதான அறிவியல் ரீதியிலான அணுகுமுறைகள், இலக்கியம் - கவிதைகளிலிருந்து எடுத்துக்காட்டுக்களென ஒவ்வொரு அத்தியாயமும் கவிதைச் சுவையுடன் விரிகின்றன.

எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இத்தகைய முயற்சிகள் விஞ்சிக் கிடப்பினும் தமிழில் இவை அரிதென்பதால் காலமுணர்ந்து அவர் ஆற்றியுள்ள இச்செவ்விய பணியினால் முழுத்தமிழுலகமும் பயன் பெறுவதோடு என்றும் அதை விதக்கவும் செய்யும்

பொ. கருணாகரமூர்த்தி

Design & Print
EC Ways
Phone: 5673483